# வணிக நாதம்

2000

ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை
சுன்னாகம்

# வணிக நாதம்
# Vanika Naatham

## 1999 – 2000




## நாதம் - 6


கலை வர்த்தக மாணவர் மன்றம்
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை – சுன்னாகம்

# கல்லூரிக் கீதம்

போற்றிசெய் வோமெங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி (போற்றி)

ஸ்கந்தவ ரோதய எங்கள் கல்லூரி
சந்ததமும் புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே (போற்றி)

ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரு மிங்கே (போற்றி)

பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்
உறவென்றும் நீயே உண்மையொ டுனக்காய்
உழைத்திடு வோமென்றும் நாமே (போற்றி)




எந்தை யெனத்தகு கந்தைய வள்ளலின்
சிந்தையி லெழுந்த கல்லூரி
செந்தண்மை மருத்துவன் சுப்பிர மணியனின்
சேவையில் உயர்ந்த கல்லூரி!

சேவையில் உயர்ந்த கல்லூரி!
சேவையில் உயர்ந்த கல்லூரி!
சேவையில் உயர்ந்த கல்லூரி!

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வளமலிந் தோங்கியே என்றும்
வாழ்க! வாழ்க! வாழ்க!
வளரிள மதியெனவே
வாழிய எங்கள் கல்லூரி.

# சமர்ப்பணம்



ஸ்கந்தாவில் சேவைக்காலம் 1954-1976

பல்லாயிரம் மாணவர் வாழ்வில்
ஒளியேற்றிய தீபம்
ஆசிரியர்

அமரர் V.T.கந்தசாமி BSc Dip.in.Ed
(V.T.K)

**அவர்கள் திருவடிக்கு இம்மலர் சமர்ப்பணம்**


# ஆசிச்செய்தி

கல்வி மேம்பாடும், பண்பாட்டுச் சிறப்பும், தெய்வ நம்பிக்கையும் ஒருசேர வளர்க்கப்படும் சிறப்பு வாய்ந்த கல்லூரிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கல்லூரியில் அதிபரின் ஆளுமையும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் பாராட்டுதற்குரியவை. ஆண்டுதோறும் கலைப்பிரிவிலும் வர்த்தகப் பிரிவிலும் மாணவர்கள் பலர் பல்கலைக்கழகத்தில் புகுந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். ஆறாவது தடவையாக 'வணிக நாதம்' என்ற மலர் வெளியிடப்படுவது குறித்து நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். சில சந்தர்ப்பங்களில் இவ்வெளியீடுகளில் பங்குபற்றி சிறப்புரை ஆற்றிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கின்றது. தரமான விடயங்களையும் மாணவர்களுக்குப் பயன்படத்தக்கதான கருத்துக்களையும் இம்மலர் தாங்கி வருவது கண்கூடு. எனவே இந்த ஆண்டும் இவ்வெளியீட்டு நிகழ்ச்சியிலே ஆசிச்செய்தி வழங்கும் வாய்ப்பு எனக்குத் தரப்பட்டுள்ளது. அதிபர், அவர்களையும் வணிக மன்றத்தினரையும் அத்துறை சார்ந்த மாணவர்களையும் வாழ்த்தி ஆசிகூறுவதோடு பல்லாண்டு பல்லாண்டு காலம் இம்முயற்சி உயர்வடைய வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி
தலைவர்

Our Principal



**K. Sivaji**

B. A. ( Hons ) Dip-in-Edu

Spl. Trd. ( English )

*Principal's*

# Message of Felicitation

It is indeed a great pleasure to send a message to our college Magazine " Vanikanatham " published by the Arts and Commerce Union. I have noted with interest and with a sense of satisfaction the contribution of the students and teachers in making this publication a success. Efforts of this nature will definitely help the students to develop their personality. The teachers who guided the students to publish this Magazine are a beacon light in the firmament of the education of our children I record with gratitude that the porgress and advancement of the college over the years have left impressionable imprints at Skanda.

I wish the Arts and Commerce Union of Skandavarodaya colloege every success in all its endeavours. May it grow from strength to strength.

**K. Sivaji**
B. A (Hons) Dip-in-Edu.
Sp. Trd. (English)

Skandavarodaya College,
Kndarodai,
Chunnakam.

# வாழ்த்துச் செய்தி

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கலை வர்த்தக மாணவர் மன்றம் ''வணிகநாதம்'' எனும் ஐந்தாவது மலரை 1997/1998இல் வெளியிட்டது. 2001இல் ஆறாவது மலர் வெளியிடும் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வரலாற்று பாரம்பரியங்கள் பலவற்றை இக்கல்லூரி கொண்டுள்ளது. சற்று முன்னோக்கிய காலங்களில் கலை வர்த்தகத்துறைகளில் மட்டுமல்லாமல் விஞ்ஞானத் துறையிலும் அற்புதமான சாதனைகள் பலவற்றை ஈட்டி கல்வி மேம்பாட்டுத் துறையில் பலரையும் அதிசயிக்க வைத்தது. இன்று கலை, வர்த்தகத் துறைகளில் தனது அடிச்சுவடுகளை மறக்க முடியாத அளவிற்கு தடம்பதித்து வரும் அதேவேளை எதிர்காலத்தில் விஞ்ஞானத் துறையிலும் கடந்தகால வரலாற்றுப் பெருமையை மீண்டும் நிலை நிறுத்தும் என்பதில் அசையாத நம்பிக்கை எனக்குண்டு. இவ் நற்பணிக்கு துணைபோகும் ஆசிரிய சிற்பிகளையும் மாணவ செல்வங்களையும் பாராட்டுவதில் பேருவகை அடைகின்றேன்.

இக் கல்லூரியில் கலை வர்த்தக மாணவர் மன்றம் இச் சஞ்சிகையை வெளியீடு செய்வதன் மூலம் ஆளுமை அறிவு வளர்ச்சியில் ஒரு ஸ்திர நிலையை அடைகின்றது. இவ் வருடத்திலும் எதிர்காலத்திலும் பெருகி வரும் தொழில் நுட்ப மாற்றங்களுக்கேற்ப ஆக்கங்களும் இச் சஞ்சிகையில் இடம்பெற வேண்டும். தூரநோக்குக்கொண்ட இக் கல்லூரியின் கல்வி மலர் உட்பட்ட அனைத்து துறை சார்ந்த கல்வி மேம்பாட்டிற்கும் உழைக்கின்ற அதிபர் உட்பட்ட அனைத்து பெரும் மக்களையும் வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.

**வீ. இராசையா,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.



## எமது மன்றப் பொறுப்பாசிரியரின்

# வாழ்த்துச் செய்தி

பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை வாழ்வித்த உன்னத கல்விச்சாலையே ஸ்கந்தவரோதயக்கல்லூரி அகவை நூற்றுஎழு நிறைவு பெற்ற நிலையில் கல்லூரி தலைநிமிர்ந்து நிற்கின்றது. இக்கல்லூரியின் வரலாற்றுச் சாதனைகளை ஈழத்துக்கல்வி அபிவிருத்தி பற்றி ஆராய்கின்றவர்கள் போற்றத் தவறுவதில்லை. அன்று கையெழுத்தே போடத்தெரியாத பெற்றோர்களின் பிள்ளைகளை அரவணைத்து அறிவூட்டி இந்நாட்டின் இன்றைய உயர் கல்விமான்கள் வரிசையில் பலரை இருத்திய பெருமை கல்லூரியின் வியத்தகு பெருமையாகக் கொள்ளப்படுகிறது.

பட்டினத்தில் கல்லூரிகள் பிரகாசித்துக் கொண்டிருந்த வேளையில் சிறிய கிராமமாகிய கந்தரோடையில் பல ஊரவரும் படையெடுத்து வந்து அறிவொளி பெறுவதற்குக் கர்த்தாக்களாக விளங்கிய ஸ்தாபகரை, அதிபர்களை, நல்லாசிரியர்களை இன்றும் நினைவு கூர்ந்து நாம் வணங்குகின்றோம். தமிழினத்தின் தலையாய சொத்து கல்வி கல்விச்சொத்தை கண்ணிமை போலக் காக்க வேண்டுமென எம் முன்னோர் பேணினர், காத்தனர். அவர்கள் வழியில் இன்றைய எமது சிறார்களின் கல்வியில் கருணையோடும், கடமையுணர்வோடும் அக்கறை எடுக்கத் தலைப்பட வேண்டும். பல மாணவர்கள் இன்று பாடசாலையில் இடைவிலகி உயர்கல்வியில் அக்கறை கொள்ளாது தொழில் தேடி மேலை நாடுகளை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை யாம் அறிவோம். எமது இளைய சமுதாயம் கல்வியை உயர்ந்த இலட்சியத்தோடு நோக்கிக் கற்கின்ற தன்மை குறைந்து கொண்டு போகிறது. இந்நிலை மாறவேண்டும். குறிக்கோளை நோக்கி மாணவர்களது கல்வியை மேம்படுத்த வேண்டியது கல்விச் சமுகத்தின் கடமையாகும். இன்று உயர்கல்வி கற்கும் எம் மாணவர்கள் பலரிடம் தாம் வாழ்ந்த மண்ணை வளப்படுத்துகின்ற பிரதேசப் பற்று அருகி வருவது மிகுந்த வேதனையைத் தருகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கற்ற மாணவர்கள் யாழ் மண்ணில் சேவையாற்ற மறுக்கின்றனர். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களை மேடைக்கு அழைக்கின்ற போது அறுபது வீதமானவர்கள் சமுகம் தருவதில்லை. காரணம், பட்டமளிப்பு விழாவிற்கு இடையிலேயே இம் மாணவர்கள் இத்தேசத்தை விட்டுப் போய்

வீடுகிறார்கள். முன்பு கல்லூரிகளைக் கண்களாகப் போற்றியவர்கள் தமது உயர் பதவி உயர்வுகளைத் தட்டிக்கழித்து கல்வித்தொண்டினை ஆற்றுவதில் அக்கறையெடுத்தனர். யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியினை உயர்வுபெற உருவாக்கிய சிற்பிகளில் ஒரு அதிபர், பொறியியலாளர், அப்பெருந்தகை எம் மண்ணின் கல்விப் பணிக்காக தனது தனிப்பட்ட உயர்வுகளைக் கைவிட்டார். இன்று எம்மவர்கள் இவற்றை சிந்திக்க வேண்டும். உயர் கல்வியில் மிகுந்த அக்கறையுடைய எம்மாணவர்கள் தென்பகுதியில் பொருளீட்டும் அவாவில் தம் கல்வியை மாற்றித்தொடர் கின்றனர். குறிப்பாக பொறியியல் துறையில் கற்கும் மாணவன் சம காலத்தில் கணக்கியல் துறையில் கற்கின்றான். இவனது குறிக்கோள் கூடிய வருவாயை நோக்கியதாகவுள்ளது. தான் சார்ந்த துறையில் நிபுணத்துவம் பெற்று புதிய கண்டுபிடிப்பை கண்டுகொள்ள முயல வேண்டும் என்ற ஆதங்கம் இத்தகைய மாணவர்களிடத்தில் இல்லை. விஞ்ஞானி ஆதர்சி கிளாக் போன்ற நிலையில் ஏன் எமது மாணவர் வரமுடியாது? காலஞ்சென்ற பேராசிரியர் துரைராஜா (முன்னாள் உபவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் தான் சார்ந்த துறை யில் பொறியியல் பீடத்தில் புதிய தேற்றம் ஒன்றை நிறுவியமை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். எனவே தேசப்பற்று, மொழிப்பற்று, நாளைய சமுதாயம் பற்றிய விழிப்புணர்வு மிக்க ஓர் கல்விச் சமுதா யத்தைக் கட்டி வளர்க்க வேண்டியது இன்றைய கல்விச் சமுதாயத் தின் பிரதான கடமையாகும். அவ்வகையில் ஆசிரியர்களாகிய நாம் மாணவர்களிடம் உயர் கல்வி இலட்சியத்தையும், எமது வருங்கால சந்ததியின் அபிமானங்களையும் நோக்கிய குறிக்கோளை மாணவர் களிடம் விதைக்க வேண்டும். உணர்வு பூர்வமாக எம்மவரின் கல்வியை வளர்க்க கல்விச்சமூகம் தயாராக வேண்டும். எமது பாரம்பரியங்க ளைப் பற்றி பல பேராசிரியர்கள், கல்விமான்கள் ஆராய்ச்சிக் கட்டு ரைகளையும், புத்தகங்களையும் எழுதுகிறார்களேயொழிய அவற்றைப் பேணுவதற்காக செயல்ரீதியாக முயற்சி எதுவும் செய்யவில்லை. பாரம்பரிய நல்லூர் மன்னனின் சங்கிலித்தோப்பு பற்றி தமது நூல் களிலே, ஆய்வுகளிலே விதந்துரைத்த எவரும் அதைப் பேணத்தலைப் படவில்லை. எனவே எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் தம்மாலான பணி களை நிதர்சனமாக ஆற்ற முற்பட வேண்டும்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி கலைவர்த்தக மாணவர் மன்றம் ஒவ் வொரு ஆண்டும் தனது குறிக்கோளை நோக்கிய பணியில் விருத்தி கண்டு வருகிறது. அவ்வகையில் இவ்வணிகநாத மலரை புனிதமாக மலர வைப்பதற்கு அயராது உழைத்த எம் மாணவச் செல்வங்களுக்கு நன்றியும் வாழ்த்தும் கூறி நிறைவு செய்கின்றேன்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

செஞ்சொற்செல்வர்
**ஆறு. திருமுருகன்** B. A. Dip - in - Ed.
ஆசிரியர்

## இதழாசிரியரின் சிந்தனையிலிருந்து . . .

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உயர் தர வகுப்பு மாணவர்களாகியநாம் ஒன்று கூடி கலைவர்த்தக மன்றத்தை இனிதே நடாத்தி வருகின்றோம் எம் மன்றத்தில் புத்தாயிரமாண்டுப் படைப்பான வணிகநாத மலரை உங்களிடம் சமர்ப்பிப்பதில் பத்திரா திபர் என்ற வகையில் பேருவகைகொள்கிறேன்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன என்பது சங்கமரபு. இதற்கமைய புத்தாயிரம் ஆண்டில் எம் இளைய சமுதாயம் புதுமை படைக்க முயலவேண்டும். இன்று எமது அறிவுக் கணக்கினைத் திறந்துவைக்கின்ற ஆசிரியர்களின் வழிகாட்டலில் இம் மலரினை யாம் உருவாக்கி உள்ளோம். இம்மலரின் பிரசவத்தால் நாம் பல அனுபவங் களைப் பெற்றுக் கொண்டோம். பாடப்புத்தகம் மட்டும் கல்வி அல்ல என்பதனையும் செயல்மூலம் கற்பது உயர்ந்த அனுபவ ஞானத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை கலைவர்த்தக களம் எமக்கு கற்றுத்தந்துள் ளது. எமது கல்லூரியில் கலை வர்த்தக மன்றம் ஆரம்பித்து 40 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. இம்மன்றத்தை வளர்த்த பொறுப்பாசிரியர் கள் இம்மன்றத்தைத் அணிசெய்த முன்னைய கால மாணவர்கள் என் றும் எமது நன்றிக்குரியவர்கள்.

இன்று உலகம் வியத்தகு தொழிநுட்பங்களால் புதுமை படைத்துக் கொண்டிருக்கின்றது, எமது நாடு என்றும் விடிவின்றி இருக்கின்றது உலக வசதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமது நாட்டில் புதிய நூற்றாண்டுக்குரிய வளர்ச்சி மிகவும் மெதுவாகவே இருக்கின்றது கலைத்துறை என்றால் என்ன வர்த்தகத்துறை என்றாலென்ன வெறும் குறிப்புக்களைக் கற்று பத்திரப்பட்டம் வாங்கும் பட்டதாரிச் சமுகமாகவே நாம் தொடர்ந்து கொண்டிருக்கிறோம் இந்நிலை மாறவேண்டும் எமது நாட்டில் நிம்மதி கிடைக்க வேண்டும் ஒவ்வொரு பிரஜைகளும் பூரண சுதந்திரத்தோடு வாழும் வழி விரைவில் உருவாகவேண்டும் உலக அறி வியலின் தரத்திற்குரியதாக எமது கல்விமுறை மாற்றம் பெறவேண் டும். இன்று வணிகத்துறை மாணவன் இன்ரனெற் பற்றியும், செல்ரெல், ஈமெயில் பற்றியும், கண்ணால் காணாமலே குறிப்பில் கற்று சித்தி பெறுகிறான் இது விபரீதமானது மேலை நாடுகளில் மட்டுமல்ல மேல் மாகாணத்திலேயே மேற்குறித்தவற்றின் பிரயோகத்தை சிறியவர்களே அனுபவித்துக் கொண்டிருக்கும்போது நாம் கண்ணால்காண இயலாத நிலையில் இருப்பது வேதனைக்குரியது கற்றறிந்த சமுகம் எதிர் காலத்

தில் இதற்குப் பரிகாரம் காண முயல வேண்டும். இன்று கலைத்துறையில் கற்கும் மாணவர்க்கும் வணிகத்துறையில் கற்கும் மாணவர்க்கும் பாடசாலைகளில் ஆய்வகங்கள் திறக்கப்படவில்லை. விஞ்ஞான ஆய்வு கூடங்கள் பாடசாலைகளில் உள்ளது போல் எதிர்காலத்தில் கலைவர்த்தகத்துறை மாணவர்களுக்கான ஆய்வகங்கள் உருவாக்கப்பட வேண்டும் அவ் ஆய்வகங்களில் கலை வர்த்தகத்துறை சார்ந்த கருவிகள் அமைதல் வேண்டும். இதனை கல்விச் சமுகம் கருத்தில்கொள்ள வேண்டுமென கலை வர்த்தகத்துறை மாணவர் சார்பில் மாணவர்களின் ஆதங்கத்தை இத் தருணத்தில் வெளிப்படுத்துகிறேன்.

எமது வணிகநாத மலருக்கு ஆசி உரைகள் வாழ்த்துரைகள் தந்த பெரியவர்களுக்கும் கட்டுரை தந்தவர்களுக்கும் எமக்கு வழிகாட்டிய எம் கல்லூரி முதல்வர் திரு. கு. சிவாஜி அவர்கட்கும் கலைவர்த்தக மன்றத்தின் பொறுப்பாசிரியர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கட்கும், உப பொறுப்பாசிரியர்கள் திரு. வ. நந்தீஸ்வரன், திருமதி த. திருலிங்கம் அவர்களுக்கும் மன்றத்தின் சார்பில் நன்றியைக் கூறி எனது கருத்தினை நிறைவு செய்கிறேன்,

அ. பஸ்ரியான்
பத்திராதிபர் 1999/2000
ரா. ரமேஸ்குமரன்

# உடுவிற் கோட்ட கல்விப் பணிப்பாளரின்

# ஆசிச்செய்தி



நூற்றாண்டுக்கு மேலாகக் கல்வித்துறையிலும் விளையாட்டுப் போன்ற ஏனைய பல துறைகளிலும் சிறப்புற்றோங்கி நிற்கும் கந்தரோடை ஸ்கந்தவரோயக் கல்லூரி வணிகமாணவர் மன்றம் தம் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் ஆக்கங்களையும், அறிஞர்களின் படைப்புக்களையும் தாங்கி ஆண்டுதோறும் தொடர்ந்து வெளியிட்டு வரும் ''வணிகநாதம்'' சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாண்டு போலத் தொடர்ந்து எதிர்காலத்தில் இம்மலர் வாடாமலராகப் பல சிறப்பு அம்சங்களுடன் பொலிவுற்று அறிவொளி பரப்பி வெளிவர எனது நல்லாசிகள் பல. புதிய நூற்றாண்டில் மக்களின் நாட்டத்தைப் பெருமளவில் பெற்றுள்ள வணிகத்துறை இணையற்ற வளர்ச்சி பெற உதவும் நோக்கைக் கொண்ட வணிகமன்றத்தினர், அறிவுப் பூக்கள் பலகொண்ட இம்மலர்க்கொத்தினைச் சிறப்பாக வெளியிடுவது கண்டு மகிழாத உள்ளங்கள் இருக்கமுடியாது. இம்மகிழ்வில் யானும் கலந்துகொண்டு உளங்கனிந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிக மன்றத்தினை வாழ்த்துவதுடன் அதற்கு உறுதுணையாக இருந்து வழிநடத்தும் அதிபர், பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

கந்தரோடை,<br>
சுன்னாகம்.<br>
2001-05-31

**அ. நற்பரானந்தன்**<br>
உதவிக்கல்விப்பணிப்பாளர்<br>
கோட்டக்கல்வி அலுவலகம்,<br>
உடுவில் - மருதனார்மடம்.

## 1999ஆம் ஆண்டு க. பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகம் புகும் மாணவர்கள்

1. ந. ரமேஸ் — விவசாய விஞ்ஞானம்
2. கு. யாழினி — முகாமைத்துவம் I
3. கு. பிரபாகரி — முகாமைத்துவம் I
4. வி. பாமினி — வர்த்தகம்
5. பா. செந்தில்குமரன் — வர்த்தகம்
6. வ. கலைவாணி — முகாமைத்துவம் II
7. கு. பரணீகரன் — கலை
8. ம. மதுரா — கலை
9. இ. ரமணப்பிரியா — கலை
10. பொ. சந்திரசேகரம் — கலை
11. ம. பகீரதன் — கலை
12. ம. திலக்ஸி — கலை
13. ச. ரஜீஸ்கண்ணா — கலை
14. கா. கவிதா — கலை
15. தி. வரதவாணி — கலை

## கல்விக் கல்லூரிக்கு அனுமதி பெற்ற மாணவர்கள்

1. சி. சதீஸ்
2. லோ. மதனி
3. இ. கிருஷ்ணமேனன்
4. க. செந்தில்குமரன்
5. புஸ்பலதா
6. ப. ரேணுகா
7. இ. குயிலினி
8. மா. கஜந்தி
9. நா. தயாளினி

## யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா நெறிக்கும் தெரிவான மாணவர்கள்

1. செ. ஜொனிற்றன்
2. மு. குமாரரூபன்
3. சயந்தரூபன்
4. ஜெ. ஜெயகாந்தன்
5. சுரேஷ்மோகன்
6. சசிகரன்

# 2000ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள்

## 1. கணிதம்

சி. வித்தியகுமார் 2A C

## 2. விஞ்ஞானம்

ந. ரமேஸ் A 2B C

## 3. வர்த்தகம்

1. க. சசிலேகா 2A 2B
2. பா. பாலச்சந்திரன் A 3B
3. சி. கமலராஜ் A 2B C
4. இ. றொபின்ஜெயரூபன் 4B
5. லோ. றமா A B C
6. த. தனுசா A B C

## 4. கலை

1. ஜெ. ஜெயராஜ் 2A 2B
2. அ. பஸ்ரியன் A 2B C
3. சா. நெடுஞ்சேரலாதன் A 3B
4. அ. பிரதீபா 2A 2B
5. மோ. லதா 2A 2B
6. ப. சாமினி A 3B
7. ச. குணசீலன் A 2B
8. றா. ரமேஸ்குமார் 2A B
9. வி. ஸ்கந்தராஜ் 3B
10. செ. திருக்குமரன் 2A B
11. இ. குவல்ரீனா 2A B
12. த. பவித்திரா 2A C
13. இ. சியாமளா 2A B
14. வி. சுவின்தா A B C


# பொருளடக்கம்


| | |
|---|---|
| இணைய வழிச்சேவைகள் ... ... ... | 1 |
| அரசநிதி தொடர்பான சில சமன்பாடுகள் ... ... | 4 |
| அரை நூற்றாண்டு கண்ட ஐ. நா; சாதனைகளும், சோதனைகளும் ... ... | 7 |
| தனியார் மயமாக்கல் — ஒரு நோக்கு ... ... | 11 |
| ஊக்கப்படுத்தல் ... ... ... | 15 |
| கைத்தொழில் பிணக்கு ... ... ... | 18 |
| ஈழத்தமிழர் இசை வளர்ச்சி ... ... ... | 21 |
| கல்வியும் மனித ஆளுமையும் ... ... ... (நினைவுப் பேருரை) | 25 |
| இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் ஆரம்பயுகம்... ... ... | 31 |
| திறைசேரி உண்டியல் சந்தை ... ... ... | 33 |
| சந்தைப் பொருளாதாரமும் அரசாங்கத்தின் தலையீடும் ... ... | 37 |
| உலகின் பொறியியற் கைத்தொழிலின் வளர்ச்சி ... ... | 43 |
| லயஞானகுபேரபூபதி ... ... ... | 49 |
| தமிழக வரலாற்றுக் காலங்களில் இசைக்கலை ... .. | 54 |
| "இலங்கைத் தமிழ் அரங்கு" ஒரு பருவரை ... ... | 59 |
| இரு சிறுகதைகள் — ஒரு நோக்கு ... ... | 64 |
| இலக்கியக் கல்வியின் பயன் ... ... ... | 73 |
| சைவசித்தாந்த அத்துவிதக் கோட்பாடு ... ... | 76 |
| திறைப் பதிவும் திறையில் பதிவும் | 78 |
| பொருமானத் தெய்வத் திணைக்களம் | 86 |


# 1999



தலைவர்:- ஜே.ஞானகரன்



செயலாளர்:- இ. பரணிகரன்




பொருளாளர்:- இ. எட்வின் நிரோஜன்

# 2000



தலைவர்:- அ.நிஷாந்தன்



செயலாளர்:- ஹரிப்பிரசாத்



பொருளாளர்:- வி. ஸ்கந்தராஜ்



நிற்பவர்கள்:
இ. பஸ்ரியன் (பத்திராதிபர்), செ. ஜெறோம், க. தயகோபி,சி. ஜெயநந்தன், இ.ரமேஸ்
தி. துஷந்தன், . றதீஸ்கண்ணா, சி.கமல்ராஜ், பொ. மயூரன் நா. சுஜிவறூபன், அ. றேணுகா,
இ. சியாமளா, க. கமலினி

இருப்பவர்கள்
திரு. V.நந்தீஸ்வரன் (மன்றப்பொறுப்பாசிரியர்), திரு.R.ஜோர்ஜ் (பகுதித்தலைவர்) ,
திரு.A.திருமுருகன் (மன்றப் பொறுப்பாசிரியர்) திரு.ஜே.ஞானகரன், (மன்றத் தலைவர்),
திரு.K. சிவாஜி (அதிபர்,மன்றக் காப்பாளர்)இ.பரணிகரன் (மன்றச் செயலாளர்) ,
திருமதி.V. இலட்சுமணன்(உபஅதிபர்) , திருமதி.T. திருலிங்கம் (மன்றப் பொறுப்பாசிரியர்)



கலைப்பிரிவு மாணவர்கள் 2000



2000 கலை வர்த்தக மாணவர் மன்றம்



2000 கலை வர்த்தக மாணவர் மன்றம்



வர்த்தகப் பிரிவு 2000

# ஸ்கந்தா பல்கலைக்கழக மாணவர் சங்கம் — அறிமுகம்

*யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்விகற்று நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது இச்சங்கம். இச்சங்கம் கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாட்டிலும் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களின் கல்விசெயற்பாட்டிற்கு உதவி புரிதலும் கருத்தரங்குகள் போன்ற செயற்பாடுகளை பிரதான இலக்காக கொண்டு செயற்படுகின்றது. இதன் நிர்வாக சபை உறுப்பினர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கல்லூரியில் அதிபர் திரு. க. சிவாஜி அவர்கள் தலைமையில் தெரிவு செய்யப்பட்டது.*

*தலைவர் :* **திரு. அ. செல்வேன்றடாஸ்**
*செயலாளர் :* **திரு. மு. தவேந்திரன்**
*பொருளாளர் :* **திரு. பா. கமலதாஸன்**
*உபதலைவர் :* **திரு. தி. மங்கலேஸ்வரன்**

***நிர்வாகசபை உறுப்பினர்கள் :***

**திரு. சி. சிவனைமந்தன்**
**செல்வி என். சிவரூபி**
**திரு. சி. கஜன்**
**திரு. ம. ரவிபாலா**
**செல்வி எஸ். சிவகாந்தினி**

# இணைய வழிச்சேவைகள்

சி. மகேந்திரன்
ஆசிரியர்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

குரலால் ஒலியெழுப்பி அதன் மூலம் தம்மை இனம் காட்டிச் செய்திகளைப் பரிமாறியும், பண்டமாற்று மூலம் தம் தேவைகளை நிறைவு செய்தும் கொண்ட கற்கால யுகத்தினின்றும்; நத்தைவேகத் தபால் சேவை மூலம் எழுத்துருவில் செய்திகளைப் பரிமாறியும் தமது தேவைகள் எதுவெனத் தெரியாது பல மைல்கள் பயணித்துப் பல மணித்துளிகளை விரயமாக்கித் தெருவோர அங்காடிகளில் காட்சிப் படுத்திய பொருட்களில் சிலவற்றைக் கொள்வனவு செய்த கைத்தொழில் யுகத்தினின்றும் முற்றாக விடுபட்டு இன்றைய மனிதன் கணினியுகத்தில் காலடி வைத்துள்ளான்.

கணினிகள் உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், கணினிகள் சகல மொழிகளையும் உணரும் சகலகலா விற்பன்னராகவும், வானொலியாக, தொலைக்காட்சியாக தொலைபேசியாக, தொலை நகலாக, தபாலகமாக, நவீன சந்தையாகவும் விளங்குவதுடன், காதல்உள்ளங்களின் தூதுவனாகவும் விளங்குகின்றது.

இலத்திரனியல் சாதனங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்த நவீன உலகானது, முன்னைய யுகங்களை விட மிக வேகமாகத் தன் பயணத்தைத் தொடர்கின்றது. கணினித் திரையில் (monitor) முழு உலகையே கொண்டு வரும் இணையங்கள் (Internet) ஊடாக மனிதன் இன்று தன் தேவைகளை நிறைவு செய்தும் சேவைகளைப் பெற்றுக் கொண்டும் துரிதமாக இயங்கிக் கொண்டிருக்கின்றான்.

கணினித் துறையில் உலகம் உச்ச வளர்ச்சியினை அடைந்து வரும் இவ்வேளையில் இலங்கையில் எம்மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கணினித்துறையின் வளர்ச்சி முன்னேற்ற கரமாக அமைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குடா நாட்டு மாணவர்கள் புராணக் கதைகளைக் கேட்டு, மனனம் செய்து ஒப்புவிப்பது போன்று அறிவியல் துறைசார் எண்ணக் கருக்களை மனனம் செய்து பொதுப் பரீட்சைகளில் ஒப்புவித்து ஒரு சில வெற்றிகளையும் பெற்று வருகின்றனர். கண்களால் பார்த்து ஞாபகத்திலிருத்தியும், கைகளால் தொட்டு அனுபவித்தும் அந்த அனுபவங்களூடாக அனுபவங்களைப் பெற்று வளர்ச்சிகாண வேண்டிய மாணவச் சமுதாயம் பாதுகாப்பு எனும் புறக்காரணியால் மறுக்கப்பட்டு, வாசித்து மனனம் செய்து ஒப்புவிக்கும் நிலை தற்போதும் காணப்படுவது துர் அதிஸ்டமே.

தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் கழிவுகள் கொட்டப்படும் இடமாக இன்று எம் நாடு இருப்பதும், இங்கு கொட்டப்படும் கழிவுகள் எமக்குப் புதியனவையாக இருப்பதனால் அதன் மூலம் அடிப்படை விடயங்களை ஓரளவு புரிந்தும் நவீன யுகத்தின் தேவைகள் எவையென ஓரளவு தெரிந்தும் வருகின்றோம்.

கணினித் துறையின் வளர்ச்சிக்கு, இணையம் உறுதுணையாக விருப்பதுடன், தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் இவ்விரண்டினதும் பங்களிப்பும் முக்கியமானதாக அமைந்துள்ளது. இணையத்தில் புகாத துறைகளே இல்லையெனலாம். தகவல் தொடர்பு முதல் வியாபாரம் வரை எல்லாவற்றையும் இணையம் இன்று ஆக்கிரமித்துள்ளது.

**இ - அஞ்சல் ( E , Mail ) :**

இலத்திரனியல் அஞ்சல் ( Electronic Mail ) இன்று உலகத் தகவல் பரிமாற்றத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இத் தகவல் தொழில்நுட்பத்துறையின் அபரிமிதமான வளர்ச்சியே இ - அஞ்சல் என்று அழைக்கப்படும் துரித மின் அஞ்சல் சேவையாகும். இன்று இச் சேவையில் எல்லா மக்களும் வசியப்பட்டு வருகின்றனர். உலகில் இ - அஞ்சல் முகவரி இல்லாதவர்கள் கௌரவக் குறைவாக நினைக்கப்படும் அளவிற்கு இச் சேவை வளர்ச்சியடைந்துள்ளது. உலகின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு அஞ்சல் தொடர்புகளை உடன் மேற்கொள்ள முடிவதுடன் இவை பல நவீன வசதிகளையும் பெற்று வருகின்றன. தொலைநகல் ( Fax ) சேவையை விட மிகவேகமாகக் கணினியில் பதிவாகியுள்ள கடிதங்கள், செய்திகள், பல பக்கங்களில மைந்த புத்தகங்கள் போன்றவற்றை உடனுக்குடன் விரும்பிய இடத்திற்கு விரும்பியவர்களுக்கு ஒரு சில விநாடிகளில் அனுப்பக்கூடியதாக இ - அஞ்சல் சேவையுள்ளது.

கணினிப் பாவனையாளர்கள் தமது பெயரிலோ அல்லது தம் நிறுவனத்தின் பெயரிலோ இ - அஞ்சல் முகவரிகளைப் பெற்றுக் கொள்ளலாம். சொந்தமாகக் கணினிகளைப் பயன்படுத்துவோர், கணினித் தொகுதியுடன் மோடம் ( Modem ) தொலைபேசி இணைப்பு உள்ளவர்கள் இ-அஞ்சல் முகவரியைப் பெற்றுத் தங்கள் தொடர்புகளை மேற்கொள்ளலாம். சொந்மாகக் கணினித் தொகுதிகளைக் கொண்டிராதவர்களும் இன்று இ - அஞ்சல் முகவரியைப் பெற்றுத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். உதாரணமாக சொந்தமாகத் தொலைபேசி வசதி இல்லாதவர்கள் எப்படித் தெருவோரத் தொலைத்தொடர்பு நிலையங்களை நாடி தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றார்களோ அவ்வாறு சொந்தமாகக் கணினி வசதி அற்றவர்களும் இ - அஞ்சல் முகவரியைப் பெற்று தெருவோர இணையத் தகவல் மையங்களை ( Internet Cafe )நாடித் தங்கள் இ - அஞ்சல்களை அனுப்பவோ அல்லது பெற்றுக்கொள்ளவோ முடியும். ஒரு பாவனையாளரின் இ - அஞ்சல் முகவரி பின்வருமாறு அமையும்.

**User Name a hotmail Com**

பாவனையாளரது பெயர் அல்லது நிறுவனத்தின் பெயர் முன்னேயும், இணையத் தளங்களை அமைத்துள்ள நிறுவனங்களின் பெயர் பின்னேயும் அமையும். இன்று தொலைபேசிக் கட்டணங்களைவிட எத்தனையோ மடங்கு குறைவான விலையில் இ - அஞ்சல் வசதி கிடைப்பதனால் பெரும்பாலான மக்கள் இதனை நாடுன்றனர். பொதுவாகப் பல இணையத் தளங்கள் இ - அஞ்சல் வசதிகளை இலவசமாக வழங்கி வருகின்றன. இ - அஞ்சல் முறையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள விரும்பும் அனுப்புநரும், பெறுநரும் கட்டாயம் தத்தமது இ - அஞ்சல் முகவரிகளைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். இ - அஞ்சலை அனுப்பும் போதும், பெறும் போதும் கணினி வைரசுக்கள் புகுந்துவிடும் அபாயம் அதிகம் இருப்பதாக அறிவுறுத்தப்படுகின்றது. கணினி வைரசுக்கள் கணினியில் சேமித்து வைக்கப்பட்ட கோப்புக்களை ( Files ) அழித்துவிடும் அபாயகரமானவை.

**குரல் இ - அஞ்சல் : ( Voice E - Mail )**

கணினி உலகில் எழுத்துருக்களில் அமைந்த செய்திகளை குறுகிய விநாடிகளில் பெறுநருக்கு அனுப்பும் இ - அஞ்சல் முறை செல்வாக்குச் செலுத்தி வரும் வேளையில் புதிய அறிமுகமான குரல் அஞ்சல் ஆனது இன்னொரு தகவல் தொடர்புப் புரட்சியே யாகும். இ - அஞ்சலில் எழுத்துருக்களைப் பயன்படுத்துவதனால் உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியாத சந்தர்ப்பங்கள் குரல் அஞ்சலினால் நிவர்த்தி செய்யப்படுகின்றது. இம் முறையில் நாம் பேசுவதை இன்னோர் இடத்திலுள்ள பெறுநரால் தெளிவாகக் கேட்கக் கூடியதாகவுள்ளது. எனினும் தொலைபேசியூடாகக் கேட்கும் குரல் வளத்தைவிட இது சிறந்ததா என்பது கேள்விக்குரியதே. ஆனால் தொலைபேசி உரையாடலின் போது பெறுநர் உடன் இருத்தல் அவசியமாகின்றது. குரல் அஞ்ச

வில் விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திலுள்ள பெறுநருக்கு நாம் குரல் அஞ்சல் செய்து விட்டால் பெறுநர் உடனடியா அல்லது தமக்குப் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான இடத்தில் இருந்து அக் குரல் அஞ்சலைப் பெற்றுக் கொள்ளலாம். இக்குரல் அஞ்சல் முறையை எக்கோபஸ் (Echobuzz) எனும் தகவல் தளம் அமைத்து வருகின்றது. நாம் அனுப்ப வேண்டிய செய்தியை இணையத் தளத்தில் பேசிப் பதிவு செய்து கொள்ள வேண்டும் இதற்காகத் தனியே ஒலிப் பெட்டி ஒதுக்கப்பட்டிருக்கும் நாம் குரல் அஞ்சல் மூலம் செய்திகளை அனுப்பும் போது இடையிடையே விளம்பரங்கள் வந்து குறுக்கீடு செய்யும் நிலை காணப்படுகின்றது. இதனால் பாவனையாளர்கள் பலர் அவ்விளம்பரங்களைக் கேட்டு நன்மை பெறுகின்றனர். சிலர் விளம்பரங்கள் குறுக்கீடு செய்வதை விரும்புவதில்லை. இதற்கு செய்திகள் முழுமை பெற முடியாமல் உள்ளன எனக் காரணம் கூறப்படுகின்றது.

கொழும்பு ஹோட்டல்களில் ' பாசல் பிளேன்ரீ '' எனக் கூறும்போது நாம் அகலக் கண் விழிப்பது போல, குரலினை அஞ்சலில் அனுப்புவதா? என வியந்து நிற்கின்றோம்.

### இ - வர்த்தகம் : ( E - Commerce )

இலத்திரனியல் வர்த்தகம் (Electronic Commerce) என்று அழைக்கப்படும் இச் சேவை 1990களின் பின்னர் வலைப் பின்னலின் (Internet) தகவற் பரிமாற்றத்தோடு, வர்த்தகத்தையும் ஈடுபடச் செய்யும் பெரு முயற்சியாக வெற்றி பெற்றது. பொருட்களை விற்பது, அதனை வாங்குவது, பணம் செலுத்துவது போன்ற நடைமுறைகள் என்பவற்றை இணையத் தளத்தில் அறிமுகப்படுத்துவதே இ - வர்த்தகமாகும். உதாரணமாக நவீன சந்தை (Super Market) ஒன்றிலுள்ள ஒவ்வொருவகையான பொருட்களையும் தெரிவு செய்வதற்கு வசதியாக, அறிவிப்புகளோடு வெவ்வேறு இடங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். நுகர்வோருக்கு வசதியாகப் பொருட்களைச் சேகரிக்கச் சிறுவண்டிகள், கூடைகள் போன்றவையும் வெவ்வேறு முறைகளில் பணம் செலுத்தும் வசதியும் கடன் அட்டை (Credit Card) மூலம் கொள்வனவு செய்தல், பொருட்களைப் பொதி செய்யும் வசதியும் கொண்ட இப்படியான ஒரு அமைப்பை இணையத்தில் அமைக்கும் போது இ - வர்த்தகம் உருவாகின்றது.

பொருட்களுக்குப் பதிலாகப், பொருட்களின் படங்களுடன் கூடிய விபரங்கள் தகவல் தளத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். இதனை இணையத்தளத்திலுள்ள வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளலாம். தங்கள் தேவைக்கேற்ப தெரிவு செய்த பொருட்களை Shopping Card இல் பதிவு செய்து கொள்ள வேண்டும். இப்போது பொருட்களுக்குரிய விலைப்பட்டியல். கழிவுகள் உடனுக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொருட்களை அனுப்ப வேண்டிய விபரம், முகவரி, அனுப்ப வேண்டிய முறைகள் என்பவற்றைக் கொடுத்து இறுதியாகச் செலுத்த வேண்டிய பணத்திற்காகக் கடன் அட்டை (Credit Card) இன் விபரங்களைக் கொடுத்து விட்டால் உங்கள் தெரிவுக்கேற்ப பொருட்கள் உங்கள் வீட்டு வாசலை உடன் வந்தடையும் வசதி இ - வர்த்தகத்திலுண்டு. வீட்டிலிருந்து கொண்டே உங்கள் கணினியூடாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். ஏல விற்பனை, கேள்விப் பத்திரம், காப்புறுதி, சொத்துடமை விற்பனை என இவ்வகையான வர்த்தகமும் இ - வர்த்தகத்தினூடாக நடைபெறுகின்றது. இவ்வகையான வர்த்தகம் வழங்குனர்களையும், கொள்வனவு செய்வோரையும் சந்திக்க வைக்கும் ஒரு இடமாக விளங்குகிறது. இவ்வர்த்தக அமைப்பில் கொள்வனவுக்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. நேரத்தை மிச்சப்படுத்தும் நோக்கில் உருவானது. நுகர்வோர் தமது வாகனத் தரிப்பிற்காக இடம்தேடி அலைய வேண்டியதில்லை. இங்கு நுகர்விற்கு மொழி பிரச்சினையாக அமையாது. இருப்பினும் பொருட்களைத் தொட்டுப் பார்த்து நல்லதா? கெட்டதா? எனப் பாவனையாளர்கள் இனம் காண முடியாமல் இருப்பது பெரும் குறைபாடேயாகும்.

# அரச நிதி தொடர்பான சில சமன்பாடுகள்

ம. ஹரிப்பிரசாத்
2000 Com ,
வர்த்தகபிரிவு .

1. அரசாங்க சேமிப்பு = அரச வருமானம் — நடைமுறைச்செலவு
2. மிகு நிலைப்பாதீடு = அரசாங்க செலவு < அரசாங்க வருமானம்
3. குறைநிலைப் பாதீடு = அரசாங்க செலவு > அரச வருமானம்
4. சம நிலைப் பாதீடு = அரச செலவு அரசிறை
5. அரச செலவினம் . நடை முறைச் செலவு
+
மூலதனச் செலவு
+
முற்பணக் கணக்குகள்
6 நடை முறைச் செலவு = பொருட்கள் பணிகள் மீதான செலவு
+
வட்டிக் கொடுப்பனவு
+
மாற்றல் கொடுப்பனவு
+
குறைச் செலவு ஒதுக்கீடு
7. மூலதனச் செலவு = கடன் தீர்த்தல் கொடுப்பனவு
+
நிதிச் சொத்துக்கள் கையேற்பு
+
நிலையான சொத்துக்கள் கையேற்பு
+
மூலதன மாற்றல்
+
குறைச் செலவு
8. மாற்றல் கொடுப்பனவுகள் = அரச முயற்ச்சிகளுக்கான மாற்றல்கள்
+
அரசின் ஏனைய மட்டங்களுக்கான மாற்றல்கள்
+
குடியிருப்பாளர்களுக்கான மாற்றல்கள்
+
வெளிநாட்டவருக்கான மாற்றல்கள்
9. குடியிருப்பாளருக்கான மாற்றல்கள் = உணவு முத்திரை உணவு உதவிக் கொடுப்பனவு
+
ஜனசவிய சமுர்த்தி
+
ஓய்வூதியங்கள்
+

பண உதவிக் கொடுப்பனவு
+
ஏனையவை

10. அரசிறை = வரி வருமானம் + வரியல்லா வருமானம்

11. வரி அரசிறை = வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி
+
உள்நாட்டு பொருள்கள் பணிகள் மீதான வரி
+
தேறிய வருமானங்கள் மீதான வரி
+
சொத்து வரி
+
திறைசேரி உண்டியல் மீதான வரி

12. வரியல்லா அரசிறை = நடைமுறை அரசிறை + மூலதன அரசிறை

13. நடைமுறை அரசிறை = சொத்து வருமானம்
+
சமூகப் பாதுகாப்பு உதவு தொகை
+
கைத்தொழிலல்லா விற்பனைகள்
+
கட்டணங்களும் நிர்வாகவதிப் பணல்களும்
+
தண்டப்பணங்களும் பறிமுதல்களும்

14. சொத்து வருமானம் = அரச வர்த்தக முயற்சிகளின் மிகை
+
வாடகை
+
வட்டி
+
இலாபங்களும் பங்கு இலாபங்களும்
+
தேசிய லொத்தர்
+
மத்திய வங்கியும் இலாப மாற்றங்களும்

15. நேர் வரிகள் = தேறிய வருமானம் இலாபங்கள் மீதான வரிகள்
+
சொத்து வரிகள்
+
திறைசேரி உண்டியல்கள் மீதான வரிகள்

16. நேரில் வரிகள் = வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள்
+
உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதான வரிகள்

17. உள்நாட்டுப் பொருட்கள்
பணிகள் மீதான வரிகள் = சொத்து விற்பனை வரி
+

கலால் வரி
+
பாதுகாப்புத் தீர்வை
+
உரிமக் கட்டணங்கள்

18. வெளிநாட்டுப் படுகடன் சேவை விகிதம் = $\frac{\text{கடன்பணிக் கொடுப்பனவு}}{\text{ஏற்றுமதி வருமானம்}} \times 100$

= $\frac{\text{கடன் தீர்ப்பனவு தொகை + வட்டி}}{\text{ஏற்றுமதி வருமானம்}} + 100$

19. மொத்த படுகடன் சேவை விகிதம் = $\frac{\text{படுகடன்பணிக் கொடுப்பனவு}}{\text{மொத்த அரசிறை}} \times 100$

20. மொத்தப் பொதுப் படுகடன் = வெளிநாட்டுப் படுகடன்
+
உள்நாட்டுப் படுகடன்

21. உள்நாட்டுப்படுகடன் = ரூபாய் கடன்கள்
+
திறைசேரி உண்டியல்கள்
+
திறைசேரி முறிகள்
+
திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள்
+
வரி ஒதுக்கு சான்றிதழ்கள்
+
தேசிய பாதுகாப்பு முறிகள்
+
மத்திய வங்கியின் முற்பணங்கள்
+
ஏனையவை

22. வெளிநாட்டுப் படுகடன் = செயற்திட்டக் கடன்
+
செயற்திட்டமில்லாக் கடன்

---

**உசாத்துணை நூல்கள் :**

பொருளியல் துறை
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்கு பல்கலைக் கழகம்
இலங்கை
பொருளியல் செய்திஏடு (கூர்மை)

# அரை நூற்றாண்டு கண்ட ஐ. நா; சாதனைகளும் சோதனைகளும்

**இ. பரணிகரன்**
*99, கலைப்பிரிவு — ஸ்கந்தா,*
*( 1ஆம் வருடம், யாழ் பல்கலைக் கழகம் )*

உலகின் பிரதான சர்வதேச நிறுவனமாகத் திகழ்வது ஐக்கிய நாடுகள் தாபனமாகும். உலக சமாதானத்தின் பொருட்டு உருவாக்கப்பட்ட ஐ. நா. சபை அரை நூற்றாண்டு பழமை கொண்ட முதிர்ச்சியான அமைப்பாகவும், உலக நாடுகளை ஒன்றிணைக்கும் மையமாகவும் விளங்குகிறது. ஆபிரிக்க தேசத்தவரான கோபி அனான் அவர்களை பொதுச்செயலாளராக தற்போது கொண்டிருக்கும் ஐ. நா. சபை பல்வேறு கிளை நிறுவனங்களைத் தாபித்து அவற்றினூடாக தன் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. ஐக்கிய நாடுகள் தாபனம் தன் இலட்சியத்தையும், நோக்கத்தையும் நிலைநிறுத்தும் பயணத்தில் பல சாதனைகளை ஈட்டியதுடன் பல சோதனைகளையும், சவால்களையும் எதிர் கொண்டது.

ஐ. நா. சபையின் தோற்றத்தைஆராய்கையில் முதலாம் உலக மகாயுத்த முடிவில் சமாதானத்திற்கான அறைகூவல் உலகெங்கிலிருந்தும் விடுக்கப்பட்டது. இவற்றின் பேறாக இன்றைய ஐ. நா. சபையின் முன்னோடி நிறுவனமான சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. எனினும் இரு தசாப்த காலத்திற்குள் சில நாடுகளின் சுய நலன்சார் நடவடிக்கைகளால் உலக அமைதி என்ற உன்னதக்கோட்பாடு சிதைக்கப்பட்டு சர்வதேச சங்கத்தின் நோக்கம் தோல்வி கண்டதுடன் இரண்டாம் உலகமகாயுத்தம் வெடித்தது. இதனால் பேரழிவைக் கண்ட அனைத்துலகம் மீண்டுமோர் உலக யுத்தம் தோன்றாமல் தடுக்க சர்வதேச சங்கத்தின் தோல்வியின் படிப்பினையினூடாகதோற்றுவிக்கப்பட்டதே இன்றைய ஐக்கிய நாடுகள் சபையாகும். இரண்டாம் உலகமகாயுத்தம் முடிந்தவுடன் சென்பிரான்சிஸ்கோ நகரில் கூடிய ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் ஐ. நா. சபை சாசனத்தை உருவாக்கினராயினும், 1945 ஒக்டோபர் 24 அன்று அமெரிக்கா, சோவியத்ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய ஐந்து வல்லரசுகளும் கையெழுத்திட்டு ஐக்கிய நாடுகள் தாபனத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தன. இந்தநாளேஐக்கிய நாடுகள் ஸ்தாபனதினமாக ஆண்டு தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஐ. நா. தாபனம் பிரதானமாக ஆறு அமைப்புக்களைக் கொண்டது. இதில் முதலாவதாக பொதுச்சபைகாணப்படுகின்றது. அனைத்து அங்கத்துவ நாடுகளையும் உறுப்பினராக கொண்ட இச்சபை நியூயோர்க்கில் தலைமையகத்தைக் கொண்டுள்ளது. பொதுவாக ஆண்டிற்கு ஓர் தடவை கூடும் இது ஐ. நா. சாசன வரம்பிற்குட்பட்ட எந்தவோர் உலகப் பிரச்சனையையும் ஆராயும் அதிகாரம் கொண்டது. அடுத்த பிரதான அமைப்பாக பாதுகாப்புச்சபை விளங்குகிறது. ரத்ததிகாரம் (Veto) கொண்ட அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளை நிரந்தர உறுப்பினராக உள்ளடக்கிய 15 உறுப்பினர்களைக் கொண்டு சக்திமிக்க அமைப்பாப காணப்படுகிறது. பொருளாதார சமூகசபை 54 உறுப்பினர்களைக் கொண்ட ஐ. நாவின் விஷேட அமைப்புக்களை ஒருங்கமைக்கும்

அமைப்பாக காணப்படுகிறது. பன்னிரெண்டு உறுப்பினர்களைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்புச்சபை வல்லரசுகளின் பொறுப்பில் இருந்த சுதந்திரம் பெறாத நாடுகளின் நலன்களை கண்காணிக்க உருவாக்கப்பட்டது. ஹய்க் நகரில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் சர்வதேச நீதிமன்றம் 15 நீதிபதிகளைக் கொண்டிருக்கின்றது. ஐ. நா. செயலரை முதல்வராகக் கொண்ட செயலகம் ஐ. நாவின் ஏனைய அமைப்புக்களை நெறிப்படுத்த அமைக்கப்பட்டதாகும்.

ஐ. நா. சபை சர்வதேச அமைதி, அபிவிருத்தி என்பவற்றிற்காக பல செயற்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது. சர்வதேச அமைதிக்காக பாதுகாப்புச் சபை முக்கிய பங்கை வகிக்கிறது. இச்சபை அனைத்துலக சமாதானத்திற்கு குந்தகம் விழைவிக்கக் கூடிய பிரச்சனைகள் பற்றி விவாதித்து அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைக்கின்றது. இத்தருணத்தில் பிரச்சனைக்குரிய நாடுகளிடையே அல்லது தரப்பினரிடையே பேச்சுவார்த்தை (Negotiation) விசாரணை (Enguiry) நடுநிலைப் பணி (Mediation) நல்லிணக்கம் (Conoiaticn) போன்ற வழிமுறைகளைக் கையாண்டு பல சர்வதேச பிணக்குகளை வெற்றிகரமாக கையாண்டுள்ளது. இவற்றில் 1946ல் ஈரானின் வடஎல்லையில் இருந்து அன்றைய சோவியத் படையை விலகச் செய்தமை. மற்றும் மத்திய கிழக்கின் சிரியா, லெபனான் நாடுகளில் இருந்து பிரித்தானியா, பிரஞ்சு படைகளை வாபஸ் பெறச் செய்வதிலும் வெற்றி கண்டது. அத்துடன் உலக அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலைத்தந்த வல்லரசுகளின் பின்னணியுடன் நடாத்தப்பெற்ற கொரிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் ஐ. நா. தாபனத்தின் பணி மகத்தானது மேலும் கடந்த தசாப்தத்தின் ஆரம்பத்தில் எதியோப்பிய எரித்திரிய யுத்தத்திற்குமுடிவு காணும் நோக்குடன் ஐ. நா. சபை எரித்திரிய பிரதேசத்தில் பொதுக் கருத்துக் கணிப்பை நடாத்தி எரித்திரிய தேசம் உதயமாக வழிவகுக்கப்பட்டு அத்தகராறு முடித்துவைக்கப்பட்டது. மத்திய கிழக்கில் நிகழ்ந்த அரபு - இஸ்ரேல் யுத்தகாலப்பரப்பில் இஸ்ரேல் - எகிப்து நாடுகளுக்கிடையே காஸா (Gaqe), சினாய் (Sinai) பிரதேசங்களில் எல்லைப் படைகளை நிறுத்தி வைத்திருந்தது. இதே போல் பால்கன், லெபனான், மேற்கு இரியன் பிரதேசங்களிலும் தன் படைகளை கண்காணிப்பிற்காக (Un abserver Force) பயன்படுத்தியது. மேலும் கொங்கோ, கிரீஸ் போன்ற நாடுகளில் ஏற்பட்ட மோதல்களை வெற்றிகரமாக சமாளித்தது. மிக அண்மைக் காலத்தில் 1999ல் கிழக்குத்திமோரில் ஓர் சர்வசன வாக்கெடுப்பை நடாத்தியதுடன் அங்கு ஓர் சுதந்திர அரசு உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளதுடன் இன்றுவரை இங்கு ஐ. நா. தன் கண்காணிப்பு படையாளரை நிறுத்தி வைத்துள்ளது. இவ்வாறு ஐ. நா. சபை உலக அமைதியின் பொருட்டு பல அரசியல் ரீதியான சாதனைகளை நிலைநிறுத்தியது.

உலக அமைதியை நிலைநாட்டும் பணிக்கு வறுமையும், மனித உரிமை மீறல்களும் தடையாக இருப்பதை உணர்ந்த ஐ. நா. சபை உலகிலிருந்து வறுமையை விரட்டவும் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பல்வேறு அமைப்புக்களினூடாக பல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் பொருட்டு ஐ. நா. வினால் பல சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்காக பல நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவற்றுள் 1946இல் நிறுவப்பட்ட ஐ. நா. கல்வி விஞ்ஞான அபிவிருத்தி நிறுவனம் (UNESCO) கல்வி, விஞ்ஞான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு புதிய கல்வித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கற்பித்தலில் நவீன முறைகளைக் கையாளுதல், உதாரணமாக தொலைக்காட்சி வழிக்கல்வி முறைக்கு பல நாடுகளுக்கு ஆலோசனைகளையும் நிதியுதவிகளையும் வழங்கி வருகிறது. அத்துடன் புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க பல விஞ்ஞான ஆய்வு மையங்களை நிறுவியுள்ளது. இவ்வகையில் எமது நாட்டில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சி, கலாசார முக்கோணத்திட்டம் என்பவற்றிற்கு கணிச

மான பங்களிப்பை வழங்கிவருகிறது. இதே போல் ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் (UNICEF) பல சிறுவர் மேம் பாட்டுத்திட்டங்கள், குடும்ப நலத்திட்டங்கள் நோய்த்தடுப்புத் திட்டங்கள் என்பவற்றை அமுல்படுத்தி வருவதுடன், சிறுவர் உரிமை கள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள், சுற்றுப்புற சுகாதாரம், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றிலும் கவனம் செலுத்திவருகிறது. யுத்தம் நடைபெற்ற எதியோப்பியா, வியட்நாம், வங்கம், அங் கோலா போன்ற நாடுகளிலும் யுத்தம் நடை பெறும் இலங்கை, சோமாலியா, ஆப்கா னிஷ்தான், மற்றும் பல ஆபிரிக்க தேசங்களி லும் அதன் பணி மகத்தானது 1965இல் நிறுவப்பட்ட உலக விவசாய அமையம் (FAO அபிவிருத்தி அடைந்துவரும் நாடு களில் உணவு உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு புதிய செய்கை முறைகளை அறி முகம் செய்தல், விஞ்ஞான ரீதியான விவ சாயச் செய்கைமுறை நாடுகளுக்கிடையே சம உணவுப் பங்கீடு என்பவற்றில் கவனம் செலுத்துதல் போன்ற பணிகளை மேற் கொள்கின்றது. இவ்வாறு ஐ. நாவின் நோக்கத்தை எய்த உலக சுகாதார நிறு வனம் (WHO), சர்வதேச நிதி நிறுவனம் (IMF), உலக தொழிலாளர் அமையம் (ILO) போன்ற பல நிறுவனங்கள் செயற் பட்டு உலக அபிவிருத்தி மேம்பாட்டிற்காய் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின் றன.

ஐ. நாவின் சாதனைகள் இவ்வாறு இருக்க ஐ. நா. தன் ஐம்பத்தைந்து ஆண் டுகள் வரலாற்றில் பல சோதனைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியி ருந்தது. சில சந்தர்ப்பங்களில் அங்கத்துவ நாடுகளிடையேயான பிணக்குகளைத் தீர்க்க முடியாமல் போனதுண்டு உதாரணமாக பத்தாண்டுகளாக நடைபெற்ற ஈராக்— ஈரான் யுத்தத்தைக் குறிப்பிடலாம். மேலும் பொஸ்னிய, சோமாலிய நாடுகளில் ஏற்பட்ட பிணக்குகள் ஐ. நாவிற்குப் பெரும் சவாலாக விளங்கியது. அதோடு அண்மையில் கொசோவா மீதான நேட்டோ அமைப்பின் தாக்குதல்கள் எந்த அளவிற்கு ஐ. நாவின் சாசன வரைவுக்குட்பட்டது என்ற கேள்வி யும் எழுகின்றது. அத்தோடு எரிமலையாக விளங்கும் மத்திய கிழக்கு நெருக்கடிக்கு ஓர் நிரந்தர தீர்வைக்காண ஐ. நா சபையால் இற்றைவரை இயலவில்லை. இத்தகைய தன்மைகளுக்கு ஐ. நாவிலும் சில குறைபாடு கள் காணப்படுகின்றமையும் காரணமாகும். எடுத்துக்காட்டாக ஐ. நாவின் யோசனை களை அங்கத்துவ நாடுகள் கட்டாயம் ஏற்க வேண்டும் என்ற நிலை இல்லை. இதன் காரணமாகத்தான் கடந்த ஆண்டு ஐ. நா. செயலாளர் நாயகம் திரு. கோபி அனான் அவர்கள் இலங்கை இனத்தகராற்றிற்கு பேச்சவார்த்தையின் அவசியம் பற்றி கருத்து வெளியிட்டமைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் பொருட்டு இலங்கையின் கௌரவ வெளி யுறவு அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் ''ஐ. நா. இங்கு நுளம்பு ஒளிப்பிற்கு மருந் தடிக்கும் வேலையை மட்டும் பார்க்கட்டும்'' என மலிவான இராஜதந்திர வார்த்தைப் பிரயோகத்தினூடாக பதிலளித்தமையைச் சுட்டிக்காட்டலாம். அதோடு ஐ. நா. சபை யின் தீர்மானங்களிலும், நடவடிக்கைகளி லும் வல்லரசுகளின் மேலாண்மை அவதா னிக்கப்படுகிறது. உதாரணமாக ஈராக் மீதான தடைகளை அமெரிக்கா ஐ. நாவி னூடாக நடைமுறைப் படுத்தப்படுவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதோடு ஐ. நா. சபைக்குப் புறம்பாக வல்லரசுகள் தம் பலத்தை பிரயோகிக்கும் தன்மை ஐ. நாவின் சர்வதேச நம்பகத் தன்மையை கேள்விக்குள்ளாக்குகின்றன. உதாரணமாக இந்த ஆண்டு ஆப்கானிஷ்தான், சூடான் போன்ற நாடுகளின் மீது அமெரிக்கா நடாத்திய ஏவுகணைத்தாக்குதலை குறிப்

பிடலாம். அதோடு வல்லரசு நாடுகள் தம் ரத்ததிகாரத்தினை (Veto) பயன்படுத்தும் முறைபற்றி விமர்சனங்கள் எழுப்பப்படுவதுடன் ஐக்கிய நாடுகள் சபையை மறுசீரமைக்க வேண்டும் என்ற அறைகூவல்கள் விடுக்கப்படுகின்றன.

தொகுத்து நோக்குகையில் ஐக்கிய நாடுகள் தாபனம் உலக அமைதியை நிலை நிறுத்துவதில் முழுமையான வெற்றியைக் கண்டுள்ளது எனக் கூறமுடியாவிட்டாலும், முதலாம் உலக மகாயுத்தம் முடிவடைந்து இரு தசாப்த காலத்திற்குள் இரண்டாம் உலக மகாயுத்தம் வெடித்தது போலல்லாமல், கடந்த அரை நூற்றாண்டு காலமாக இன்னுமோர் உலக யுத்தம் ஏற்படாமைக்கு ஐ. நாவின் பங்களிப்பு பிரதானமானதாகும். அதோடு உலக சமாதானத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு ஐ. நா. சபை பல கிளை நிறுவனங்களினூடாக அபிவிருத்தி, மனித உரிமைகள் மேம்பாடு போன்ற விடயங்களில் மிகவும் காத்திரமான பங்கை வகித்துவருகிறது. இவ்வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் யதார்த்த நிலையை பிரித்தானியாவின் முன்னாள் பிரதமரும், அறிஞருமான வின்சன் சேர்ச்சில் '' ஐக்கிய நாடுகள் தாபனம் மனிதனை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் என கூறமுடியாது; ஆனால் அது மனிதனை நரகத்தில் வீழாவண்ணம் தடுக்கும் '' எனக் குறிப்பிடுகின்றார்.

---

| | |
|---|---|
| இலங்கையின் நடு ஆண்டு குடித்தொகை | 19 . 04 மில்லியன் |
| குடித்தொகை வளர்ச்சி வீதம் | 1 . 4 % |
| குடித்தொகை அடர்த்தி (சதுர கிலோமீற்றர்) | 304 பேர் |
| தொழிலற்றோர் வீதம் | 8 . 8 % |
| சந்தை விலைகளில் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி | 807 அ. டொலர் |
| இலங்கையில் முதலீடு செய்துள்ள முக்கிய வெளிநாடு | தென்கொரியா |
| இலங்கை புடவையை கூடுதலாக ஏற்றுமதி செய்யும் வலயம் | ஐரோப்பிய சமூகம் |

# தனியார் மயமாக்கல் – ஒரு நோக்கு

**மா. சின்னத்தம்பி**
M A. ( Econ ) M. Phil ( Ed )
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக் கழகம்.

**அறிமுகம் :**

தனியார் மயமாக்கல் உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றுவரும் பொருளாதார செய்முறையாகும். இலாப நோக்குடன் அதிகூடிய வினைத்திறனுடன் செயற்படக்கூடிய தனியார்துறை எல்லாத்துறைகளிலும் ஈடுபட அனுமதிக்கும் – ஊக்கமளிக்கும் ஏற்பாடுகள் தனியார் மயமாக்கலை பரவலாக்கி வருகின்றன. மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் இச்செயன் முறை முதன்மை பெற்றது மட்டுமன்றி நிலைமாறுகின்ற பொருளாதாரங்களாக விளங்குகின்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கூட இவ் எண்ணக்கரு முதன்மை பெற்றே வருகின்றது.

**வரைவிலக்கணம் :**

அரசதுறைக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை தனியார் துறையினருக்கு விற்பது அல்லது தனியாரிடம் கையளிப்பது தனியார் மயமாக்கல் எனப்படும்.

அபிவிருத்தியடைந்த மேற்கு நாடுகளில் மட்டுமன்றி இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளிலும் முன்பு சோசலிச நாடுகளாயிருந்து தற்போது சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறுகின்ற நிலைமாறும் பொருளாதாரங்களிலும் அரசினால் தொடக்கி நிர்வகிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களும் பல்வேறு காரணங்களினால் தனியார் கைகளுக்கு மாற்றப்படலாயின.

பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களையும், நிர்வாகத்தினையும் தனியார் நிறுவனங்களுக்கு கைமாற்றுவதற்கான நடவடிக்கைகள் சட்ட பூர்வமான முறையில் மேற்கொள்வதாகும்.

நாடுகள் தம் இலக்குகளுக்கு ஏற்ப பல்வேறுமாதிரிகளைப் பின்பற்றி இதனை மேற்கொண்டன. அரசதுறை நிறுவனங்களை உள்நாட்டு நிறுவனங்களுக்கு மாத்திரம் விற்கவேண்டுமென்பதில்லை. வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் விற்கமுடியும். பல்வேறு வகைகளில் திட்டமிட்டு இவை நடைமுறைப் படுத்தப்பட்டன.

**ஊக்குவிக்கும் காரணிகள் :**

தனியார் மயமாக்கல் பலநாடுகளிலும் ஊக்குவிக்கப்படுவதற்கான காரணங்கள் பல காணப்பட்டன. அவை

1. அரசாங்க வரவு செலவுத்திட்டங்கள் தொடர்பாக நிதி நெருக்கடிகள் ஏற்பட்டன. செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் வரிகளை உயர்த்துவதிலும் பிரச்சினைகள் காணப்பட்டன. இந்த நிலைமையைச் சமாளிக்க இலாபகரமற்ற அரச நிறுவனங்களை விற்றல் புத்திசாலித்தனமானதாகக் கருதப்பட்டது.
2. இலாபம் உழைக்கத்தவறிய நிறுவனங்களை நிர்வாக வினைத்திறன் மிக்க

தனியாரிடம் கையளிப்பதால் போதிய இலாபத்தை பெறமுடிவதோடு வரி விதிப்பு வருமானங்களையும் பெறமுடியும். இதனால் எதிர்கால நிதி ஓட்டம் சீரானதாக்கப்பட முடியும்.

3. தனியார்துறையில் ஒப்பீட்டு ரீதியாக திறமையான நிர்வாகம் காணப்படும். தொடர்ந்து கவனம் செலுத்துதல், தாமதமின்றி முடிவுகள் எடுத்தல் போன்ற நடைமுறைகளினால் நிர்வாகத்திறமை உயர்வாகவே காணப்படும். பொது நிறுவனங்களை அவர்களுக்கு கைமாற்றுவதால் பொதுமக்கள் — நுகர்வோர் — அவற்றிடமிருந்து சிறந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

4. வெளிநாட்டின் மிகப்பெரிய நிறுவனங்களுக்கு அரச நிறுவனங்களை விற்பதால் அந்நிய முதலீடுகளை உள்ளே ஈர்த்துக்கொள்ள முடியும். இதனால் ஏற்றுமதித்திறன் உயர்வதோடு செலாவணி ரீதியிலான அநுகூலங்களையும் பெற முடியும்.

5. திறமைமிக்க வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பதால் நவீன தொழில் நுட்பங்களை நாட்டிற்குள்ளே கொண்டு வர முடியும். தொழில்நுட்ப ரீதியிலான அநுகூலங்கள் ஏனைய துறைகளுக்கும் பரவமுடியும்.

6. நிறுவனங்கள் தனியார் துறைக்கு கைமாற்றப்பட்டு, அவற்றின் வினைத்திறன் உயர்ந்து நிறுவனங்கள் விரிவடையும்போது உள்நாட்டில் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்து தொழிலின்மையும் குறையும்.

7. இலாபகரமாக இயங்கக்கூடிய தொழில் நிறுவன எண்ணிக்கையை அதிகரிக்க தனியார் மயமாக்கல் உதவுகிறது. தொழில்துறை வளர்ச்சி நீண்ட காலத்தில் சிறந்த பொருளாதார உட்கட்டமைப்பு வளர்ச்சியடைவதற்கும் நிச்சயம் உதவும். இவ்வாறான பல்வேறு அநுகூலங்களை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்பதற்காகவே பல நாடுகளில் தனியார் மயமாக்கல் ஊக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நாடுகளின் அனுபவங்கள் :**

1980–92 காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் தனியார் மயமாக்கல் முதன்மை பெற்றது. இக்காலப்பகுதியில் உலகம் முழுவதும் 80 நாடுகளில் 8500க்கு மேற்பட்ட அரசதுறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. மிகப் பெரிய 30 அரசதுறை நிறுவனங்கள் 19,000 மில்லியன் டொலர் பெறுமதி கொண்ட சொத்துக்களைக் கொண்டிருந்தன. இவையும் தனியார் மயமாக்கப்பட்டிருந்தன. பிரித்தானியா, தொலைத்தொடர்பு துறைமுகம், விமான சேவை போன்றவற்றைத் தனியார் மயப்படுத்தியது. மலேசியா கொள்கலன் வழிகள், விமானசேவை போன்றவற்றை இவ்வாறு மாற்றியது. மெக்சிக்கோவும் தொலைத்தொடர்பு, விமானசேவை போன்றவற்றை இவ்வாறு தனியாருக்கு மாற்றியிருந்தது. ஜேர்மனி, யப்பான், கனடா, நெதர்லாந்து, ஸ்பெயின், துருக்கி, பங்களாதேஷ், பாக்கிஸ்தான் போன்ற பல நாடுகளில் தனியார் மயமாக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**இலங்கை அனுபவம் :**

இலங்கையில் தனியார் மயமாக்கல், மக்கள் மயமாக்கல் என்ற புதிய தொடரால் அழைக்கப்பட்டது. அரச நிறுவனங்களின் சொத்துக்களையும், நிர்வாகத்தையும் தனியார் நிறுவனங்களுக்கு கையளிப்பது தனியார் மயமாக்கம் எனப்படும்போது மக்கள் மயமாக்கல் இவ்வாறு சொத்துக்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதோடு பங்குகளை பொதுமக்களுக்கும், ஊழியர்களுக்கும் விற்பதையும் குறிக்கிறது. அரச நிறுவனங்களை பொதுமக்களின் உடமையாக்குவதாக இது அமைகிறது. பொதுவாக பங்குகளில் 10% ஊழியருக்கும் 30% பொதுமக்களுக்கும் மிகுதி 51% — 60% வரை கூட்டு முதலீட்டாளருக்கும் விற்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

1956இல் இருந்து அரச துறைகளில் 230,000 கோடி ரூபாவிலும் கூடுதலான தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு ஏற்ற இலாபம் பெறப்பட வில்லை. இத்தகைய நட்டத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக மக்கள் மயப்படுத்தல் விரும்பப்பட்டது.

1990களில் மக்கள் மயப்படுத்தப்பட்ட 16 நிறுவனங்களில் பணியாற்றிய 14779 ஊழியர்கள் இவ்வாறு இலவச பங்குகளைப் பெற்றனர்.

சிலோன் ஒட்சிசன் கம்பனி, இலங்கை மில்க்ஃபூட்ஸ் கம்பனி, ஒபறோய் ஹொட்டல் போன்றன இவற்றுள் முக்கியமானவையாக இருந்தன.

இவற்றின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி பின்னர் ஏறக்குறைய நூறு மடங்கு உயர்ந்திருந்தது.

பொதுமக்களின் சமூக ரீதியான நலன்களைப் பேணுவதற்காகவும் மக்கள் மயப்படுத்தல் விரும்பப்பட்டது. பொதுவாக அரச நிறுவனங்களில் காணப்பட்ட பின்வரும் குறைபாடுகள் காரணமாக இது ஊக்குவிக்கப்பட்டது.

- i தொடர்ந்து நட்டத்தில் இயங்கியமை.
- ii பொருத்தமற்ற மிகப்பழைய தொழில் நுட்பங்கள் கையாளப்பட்டமை.
- iii திறமை மிக்கோரை தொடர்ந்து வைத்திருக்க முடியாதிருந்தமை.
- iv தேவைக்கதிகமாக தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருந்தமை.
- v நிர்வாகத் திறமையின்மையும் சிக்கனமின்மையும் காணப்பட்டமை. முக்கியமாக முடிவுகளை மேற்கொள்வதில் தாமதங்கள் நிலவியமை.
- vi அபிவிருத்திக்குச் செலவிடக்கூடிய கோடிக்கணக்கான ரூபாயை மானியமாகக் கொடுக்க வேண்டியிருந்தமை.

இவ்வாறான நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு மக்கள் மயப்படுத்தல் விரும்பப்பட்டது. பூகொட ரெக்ஸ்ரைல்ஸ்மில், யுனைட்டெட் மோட்டோஸ் லிமிடெட், தோற்பொருள் கூட்டுத்தாபனம் போன்ற பல இதனால் நன்மை அடைந்திருந்தன.

மக்கள் மயப்படுத்தல் நடவடிக்கை உண்மையில் தனியார் மயமாக்கலின் ஜனநாயகப்படுத்தப்பட்ட முறை என்று கொள்ளலாம்.

**நிறைவான வழிமுறைகள் :**

தனியார் மயமாக்கல் உலகளாவிய ரீதியில் திறமையாக மேற்கொள்ளப் படுவதற்கு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டுமென உலக வங்கி வலியுறுத்தியுள்ளது.

- i பெரிய நிகழ்ச்சித்திட்டங்கள் சீர்திருத்தப்படும்போது வினைத்திறன் அதிகரிக்கப்படுமாயின் தனியார் மயமாக்கல் வெற்றியளிக்கும்.
- ii விதிமுறைகள் மற்றும் சட்டங்கள் மிகத் திறமையாக நடைமுறைப்படுத்தப்படும் பொழுது வெற்றியளிக்கும்.
- iii சொத்துக்களின் உரிமையை தனியாருக்கு மாற்றாமல் முகாமைத்துவத்தை மாத்திரம் தனியார் மயப்படுத்துவதாலும்வெற்றியளிக்கும்.
- iv பெரிய நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் போது அவற்றை விற்கக் கூடிய திறமைமிக்க பல கூறுகளாக பிரித்தல். பகுதி பகுதியாகவே தனியார் மயமாக்குதல்.

v தனியார் மயமாக்கல் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் ஒழிவுமறை வற்றதாக மேற்கொள்ளப்படுதல்.

vi தனியார் மயப்படுத்தும் பொழுது இயன்றளவு சமூக பாதுகாப்புமுறையை உருவாக்குதல்.

vii சோசலிசப் பொருளாதாரங்கள் தனியார் மயப்படுத்தும் பொழுது போட்டியை அதிகரிக்க இயன்றளவு சாத்திய மான எல்லா வழிகளையும் கையாளுதல்.

viii அரச-தனியார் இணைந்த முயற்சிகளை விட இயன்றளவு தூய தனியார் வளர்ச் சிக்கு ஊக்கமளித்தல்.

இத்தகைய எல்லா முறைகளும் கையாளப்படும்போது தனியார் மயமாக்கலில் ஆகக்கூடிய நலன்களை உறுதிப்படுத்த முடியும்.

முடிவுரை :

தற்போது உலகமயமாக்கலில் தனியார் துறை முக்கியத்துவம் அதிகரித்து வரும் சூழலில் தனியார் மயமாக்கல் மேற்கொள்ளப்படாத நாடுகள் எதுவுமே இருக்க முடியாது. தனியார் மயமாக்கல் செய்முறையை நன்கு திட்டமிட்டு கவனமாக நடைமுறைப் படுத்தினால் அதன் பயன்கள் எல்லா மக்களுக்கும் கிடைப்பதை நிச்சயமாக உறுதிப்படுத்த முடியும்.

---

## பங்குச்சந்தையில் பங்குகளின் கைமாற்றம்

திறந்தகத்தல் முறைக்கு பதிலாக தனியக்க வியாபார முறை (Automated trading System) நடைமுறையில் உள்ளது.

இதன் பிரகாரம் முதலீட்டாளர்கள் அவர்களுக்கான பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ இடப்படும் கட்டளைகள் தரகருக்கு அறிவிக்கும் போது தரகர்களினால் தமது நிறுவனத்திலுள்ள கணணிக்கு உட்பாச்சப்படும். அக்கட்டளைகள் தன்னியக்க மின் அலைகள் மூலம் கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளை கைமாற்றம் செய்யத் தயாராகவுள்ள மத்திய கணணிப் பொறிக்கு உட்பாச்சப்படும்.

ஏதாவது சந்தர்ப்பமொன்றில் உட்பாச்சப்படும் கொள்வனவுக் கட்டளைகளின் நேரம், விலை, பங்குகளின் எண்ணிக்கை என்பனவற்றுக்கு சமமான இன்னொரு விற்பனைக் கட்டளை அக்கணணியில் சந்திக்கும் போது அவ்விரு கட்டளைகளும் சமநிலை அடைந்து பங்குக் கைமாற்றம் நிகழும் மத்திய வைப்புத் திட்ட கணணியில் கொள்வனவாளர், விற்பனையாளர் கணக்குகளில் வரவு செலவு வைக்கப்படும். அக்கணணிமூலம் இப்பதிவுகளுக்கான ஆவணமும் தரப்படும். ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் மூன்று தினங்களுக்குள் அங்கு தெரிவிக்க வேண்டும்.

# ஊக்கப்படுத்தல்
# ( Motivation )

நாகராஜா சுஜீவறாபன்
''99'' வர்த்தகப்பிரிவு.

நெறிப்படுத்தலின் பிரதான அங்கமென அமைவது ஊக்கப்படுத்தலாகும். வேலைக்கென அமர்த்தப்பட்ட ஊழியரிடம் எதிர் பார்த்த விளைவையோ அன்றி அதனை விடக்கூடிய விளைவையோ அடைந்து கொள்வதற்கு ஊக்கப்படுத்தல் அவசியமாகும். இவ் ஊக்கப்படுத்தலை ஊழியர்கள் மீது பயன்படுத்துவதற்கு அவர்கள் ஆற்றலைக் கொண்டிருப்பது அவசியமாகும். ஆற்றலும் ( Ability ) ஊக்கப்படுத்தலும் சம காலத்தில் இருப்பின் மட்டுமே அது ஊழியர்களின் செயற்றிறன் ( Perpormonce ) என்பதை அதிகரிக்கச் செய்யும். இதனை

$\mathbf{P} = \mathrm{A} \times \mathrm{M}$ என்றவாய்ப்பாட்டால் நிரூபிக்கலாம்

இவற்றில் P = Performance (செயற்றிறன்)
A - Ability (ஆற்றல்)
M = Motivation (ஊக்கப்படுத்தல்)

என அமையும். இதன்படி ஆற்றல் கொண்ட ஊழியர்கள் மீது தூண்டுதல் பிரயோகிக்கப்படுவதே செயற்றிறனை உயர்த்தும் என்பது நிரூபிக்கப்படுகின்றது. மறுபுறத்தில் ஆற்றல் இல்லாத ஊழியர் மீது தூண்டுதல் பாவிக்கப்படுவதோ அல்லது ஆற்றலுள்ள ஊழியர் மீது தூண்டலை பாவிக்காது விடுதலோ செயற்றிறனைப் பூச்சியத்திற்கு கொண்டுவந்து விடும். எனவேதான் ஊழியர்களின் செயற்றிறன் அதிகரிப்பிற்கு ஆற்றலும் தூண்டுதலும் சமநேரத்தில் அவசியம். ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கான சாதாரண முறைகள்.

நிறுவனத்தில் வேலைக்கமர்த்தப்பட்டவர்களை ஊக்கப்படுத்துவதென்பது தொடரான வேலைக் கருமமாகும். இவ் ஊக்கப்படுத்தலுக்காக நிதிசார்ந்த நிதிசாராது பல ஊக்கப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இவை வேலையிலும் அதன் சூழலிலும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**ஊழியர்களை சாதாரணமாகவே ஊக்கப்படுத்தும் வழிமுறைகள் :**

1. ஊழியர்களது விருப்பத்தை அதிகரிக்கக் கூடியவாறு பொருத்தமான வேலையை வழங்கல்.
2. வேலைகளை சரிவர ஆற்ற தேவையான பயிற்சிகளை தேவையான நேரத்தில் வழங்கல்.
3. ஊழியர்களது அக்கறையை அதிகரிக்கும் வகையில் தீர்மானமெடுத்தலில் அவர்களையும் இணைத்தல்.
4. அதிகாரக் கையளிப்பை கீழ் மட்டத்தவரிடமும் ஒப்படைத்தல்.
5. வேலையில் ஏற்படும் சலிப்புத்தன்மையை நீக்க சுழற்சி முறையில் வேலையை ஒப்படைத்தல்.
6. காசுக் கொடுப்பனவுகளான சம்பள ஏற்றம் உபசாரப்பணக் கொடுப்பனவு போன்ற நிதிசார் ஊக்குவிப்புக்களை வழங்கல்.
7. நிதிசாராத மேலதிக நலன்களாக (Fringe Benifits) இலவச மருத்துவ வசதி போக்குவரத்து குடியிருப்பு, தொலைபேசி வசதிகளை வழங்கல்.
8. வேலை சம்பந்தமான அபிப்பிராயங் எடுத்துக்கூறும் வேலைப் பின்னூட்டி (Work Feedback) என்பதனை நடைமுறைப்படுத்தல்.
9. நிறுவனத்தின் வேலையில் முன்னேறும் வாய்ப்புக்களை (Career development) அதிகரித்தல்.

10. ஊழியர்களிடையே பக்கச்சார்பை தவிர்த்து நடுநிலைக்கொள்கையை ஊக்குவித்தல்.

11. ஊழியர்களது வேலையை அங்கீகரிப்பதுடன் அவர்களுக்கு தேவையான நேரத்தில் புகழ்ச்சியையும் பரிசுகளையும் வழங்கல்.

12. ஊழியர்களுக்கு காலத்திற்குக் காலம் தோன்றுகின்ற தேவைகளை அறிந்து அவற்றை நிவர்த்திப்பதற்கான வழிகளைக் கூறல்.

என்பவை சாதாரணமாக எல்லா நிறுவனங்களும் பின்பற்றக்கூடிய ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளாகும்.

ஊழியர்களை ஊக்கப்படுத்தி சரியான வழியில் நெறிப்படுத்தாத நிறுவனங்களில் பின்வரும் பண்புகள் காணப்படுவதை அவதானிக்கலாம்.

1. ஊழியர்களுக்கு வேலையில் அக்கறையின்மை காணப்படும்.
2. வேலையில் சலிப்புத்தன்மையைக் கொண்டிருப்பர்.
3. வேலையில் அடிக்கடி தவறுகள் ஏற்பட்டுவரல்.
4. வேலைநேரத்தை பெருமளவிற்கு விரயம் செய்தல்.
5. நிறுவன வளங்களை சிக்கனமின்றிப் பாவித்தல்.
6. ஊழியர்களின் வரவீனம் பெருமளவு காணப்படல் ( Absenteeism )
7. ஊழியர் புரள்வு ( Labeur Turnover ) பெருமளவு காணப்படல்
8. நிறுவன உற்பத்தி வெளியீட்டில் வீழ்ச்சி காணப்படல்.
9. நிறுவன நோக்கத்தை அடைவதில் அக்கறை இல்லாது காணப்படல் போன்ற குறைபாடுகள் காணப்படும்.

**ஊக்கப்படுத்தற் கோட்பாடுகள் :**
**(Motivations Theories)**

ஊக்கப்படுத்தலுக்கென பல அறிஞர்கள் பலதரப்பட்ட கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர் இவற்றை பின்வரும் 2 பிரிவினுள் அடக்கலாம்.

**1. உள்ளடக்கக் கோட்பாடு :**
**(Content theory)**

உள்ளடக்கக் கோட்பாடு என்பதோ ஊழியர்களைத் தூண்டுவதற்கு அடிப்படையில் என்ன காரணமாக உள்ளது என்பதை இனங்காணும் கோட்பாடுகளை அடக்கும். இதற்குள் என்னென்ன காரணிகள் ஊக்கப்படுத்தலை வலியுறுத்துகின்றன என்பது இனங்காணப்படும். இவ்வுள்ளடக்கக் கோட்பாட்டினுள்

1. மாஸ்லோவின் தேவைபற்றிய கோட்பாடு
( Maslow's needs Hierarchy theory )
2. கேர்ஸ்பேக்கின் இரு காரணிக்கொள்கை
( Herzberg's tuo faetor theory )
3. அல்டெபரின் E. R. G. கோட்பாடு.
( Aldefer's E. R. G. theory )
என்பன அடங்கும்.

**2. செய்முறைக்கோட்பாடு :**
**(Process theory)**

செய்முறைக் கோட்பாடு என்பதோ ஊழியர்களை எவ்வாறு ஊக்கப்படுத்தலாம் என்பது பற்றிக்குறிப்பிடுவதாகும். இதற்கு ஊக்கப்படுத்தக் கூடிய முறைகள் இனங்காணப்படும். இச் செய்முறைக் கோட்பாட்டினுள் பின்வருவன அடங்கும்.

1. டேவிற் மக்கவன்ட் என்பவரின் சாதனைக் கோட்பாடு
2. ஸ்ரேசி அடெம் என்பவரின் சமனிலைக் கோட்பாடு
( Stacy Ademe's Equity theory )
3. விக்டர் உறூமின் எதிர்பார்க்கை கோட்பாடு.
( Victor Vroom's Expectancy theory )

இக்கோட்பாடுகளில் மாஸ்லோவின் தேவை பற்றிய கோட்பாட்டை விரிவாக ஆராயின்.

மாஸ்லோ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குவித்தல் தொடர்பான ஒரு உள்ளடக்கக்கோட்பாடே இதுவாகும் இதன்படி மனிதவர்க்கமானது தொடர்ந்து தேவைகளை கொண்டிருக்கும் ஒரு பிராணியாகும். அவர்கள் கொண்டிருக்கும்

தேவையே அவர்களுக்குத் தூண்டியாக அமையும். அதாவது ஒரு தேவை பூர்த்தியானவுடன் இன்னொரு தேவை தொடர்ந்து தோன்றுவதால் தேவைகளுக்கு ஒரு விரிகையே இருப்பதாக கொள்ளப்படும். இவரது கருத்துப்படி தேவைகளின் வரிசையானது பின்வருமாறு அமையும்.

1. உடலியற்தேவை (Physical Needs)
2. பாதுகாப்புத்தேவை (Safety Needs)
3. சமூகத்தேவை (Social Needs)
4. கௌரவத்தேவை (Esteem Needs)
5. தன்னக/சுய உணர்வுத்தேவை (Self Actualizalion Needs)

**இத்தேவைகளை ஒவ்வொன்றாக நோக்குவோம் :**

**1. Physical Needs :**

மக்கள் உயிர்வாழ அவசியமான உணவு, உறையுள் உடை ஆகிய மூன்றையும் பெறுவதற்கான தேவை இதுவாகும். இதுவே மனித வாழ்வின் அடிப்படைத் தேவையாகும்.

**2. Safety Needs :**

இது உடலியல் தேவை பூர்த்தியானவுடன் தோன்றுகின்றது இதன்படி உயிர்ப் பாதுகாப்பு, உடமைப்பாதுகாப்பு, தொழிற் பாதுகாப்பு என இத்தேவை அவையும்.

**3 Social Needs :**

பாதுகாப்பு தேவை பூர்த்தியானவுடன் தோன்றுவது சமூகத்தேவையாகும். இது ஏனையோரால் மதிக்கப்படல், ஏனையோரை மதித்தல், ஏனையோருடன் இணைந்து வாழல் ஏனையோர் மீது அன்பு செலுத்தல் என உறவுகளைப் பெருக்கும் தேவையே சமூகத்தேவை ஆகும்.

**4. Esteem Needs :**

இது சமூகத்தேவை பூர்த்தியானவுடன் தோன்றும் புதிய தேவையே கௌரவ தேவையாகும் இதன்படி உயர்பதவியைப் பெறல் (Eg: J. P. பதவி) சொந்தமாக வாகனங்களை வைத்துக்கொள்ள விரும்புதல் என்பதாகும். இது உயர்மட்டத்தவரது தேவையாகும்.

**5 Seitf Actualization Needs :**

இதுவே மனிதவாழ்வின் மிக இறுதியும் உயர்ந்ததுமான தேவையாகும். இதன்படி ஒருவர் மிக உன்னதமான நிலையில் இருக்க விரும்புவதைக் குறிக்கும்.

இவ் ஐந்து தேவைகளும் மாஸ்வோவின் ஊக்கப்படுத்தற் கோட்பாட்டில் முன்வைக்கப்பட்டவையாகும். எனவே ஊக்கப்படுத்தல் என்பது நிறுவனமுகாமைச் செயற்பாட்டில் மிகமுக்கியமானதும், நிறுவன இலட்சியத்தை அடையச் செல்லும் ஒரு செயற்பாடுமாகும்.

# கைத்தொழில் பிணக்கு

**V. Thirukumaran,**
2001 A/L (com).
Skanda,

தொழில் தொடர்பாக தொழிலாளருக்கும் தொழில் தருநருக்கும் இடையில் காணப்படுகின்ற ஒரு நல்ல உறவு கைத்தொழில் உறவு எனப்படும். இவ் உறவில் ஏற்படுகின்ற ஒரு முரண்பாடு கைத்தொழில் பிணக்கு எனப்படும். அதாவது தொழில் தொடர்பாக தொழிலாளருக்கும், தொழில் தருனருக்கும் இடையில் ஏற்படும் கருத்து வேறுபாடு கைத்தொழில் பிணக்கு எனப் படும்.

கைத்தொழில் பிணக்குகள் கீழ்வரும் காரணங்களினால் தோன்றுகின்றன.

தொழிலாளி தனது சம்பளத்தை அதிகரித்துத் தருமாறு தொழில் தருனரிடம் கோருகின்ற சந்தர்ப்பத்தில்

உபகார பணக் கொடுப்பனவு கோருகின்ற சந்தர்ப்பத்தில்

நல்ல வேலை நிபந்தனையை வழங்குமாறு கோருகின்ற சந்தர்ப்பத்திலும்

தொழிலாளர் தமது பதவி உயர்வுகளை வழங்குமாறு கேட்கின்ற சந்தர்ப்பத்திலும்

தொழில் தருனர் முறையற்ற வகையில் பதவி உயர்வுகள் வழங்குகின்ற சந்தர்ப்பத்திலும்

ஊழியருக்கான இடர் கொடுப்பனவுக்கு கோருகின்ற சந்தர்ப்பத்திலும் இவை மறுக்கப்படும்பொழுது ஏற்படுகிறது.

கைத்தொழில் பிணக்கு ஏற்படும் போது முதலாளிக்கு எதிராக தொழிலாளியும் தொழிலாளிக்கு எதிராக முதலாளியும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதுவே கைத்தொழில் பிணக்குகளின் விளைவாகும்.

முதலாளிக்கு எதிராக தொழிலாளி பின்வரும் நடவடிக்கையில் ஈடுபடுவர்.

1. கைத்தொழில் பிணக்குக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக நாள், வாரம், மாதக்கணக்கில் வேலைக்கு செல்லாது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர்
2. வழமையான திறமையைக் காட்டாது மெதுவாகவும் மனவிரத்தியுடனும் வேலையை மேற்கொள்வர்
3. வழமையான வேலை நேரத்துக்கு மட்டும் ஊழியர் பணிபுரிவர். இங்கு மேலதிக நேர வேலை எதுவும் பொறுப் பேற்கப்பட மாட்டார்கள்
4. சுலோக அட்டைகள் பதாகைகள் போன்றவற்றை தாங்கியவாறு ஏனைய ஊழியர்களையும் கடமைக்கு செல்ல விடாது மறியற் போராட்டத்தில் ஈடுபடுவர்
5. குறித்த நேரத்துக்கு வேலை செய்யாது பிந்தி கடமைக்கு வந்து முந்தி செல்வதற்கு முயற்சிப்பார்

மேற்படி விளைவுகளில் தொழிலாளர்கள் ஈடுபடும் போது தொழில் தருனர் மேற்கொள்ளும் நடவடிக்கையாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்

1. கதவடைப்பு மேற்கொள்வார்
2. குறித்த தொழிலாளர்களை வேலையில் இருந்து இடைநீக்கம் செய்வர் அல்லது வேலையிலிருந்து நீக்கி விடுவர்

3. குறித்த தொழிலாளர்களின் பதவியை குறைப்பு செய்வர்

4. குறித்த தொழிலாளர்களுக்கு சம்பள குறைவை மேற்கொள்வர்

மேற்படி விளைவுகளில் இரு கட்சியினரும் மாறி மாறி ஈடுபடும் போது அது நிறுவன வளர்ச்சியையும் தொழிலாளர் வளர்ச்சியையும் பாதிக்கும். இதனை நீக்கிக் கொள்வதற்கு நடைமுறைக்கு வந்ததே 1950ஆம் ஆண்டு 43ம் இல கைத்தொழில் பிணக்கு சட்டமாகும். இச்சட்டத்தில் அரச ஊழியர் தவிர்ந்த ஏனைய ஊழியர் பாது காப்புப் பெறுவர்

கைத்தொழில் பிணக்குகளை பின்வரும் வழிகளில் தீர்க்கலாம் என இச்சட்டம் கூறு கிறது.

**கூட்டுப் பேரம்பேசல் கூட்டு விலை பேசல்?**
**( Conciliation )**

கைத்தொழில் பிணக்கை தீர்ப்பதற்கான முதலாவதும் சிறந்ததுமான வழியாக கூட்டு பேரம் பேசல் காணப்படுகின்றது. தொழில் தருனரும், தொழிலாளரும் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தொழில் பிணக்கை தீர்த்து வைக்கின்ற முறை கூட்டு பேரம் பேசல் எனப்படும்.

தொழில் கொள்வோர் தொழிலாளர் ஆகிய இருதரப்பினருக்கும் இடையே ஏற்படுத்தக்கூடிய ஓர் சமரச உடன்படிக்கை கூட்டு உடன்படிக்கை எனப்படும். கூட்டு உடன்படிக்கையானது சட்ட அந்தஸ்தை பெறவேண்டுமாயின் அது தொழில் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு தொழில் ஆணையாளரால் அரச வர்த்தக மானியில், செய்தித்தாளிலும் பிரசுரிக்க வேண்டும்.

- கூட்டு உடன்படிக்கையின் நோக்கமாக கைத்தொழில் பிணக்கை நீக்கி கட்சியினரிடையே சமாதானத்தை ஏற்படுத்தல்
- தொழில் சட்டத்தின் மூலம் கிடைக்கின்ற சலுகைகள் பயன்களிலும் பார்க்க சாதகமான நிலையை உருவாக்கல் போன்றவற்றை கூறலாம்

கூட்டு பேரம் பேசலால் வியாபாரிக்கு அல்லது தொழில் கொள்வோர்க்கு கிடைக்கும் நன்மைகளாக

பேச்சுவார்த்தை ஊடாக தொழில் தருனரும் ஒரு இணக்கத்துக்கு வரலாம்

- தொழில் கொள்வோருக்கும் தொழிலாளருக்கும் இடையில் சிறந்த தொழில் உறவு ஏற்படும்
- தொழிலாளர் மனநிலையில் திருப்தி ஏற்பட்டு உற்பத்தி, உற்பத்தித்தரம் கூடும்
- இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்படும் தகராறுகளை விரைவாக தீர்க்கலாம்

கூட்டு பேரம் பேசலால் தொழில் கொள்வோர் வியாபாரிக்கு ஏற்படும் தீமைகளாக

- தொழிலாளரது தொழில் சங்க நடவடிக்கை அதிக ஆதிக்கத்தை பெற்றுக் கொள்ளும்
- தொழில் கொள்வோர் தொழிலாளரது சம்பளங்களை உயர்த்த வேண்டி ஏற்படும்
- பிரச்சினை தொடர்பாக தொழில் கொள்வோர் சுயமாக தீர்மானம் எடுக்க முடியாது
- நிறுவனம் தொடர்பான தகவல் இரகசியங்களை தொழிலாளர்க்கு தொழில் சங்கத்துக்கு தெரியப்படுத்த வேண்டி வரும்

**தன்னிச்சை நடுவர் தீர்ப்பு :**

தொழில் தருனரதும் தொழிலாளரதும் விருப்பத்திற்கு உரிய ஒருவர் நடுவராக நியமிக்கப்பட்டு அவர் ஊடாக தொழிற் பிணக்கு தீர்த்துவைக்கின்ற முறை தன்னிச்சையான நடுவர்தீர்ப்பு எனப்படும்.

**கட்டாய நடுவர்தீர்ப்பு :**

தொழில் பிணக்கை தீர்த்துவைக்குமாறு தொழிலாளர் or தொழில் தருனர் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கும் போது தொழில் ஆணையாளரால் நியமனம் செய்யப்படுகின்ற நடுவர் ஊடாக தொழிற்

பிணக்கு தீர்த்துவைக்கின்ற முறை கட்டாய நடுவர் தீர்ப்பு எனப்படும்.

**தொழில் நியாய சபை :**
**Appeal to Labour Tribunal**

தொழில் பிணக்கை தீர்த்துவைக்கு மாறு தொழில் ஆணையாளருக்கு விண்ணப் பிக்கும்போது தொழில் ஆணையாளரால் நியமனம் செய்யப்பட்ட ஓர் சபையூடாக தொழில் பிணக்கு தீர்த்துவைக்கின்ற முறை தொழில் நியாயசபை ஆகும்.

ஒரு ஊழியர் வேலை நீக்கம் செய்யப் பட்டு 6 மாத காலப்பகுதியினுள் இச் சபைக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஊழி யர் பணிக்கொடை சம்பந்தப்பட்ட பிணக் குகளை இச்சபையால் தீர்த்துவைக்கப்படும்.

**கைத்தொழில் நீதிமன்றம் மூலமான தீர்ப்பு :**
**(Appeal to labour court)**

மாவட்டம் தோறும் காணப்படுகின்ற கைத்தொழில் நீதிமன்றம் தொடர்பாக தொழில் பிரச்சினை தீர்த்துவைக்கின்ற முறை கைத்தொழில் நீதிமன்றம் மூலமான தீர்ப்பு ஆகும். இதற்குரிய நீதிபதிகளை சனாதிபதியே நியமனம் செய்வர். இங்கு தொழிலாளரும் தொழில் தருனரும் தமது சார்பில் சட்டதரனிகளை நியமனம் செய்து தமது வாதங்களை முன்வைக்கலாம். இறு தியில் நீதிபதி கூறுகின்ற தீர்ப்புக்கு இரு கட்சியினரும் கட்டுப்பட வேண்டும்.

**இணக்கசபை மூலமான தீர்ப்பு :**

தொழிலாளர் பிரதிநிதிகள் தொழில் தருனர் பிரதிநிதிகளை சம எண்ணிக்கை யில் கொண்டு தொழில் ஆணையாளர் ஒரு சபையை உருவாக்குவார். இதன் தலைவ ராக தொழில் ஆணையாளர் இருப்பார். அவரூடாக தொழிற்பிணக்கை தீர்த்து வைக்கின்ற முறை இணக்க சபை மூலமான தீர்ப்பு எனப்படும்.

---

## ஸ்கந்தா பல்கலைக்கழக மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்

யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி கற்று இலங்கையில் உள்ள பல் கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களைக் கொண்ட அமைப்பாக இச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. கல்லூரி அதிபர் திரு. க. சிவாஜி அவர் களின் தலைமையில் சங்கமானது 25-02-2001 சனிக்கிழமை அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டு இச் சங்கத்தின் முதல் நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது நிர்வாகசபையில்

| | |
|---|---|
| தலைவர் : | திரு. அ. செல்வேன்றடாஸ் |
| செயலாளர் : | திரு. மு. தவேந்திரன் |
| பொருளாளர் : | திரு. பா. கமலநாதன் |
| உப - தலைவர் : | திரு. ரி. மங்களேஸ்வரன் |
| உப - செயலாளர் : | செல்வி ந. சிவரூபி |

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக திரு. சி. சிவமைந்தன், திரு. சி. கஜன், திரு. ம. ரவிபாலா, திரு. இ. ரமணன், செல்வி சி. சிவகாந்தினி ஆகியோரும் தெரியப்பட்டு நிர்வாகசபை உருவாகியது. பாட சாலை அபிவிருத்திப் பணி கருத்தரங்குகள் நடாத்தல், வசதி குறைந்த ஸ்கந்தா பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவுதல் போன்றன இதன் நோக்கங்களாகும். இதன் காப்பாளர்களாக கல்லூரி அதிபரும், ஸ்கந்தாவின் மாணவரான பல் கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இடம்பெறுவர்.

# ஈழத்தமிழர் இசை வளர்ச்சி

**N. மாதவன்**
*2001 கலை.*

இலங்கையில் தமிழர் அதிகமாகப் பரந்து வாழும் இடங்களாகிய வடக்குக் கிழக்கு மத்திய மலைப் பிரதேசங்களில் சாஸ்திரிய இசை, நாட்டார் இசை, பண்ணிசை போன்றவை வளர்ச்சி அடைந்திருக்கிறது. தமிழிசை என்பது இந்தியக் கர்னாடக இசை வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றது. ஈழத் தமிழ் மக்களிடையே சாஸ்திரிய இசை மரபிலே பிரதான மரபாக விளங்குகின்றது. இத்தமிழ் மக்களின் தாய்மொழி தமிழ் போல் பெரும்பாலானோர்கள் மதமும் இந்து மதமே. இந்து சமயத்துடன் பின்னிப் பிணைந்திருக்கும் கர்னாடக இசையாளர்கள் இத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் நன்கு செல்வாக்குப் பெற்று வளர்ச்சி அடைந்திருக்கின்றனர்.

இலங்கையை ஆண்ட இலங்கேஸ்வரன் என்னும் இராவணன் இந்த நாட்டின் மிகச் சிறந்த இசை மன்னன். வீணை வாத்தியத்தை இசைப்பதில் வல்லவன். வீணைக் கொடியோன் எனப் பெயர் பெற்றவன். கைலையைப் பெயர்ந்தெடுத்தவன். சாம கானம் பாடி இறைவனை மகிழ்வித்தவன் எனப் புராண இதிகாசங்கள் மூலம் நாம் அறிவோம்.

7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தென்னிந்திய இளவரசியாகிய மாருதப் புரவீக வல்லி என்பவள் கீரிமலையில் நீராடி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை வழிபட்டு அவளது குதிரை முகம் மாறியதால் அவ் இளவரசி ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து இந்தியாவில் இருந்து இசைக் கலைஞர்களை வரவழைத்து தமிழிசையை பரவச் செய்தாள்.

பல்லவர் காலத்தில் அதாவது 7ம் 8ஆம் நூற்றாண்டுக் காலகட்டத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருத சுந்தரமூர்த்தி நாயனாரும் ஈழத்தில் உள்ள சில தலங்களான திருக்கேதீச்சரம், திருக் கோணேச்சரம் ஆகிய இரண்டு ஸ்தலங்கள் மேலும் மூன்று திருப்பதிகங்களை பாடியதால் தமிழ் நாட்டினரைப் போன்று ஈழத்து அடியார்களும்அப்பாடலை ஓதிவந்தார்கள்.

இலங்கையை சோழர் ஆண்ட காலத்திலும் (கி. பி. 993 – 1070) திருமுறைகள் ஓதப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் பாடல் பெற்ற தலங்களுக்கும் ஆலய தர்மகர்த்தா சபையினரால் நியமிக்கப்பெற்றவர்கள் திருமுறைகளை ஓதுவதற்கு உரிமைபெற்று விளங்கினார்கள். ஆலயங்களில் கலை சமயத்தொண்டுகளைச் செய்வதற்காக "தேவரடியார்" என்பவர்கள் நியமிக்கப்பட்டார்கள். திருக்கோணேச்சரத்திற்கும் இத் தேவரடியார்கள் நியமிக்கப்பட்டதாக கோணேச்சரக் கல்வெட்டு வாயிலாக அறியப்படுகிறது. அவர்கள் பொலநறுவை தெவிநுவரை, கந்தளாய், முதலிய இடங்களில் இருந்த சைவ விஸ்ணு ஆலயங்களிலும் சேவை செய்ததாக அறியப்படுகிறது.

மதுரையில் இருந்து வந்த யாழ்பாடி ஒருவன் இங்கு மன்னன் முன் யாழ்மீட்டிப் பாடிக் கிராமம் ஒன்றினைப் பரிசாகப்பெற்றான் என்றும் அக் கிராமமே யாழ்ப்பாணம் எனப் பெயர்பெற்றது என்றும் யாழ்ப்பாணத்து வரலாறு கூறுகின்றது. 15ம், 16ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தென் இந்தியாவில் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு இசை வளர்ச்சியடைந்தது.

15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்து மன்னன் பரராஜசேகரன் கணிகையர்கள், நட்டுவ வாத்தியக்காரர்கள் ஆகியோரை ஓரிடமாய் வடபாகம் பயிலச்செய்தான் எனக் கூறப்படுகின்றது. இக்காலப் பகுதியில் தாளப்பாக்கம் சின்னையா பஜனைப் பத்ததிலை (பாரம்பரியத்தை) உருவாக்கி பக்திக் கீர்த்தனைகளைப் பாடினார் எனவும் அறியப்படுகிறது.

ஈழத்திலும் இவ் வளர்ச்சி முகிழ்ந்தது எனலாம். 17ம், 18ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதி ஓர் இருண்டகாலம் எனலாம். இக்காலப் பகுதியில் பல சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்ட காரணத்தால் இவ் ஆலயங்களைச் சூழ்ந்துள்ள கலைஞர்கள் தம் கலைகளை வளர்ப்பதைவிடப் பேணுவதையே முக்கியமாகக் கொண்டனர்.

1790ஆம் ஆண்டில் வைத்திலிங்கச் செட்டியார் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தைக் கட்டி இவ் ஆலயத்தில் இசைப்பதற்காக நாதஸ்வர, தவில் கலைஞர்களை இங்கு வரவழைத்து ஆலயச் சுற்றுப் புறங்களில் குடி அமர்த்தினார். ஆறுமுக நாவலர் இந்தியாவிலிருந்து ஓதுவார்களை அழைத்துத் தேவாரப் பாடல்களை பண்முறைப்படி ஓதுவித்தும் இதனை இங்கு ஆர்வமுள்ளவர்களுக்குப் பயிற்றுவித்தும் வந்தார். இக் கலைஞர்கள் வண்ணார்பண்ணை, வடக்கம்பராய், நீராவியடி, மந்துவில், கைதடி, காரைநகர் போன்ற இடங்களில் தங்கியிருந்தனர். போர்த்துகேயர், ஒல்லாந்தர் காலத்தில் ஈழத் தமிழர் இசை வளர்ச்சியில் இருண்ட காலமாக இருந்த போதிலும் 1796இல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இக் கலைகள் மீண்டும் புத்துயிர் பெறத் தொடங்கின. ஈழத்தமிழர் இசை வளர்ச்சிக்கும் பெரும்பணி புரிந்தவர்கள் நாதஸ்வரத் தவில்க் கலைஞர்களே. இக் கலைஞர்களின் நிகழ்ச்சிக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பும் இருந்தது. ஈழத்து இசை வளர்ச்சிக்கு ஆலயங்களும் முக்கிய பங்கினை வகித்திருக்கின்றன. ஈழத்தில் ஆலயங்கள் வளர்ச்சியடையத் தொடங்கிய காலகட்டத்தில் இந்தியாவில் இருந்துவந்த நாதஸ்வர தவில் கலைஞர்கள் ஆலயச் சுற்றாடலில் வாழ்ந்து இங்கிருந்த கலைஞர்களுக்கு இக் கலையினைப் பயிற்றுவித்தனர்.

19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் சிலர் இந்தியா சென்று குருகுல முறையில் இக் கலையைப் பயின்றனர். இம் மேளகாரக் குடும்பங்கள் மாவிட்டபுரம், அளவெட்டி, இணுவில், கோண்டாவில், சாவகச்சேரி, கைதடி, பருத்தித்துறை, மூளாய் ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர். இம் மேளகாரக் கலைஞர்களில் பலர் வாய்ப்பாட்டு வயலின் புல்லாங்குழல், மிருதங்கம், கடம், கெஞ்சிரா போன்ற இசைக் கருவிகளை இசைப்பவர்களாகவும் விளங்கினார்கள்.

ராகவிஸ்தாரம், ஸ்வரப் பிரஸ்தாரம், தாளத்திலுள்ள நுணுக்கங்களை வெளிப்படுத்தும் இவ் இசைக் கருவிகள்மூலம்ஈழத்து இசை வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை வகித்த சில நாதஸ்வர தவில் கலைஞர்கள் பின்வருமாறு. அண்ணாசாமிப்பிள்ளை, பக்கிரிசாமிப்பிள்ளை, வைரவநாதன், உருத்திராபதி, முருகையாபிள்ளை, தட்சணாமூர்த்திபிள்ளை.

1845க்குப் பின் கர்னாடக இசை வளர்ச்சியடையத் தொடங்கியது. ஈழத்து இசை வளர்ச்சியில் மிக முக்கிய பங்கினை வகித்தவர் புத்துவாட்டி சோமு என்றழைக்கப்படும் நா. சோமசுந்தரம். இவர் கர்நாடக இசை, பண்ணிசை ஆகியவற்றைப் பாடுவதுடன் ஸாரங்கி, வயலின் போன்ற இசைக் கருவிகளை இசைப்பதிலும் வல்லவராக விளங்கினார். இவற்றைத் தமது தந்தையராகிய நாகலிங்கம் என்பவரிடம் கற்றுக் கொண்டார். சிறந்த வாக்கேயகாரராகிய இவர் (சோமு) அபூர்வ இராகத்தில் வர்ணங்கள், கீர்த்தனைகள், தில்லானா போன்றவற்றை இயற்றியுள்ளார். அனேக தாளவர்ணங்களை உருவாக்கியுள்ளார்.

இயலிசை வாரிதி ந. வீரமணிஐயர் சிறந்த வாக்கேய காரராகத் திகழ்கின்றார். 1928ஆம் ஆண்டு சங்கீத சமாஜமும் 1930ம் ஆண்டில் கலாநிலையமும் இசை வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. 1931ஆம் ஆண்டு

''இந்திய இசை'' ''வீணை ஆசிரியர்'' எனும் இரு நூல்களும் திருமதி மகேஸ்வரி நவரத்தினம் என்பவரால் எழுதப்பட்டது. இக்கால கட்டத்தில் வட இலங்கை சங்கீத சபை திரு M. S. பரம் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டு நன்கு வளர்ச்சியடைந்தது. இச்சபை முதலாம் தரம் தொடக்கம் ஆசிரியர் தரம்வரை பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ்களை வழங்கிவருகின்றது. கோடை கால வகுப்புகளை நடாத்தி வந்த காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து சிறந்த வித்துவான்களான சங்கீத கலாநிதி சபேச ஐயர், பொன்னையாபிள்ளை, மருங்காப்புரி கோபாலகிருஷ்ணையர், சுந்தரேச ஐயர் துரைசாமி ஐயர் போன்றோர் இசைவளர்ச்சிக்குப் பணிபுரிந்தனர்.

சபேச ஐயர் தம்மிடம் கற்ற மாணவர்களில் திறமை மிக்கவர்களை இந்தியாவிற்கு அழைத்துச் சென்று பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து கற்று சங்கீத பூஷணங்களாக்கினார். யாழ்ப்பாணத்தில் முதல் சங்கீத பூஷணங்கள் P. சந்திரசேகரம் K. S. பால சுப்பிரமணிய ஐயர், K வேலாயுதபிள்ளை ஆகியோராவர். 1982இல் இருந்து பண்ணிசை, பரதம், கதகளி நாடகமும் அரங்கியலும் என்பவற்றிற்கும் பரீட்சைகளை நடாத்தி ஆசிரியர் தரம் அவைக்காற்று நிகழ்வில் சித்தியெய்தியோருக்கு கலாவித்தகர் எனும் பட்டத்தினை வழங்குகின்றது. 1966ஆம் ஆண்டு சேர் பொன் இராமநாதனின் மருமகன் சு. நடேசபிள்ளை இராமநாதன் இசைக் கல்லூரியை நிறுவிக் கற்பிப்பதற்கு இந்தியப் புகழ் வித்துவான்களான மகாராஜபுரம் விஸ்வநாதையர், மகள் சந்தானம், கல்யாணகிருஷ்ண பாகவதர், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, A. S. இராமநாதன் ஆகியோரை வரவழைத்து மாணவகர்களை உருவாக்கினார். இதில் நான்கு ஆண்டுகள் பயின்றவர்களுக்கு சங்கீத ரத்னம் பட்டப் வழங்கப்பட்டது. 1975ஆம் ஆண்டு இக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக தன்னை இணைத்துக்கொண்டது. அங்கு கற்று வெளியேறும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகம் டிப்ளோமா இசைக் கலைமாணி, நாட்டியக் கலைமாணிப் பட்டம் வளங்குகிறது. மட்டக்களப்பில் விபுலானந்தர் இசைக் கல்லூரியும் இசை வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது.

ஈழத்து இசை வளர்ச்சிக்கு மன்றங்களும் சிறந்த பங்கினை வழங்கியுள்ளன. ரசிகரஞ்சனசபா, அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், இளங்கலைஞர் மன்றம், மீசாலை தென்மராட்சி இசைக்கலை மன்றங்கள், கோப்பாய் கலைமன்றம், திருமலை தட்சிணகானசபை, கொழும்பு சைவ மங்கையர் கழகம், கொழும்பு கலாலயம், யாழ் நுண்கலைக் கழகம் போன்றவை இளங்கலைஞர்களை உருவாக்கி வருகின்றன. வடமாகாண ஆசிரியர் சங்கம், கொழும்பு விவேகானந்தசபை, இலங்கை இளங்கலைஞர் மன்றம் போட்டிகளையும் விழாக்களையும் நடாத்தி வருகின்றது. அகில இலங்கைக் கம்பன்கழகம் முதுகலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து தியாகராஜ உற்சவம் போன்றவற்றை நடாத்துகின்றது. கொழும்பு ஆடிவேல் விழாவுக்கு இந்திய இசைக் கலைஞர்களை வரவழைத்து இசைக் கச்சேரிகளை நடாத்தி வருகின்றது.

பாடசாலைகளில் ஒரு பாடமாக இசை புகுத்தப்பட்டதன் காரணமாக பின் தங்கிய கிராமத்துப் பாடசாலை மாணவர்களும் இசையைக் கற்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இசை வளரும் போது பண்ணிசை வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகித்தவர்கள் குப்பிழான் செல்லத்துரை, கொக்குவில் மு. குமாரசிங்கம், தாவடி


செ. இராசையா கட்டுவனூர் வி. ரி. வி. சுப்பிரமணியம் போன்றோர் ஆவர்.

நாடக மேடையில் இந்திய நாடக நடிகர்களுடன் இலங்கைக் கலைஞர்களும் நாடகப் பாடல்கள் பாடுவதில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். இவர்களுள் கர வெட்டி கிருஷ்ணாழ்வார், அச்சுவேலி இரத்தினம், நடிகமணி வி. வி. வைரமுத்து, புத்துவாட்டி சின்னத்தம்பி, முன்னர் குறிப்பிட்ட புத்துவாட்டி சோமு போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தியாவிலிருந்து எம். ஆர். கோவிந்தசாமிப்பிள்ளை, எஸ். ஜி. கிட்டப்பா, எம். கே. தியாகராஜபாகவதர், கே. பி. சுந்தராம்பாள் இங்கு பாடி நடித்திருக்கின்றனர் வயலின் கிளரினெட், ஹார்மோனியம், புல்லாங்குழல், மிருதங்கம், டொல்சி ஆகிய கருவிகள் இந் நாடகங்களுக்குக் பயன்படுத்தப்பட்டன.

கதா கலாஷேபம், பஜனை, புராண படலம் மூலமாகவும் ஈழத்தில் இசை வளர்ந்திருக்கின்றது. ஈழத்தமிழ் இசையில் பொப் இசை மெல்லிசைப் பாடல்கள் என்பன மக்களால் வரவேற்கப்படுகிறது. ஐரோப்பிய ஆட்சியின் பின் பிற இசைகளின் தாக்கம் ஐரோப்பிய இசை முறை நம் இசையில் கலந்துள்ளது. ஐரோப்பிய இசைக் கருவிகளில் பல நம் நம் கலைஞர்களால் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. கிருஸ்தவ இஸ்லாமியப் பாடல்கள் எமது இசை மெட்டுக்களில் பாடப்படுகின்றன. அனேக இளம் கலைஞர்கள் வேகமாக வளர்ந்து வருகின்றனர். எமது கலைஞர்கள் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் இசை நிகழ்சிகள் கொடுத்தும் இசையைப் பரப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## எங்கள் வினோவுக்கு
# இதய அஞ்சலி



**புவியில் :** 19 - 07 - 1979

**விண்ணில் :** 03 - 11 - 1999

**அமரர் செல்வி ச. வினோதினி**

*(1999 — க. பொ. த. உயர்தரம், கலைப்பிரிவு மாணவி.)*

# ஒறேற்றர் ஞாபக நினைவுப்பேருரை

## கல்வியும் மனித ஆளுமையும்

**வைத்திய கலாநிதி C. S. நச்சினார்க்கினியன்,**
விரிவுரையாளர்,
( சமுதாய மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம். )

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே. தென்னிந்தியத் திருச்சபை ஆயர் வணக்கத்திற்குரிய கலாநிதி ஜெபநேசன் அடிகளார் அவர்களே. திரு. சுப்பிரமணியம் அவர்களுடன் கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியர் ஞானச்சந்திரமூர்த்தி அவர்களே. கல்லூரி ஆசிரியர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, அன்பிற்குரிய மாணவர்களே அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

30 ஆண்டு காலம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி, கந்தரோடைப் பள்ளியை இலங்கையின் முன்னணிப் பள்ளிக்கூடங்களில், ஒன்றாகக் கொண்டு வந்த ஒரு கல்விமான். மனித நேயம் மிக்கவர், ஆளுமைத் திறன் வாய்ந்த பெரியவர் ஆன திரு. சுப்பிரமணியம் அவர்களின் ஏழாவது நினைவு தினமான இன்று, அதே பள்ளிக்கூடத்தில், அவர் நினைவாக கல்வியும் மனித ஆளுமையும் என்பது பற்றி கருத்துக்கூற வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. தலை சிறந்த பேச்சாளரான ஒறேற்றர் சுப்பிரமணியம் பற்றிப் பேச நான் ஒரு ஒறேற்றர் இல்லை என்றாலும் ஸ்கந்தாவை ஒரு ஒறேற்றர் சுப்பிரமணியம், யாழ் இந்துவை ஒரு சபாரட்ணம், சென் ஜோன்ஸ் ஐ. ஒரு P T மத்தாயஸ், ஹாட்லியை ஒரு பூரணம்பிள்ளை, பரமேஸ்வராவை ஒரு சிவபாதசுந்தரம் என்று இன்னும் கல்வியுலகம் பெருமையுடன் நினைவு கூரும் ஜாம்பனர்களாக இவர்கள் யாழ்ப்பாணக் கல்வியுலகை ஆட்சி செய்த அந்தக் காலத்தில் மாணவனாக இருந்த ஒரு பெருமையில் இன்று உங்களுக்கு கல்வியும், மனித ஆளுமையும் என்ற தலைப்பில் பேசுவது பொருத்தமாக இருக்கும்.

அது என்ன அந்த ஆளுமை? ஆங்கிலத்தில் Personality என்று கூறுவார்கள் தமிழும் சரியாகத் தெரியாமல் ஆங்கிலமும் விளங்காமல் தமிங்கிலம் பேசும் நம்மவர் உடல்வாகை Personality என்று கூறுவார்கள். நெடிது வளர்ந்த தோற்றம். அதற்கேற்ப பருமனுடன் இருக்கும் ஒருவரைப் பார்த்து ''என்ன Persnality அப்பா அவனுக்கு''? என்று பல முறை, அதுவும் படித்தவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அது Personality அல்ல, அது Physique - உடல்வாகு, Personality அதாவது ஆளுமைப் பண்பு என்பது அவரது குணநலன்கள் ஒருவர் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் என்ன விதமாக நடந்துகொள்வார் என்பதைச் சுட்டுவதாகும். முன்பு நான் குறிப்பிட்ட பாடசாலை அதிபர்கள் எல்லோரும் சிறந்த ஆளுமைத் திறன் பெற்றவர்கள். அஞ்சாதவர்கள், நெஞ்சுரம் கொண்டவர்கள், தவறாக நடந்து கொண்ட பெரும் கல்வி அதிகாரிகளைக் கூட வெளியே நிறுத்தியவர்கள். இத்தகைய ஆளுமைப் பண்பு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது? அதுவும் இவர்கள் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் இருந்தவர்கள். 1ஆம் மகா யுத்த காலத்தில் பிறந்து 2ஆம் உலக யுத்த காலத்தில் இளைஞர்களாக இருந்தவர்கள். அவர்களுக்கும் எமது தலைமுறைக்கும் என்ன வித்தியாசம்?

அவர்களது ஆளுமைப் பண்பு எதில் தோன்றியது?

எமது ஆளுமைப் பண்புகளுக்கும் மனத்திற்கும், மூளைக்கும் நிறைய சம்பந்தம் உண்டு. மனம், உள்ளம் என்று நாம் நெஞ்சைத் தொட்டுச் சொல்வது தவறு. மனம் என்பது மூளையில் நடக்கும் தொழிற்பாட்டின் வெளிப்பாடாகும். ஆகவே மனம், உள்ளம் மூளையில் தான் இருக்கின்றது. இந்த மூளை இன்று உலகத்தில் இருக்கும் ஆயிரக்கணக்கான கணணிகளை இணைத்தாலும், அதைவிடச் சிறப்பாக செயலாற்றும் ஒரு உறுப்பு. கணணியை உருவமைத்து இயக்குவதே இந்த மூளைதானே. கணணி சொன்னதைத்தான் பதிந்து கொள்ளும். மூளை அப்படி அல்ல. மூளை எந்த விசயத்தையும் பதிந்து வைத்துக்கொள்ளும் நல்லது, கெட்டது, ஆனந்தம் தருவது, துன்பம் தருவது என்ற வித்தியாசம் பாராட்டாது பார்க்கின்றவை, கேட்பவை, சுவைத்தவை, முகர்ந்தவை என்ற அனைத்து புலன்களினூடாக உணரும் அனைத்தையும் பதிந்து வைத்துக் கொள்ளும். எதையும் மறப்பதில்லை, பள்ளிக்கூடத்தில், வீட்டில் Tutoryல், படித்த பாடம், வாங்கிய அடி, பேச்சு, ஓடியாடி விளையாடிய மகிழ்ச்சி, தோற்ற போது அழுகை, எல்லாம் உள்ளே உள்ளத்தில் பதிக்கப்படுகின்றன. அது எதையும் மறப்பதில்லை. பரீட்சை மண்டபத்தில் கேள்விக்கு மறுமொழி எழுதும் போது மட்டும் ஞாபகத்திற்கு வராது. செண்பகப்பெருமாள் கோட்டை அரசனாகிய போது கஜபாகுவா? பராக்கிரமபாகுவா? விஜயபாகுவா? என்ன பேர் வைத்துக்கொண்டான்? விடையெழுதும் போது ஒரே குழப்பம், ஆனால் விடைத்தாளைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தவுடன், அல்லது உணவு சாப்பிடும்பொழுது ஞாபகம் வரும். அதாவது மூளை மறக்கவில்லை. இவ்வாறே பிறந்ததில் இருந்து வாழ்க்கையில் நடந்த, தெரிந்துகொண்ட அனைத்தும் மூளையில் பதியப்பட்டவையே நாம் பிற்காலத்தில் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறோம் என்பதைக் காட்டும். நாம் எவ்வாறு நடக்கிறோம் என்பதுதான் எமது ஆளுமைப் பண்பு. சிறுவயதில் அடித்து துன்புறுத்தப்பட்டவர், பிற்காலத்தில் பெரியவரானதும் மற்றவர்களைத் துன்புறுத்துகிறார். அதில் அவருக்கொரு சந்தோஷம். சிறு வயதில் நண்பர்களால் இகழப்பட்டு வந்தவர் பிற்காலத்தில் தன்னம்பிக்கை அற்றவராக வளருகிறார். சிறு வயதில் நாயினால் கடிபட்டவர் அல்லது வேறொருவரால் நாய் கடிக்கும் என்று திரும்பத் திரும்ப பயமுறுத்தி வளர்க்கப்பட்டவர், பெரியவரானதும் நாயைக் கண்டவுடன் திகிலடைந்து ஓடி, பயந்த சுபாவம் கொண்ட நாயிடமும் கூட கடிவாங்குவார். ஆகவே எங்களுடைய ஆளுமைப் பண்பு பிறந்ததில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளும் அனுபவங்களின் தொகுப்பு ஆகும்.

எனவேதான் நாம் பார்ப்பவை, கேட்பவை, உணர்பவை நல்லவைகளாக இருக்க வேண்டும். இன்று உலகத்தை ஆங்கிலத்தில் Global village என்று கூறுவார்கள். அதாவது உலகு ஒரு பூகோளக் கிராமம் என்பது கருத்து. எவ்வாறு ஒரு கிராமத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் மற்றவர்களுக்கு எளிதில் தெரிந்துவிடுகின்றதோ, அவ்வாறே இன்று உலகம் முழுவதும், வேண்டிய நல்ல, வேண்டாத அசிங்கமான சம்பவங்களை உலகம் முழுவதும் பலவகைப்பட்ட ஊடகங்கள் மூலம் உடனடியாகக் காட்டப்படுகின்றன. இதனால்தான் தரம் குறைந்த சினிமாக்களும், பாடல்களும், கதைகளும் சீராக இயங்குகின்ற மனதை திசைதிருப்பி விடுகின்றன. ஒழுக்கத்திற்குப் புறம்பான தூண்டல்கள் மனதைக் கிளர்வடையச் செய்கின்றன. சட்டத்திற்குப் புறம்பான, மனிதத் தன்மைக்கு ஒவ்வாத நிகழ்ச்சியை தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் இருந்து சிறுவர் முதல் பெரியவர் வரை, குமரியில் இருந்து கிழவிவரை பார்க்கிறார்கள்.

கதறக் கதற ஒரு பெண்ணைக் கற்பழிக்கும் காட்சியைப் பார்க்கும் அந்த ஒரு வயது கூட நிரம்பாத சிசுவின் மூளையிலும் இந்தக் காட்சிகள் பதியப்படுகின்றன. அவன் 20 வயதில் தனக்கு விருப்பமில்லாத 80 வயதுக்கிழவியை என்ன செய்ய விரும்புவான் என்பது இப்பொழுது தீர்மானிக்

கப்படுகின்றது. எனவே இவ்வாறு அடிக்கடி, மாறி மாறி மனதில் பதியப்படுகின்ற அனுபவங்கள், எமது மனதை, ஆளுமைப் பண்பை எந்தப் பக்கமாகச் செலுத்தப் போகின்றதோ அந்த ரம்பாவுக்கும், பட இயக்குநருக்கும் நிச்சயம் தெரியாது. ஆனால் உளவியலாளர்கள், சமூகவியலாளர்களுக்குத் தெரியும். தெரிந்ததால் எதிர்கால சமூகத்தினராகிய உங்களைப்பற்றிப் பரிதாபப் படுகின்றார்கள். எங்கள் சிந்தனை, முடிவு எடுத்தல் என்பன எல்லாம் இந்த சினிமா அனுபவங்களையும், தூண்டல்களையும் நிலையாக வைத்து அமைந்துவிடக் கூடிய ஆபத்து இன்று இருக்கின்றது. அதிலும் யாழ்ப்பாண சூழ் நிலை இன்னும் அதிக ஆபத்துமிக்கதாக இருக்கின்றது. நான் கூறுகின்ற ஆபத்து இராணுவ கெடுபிடிகளையோ, ஷெல்லடிகளையோ, துப்பாக்கி வெடிகளைப் பற்றியோ அல்ல. அதைவிடக் கெடுதி நிறைந்ததாக இருக்கும் கல்வி நிலைமை. கல்விதான் முக்கியம். ஆனால் அதற்காகக் காலையில் எழுந்தவுடன் ரியூட்டரி. ரியூட்டரியால் வந்தவுடன் உணவருந்திவிட்டு பள்ளிக்கூடம், அது முடிந்தவுடன் இன்னொரு ரியூட்டரி அல்லது பிரத்தியேக ரியூசன், இது முடிய பள்ளிக்கூட, ரியூட்டரியில் கொடுக்கப்பட்ட வீட்டு வேலை, பிள்ளைக்கு விளையாட நேரமில்லை, பெற்றோருடன் பேசி ஆனந்தப் பட நேரமில்லை, அதாவது ஆரோக்கியமான மனவளர்ச்சி இல்லாத ஒரு கெட்டிக்கார ஐடத்தை உருவாக்க நாம் முயற்சி செய்கிறோம். அது 8டி வாங்கி 4ஏ பெற்று மருத்துவக் கல்லூரிக்குச் சென்று பல தங்கப் பதக்கங்களையும் பெற்றாலும், நோயாளிக்கு நல்ல வார்த்தை இரண்டு சொல்லத் தெரியாத, நண்பர்களுடன் பழகத்தெரியாத, மற்றவர்களுடன் சேர்ந்து வாழ முடியாத ஒரு பிரகிருதியாக, வாழ்க்கையில் தோல்விகாணும் ஒரு பட்டதாரியாக, எம்மால் '' இது '' உருவாக்கப்படுகின்றது.

இதற்கு மகுடம் வைத்தாற்போல் போர்க்கால பிரச்சினைகளும், இழப்புக்களும், பதகளிப்பும், படபடப்பும், வேலையின்மை, இருக்க இடமில்லை, போன்றவையெல்லாம் சேர்ந்து மனதை நெருக்குகின்றன, நொறுக்குகின்றன. இதனால்தான் மாணவர்களுக்கு விளையாட்டு, தேகப் பயிற்சி போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. பல தரப்பட்ட மன உளைச்சல்களை இவற்றின் மூலம் வராமல் தடுக்கலாம். வந்தவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். ஆனால் இவற்றுக்கு எங்கே நேரம்? மாணவர்களைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள் நல்ல நோக்குடன்தான் என்றாலும், அதிக புள்ளிகள் எடுப்பதற்கு, அளவுக்கதிகமாக நெருக்குகின்றனர். இந்த நெருக்கீடுகள், சூழ் நிலை நெருக்கீடுகள், அனைத்தும் சேர்ந்துஇளம் சமுதாயத்தினரை சாதாரண மனநிலையில் இருந்து தளம்பி மனவடு என்னும் பாழும் கிணற்றில் தள்ளி விடுகின்றது.

நாம் இந்த சந்தர்ப்பத்தில் இன்னும் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். குரங்கு, நாய், யானை, கரடி போன்ற பல தரப்பட்ட மிருகங்களை மனிதன் பழக்கி வேலைகள் செய்விக்கின்றான். அவற்றின் மூளையும், அதாவது அவற்றின் '' மனதும் '' பழகிய பழக்கங்களை மறப்பதில்லை. அதன்படி நடந்து கொள்ளுகின்றன. ஆனால் மனித மனதுக்கும் மிருக '' மனதுக்கும் '' மாபெரும் வித்தியாசம் இருக்கின்றது. மிருகங்கள் பழகியவற்றை சிந்திக்காமல் செயற்படுத்தும். நாய் புதிதாக வருபவர் எவராக இருந்தாலும் குரைக்கும், நெருங்கி வந்தால் கடிக்கும். வந்தவர் நல்லவரா? கெட்டவரா? தீங்குசெய்ய வந்தவரா, கொடுமைபுரியவந்தவரா, உதவிக்கு வந்தவரா என்பது பற்றி சிந்திக்காது. காரணம் மிருகங்கள் சிந்திக்காமல் பழக்கி வைத்தபடி செயலாற்றுவன. ஆனால் மனிதன் அவ்வாறல்ல. சிந்திக்கத் தெரிந்தவன். மூளையின் பதிவில் பழக்கத்தின் பிம்பம் படித்திருந்தாலும் முளியின் சிந்தனைத் தெளிவு செயலை சரியானபடி மாற்றி அமைக்கின்றது. உபத்திரவம் கொடுக்க வந்தவரா, உதவிசெய்ய வந்தவரா என அறிந்து அதற்கேற்றபடி உடலைச் செயற்பட வைக்கின்றது. இதனால்தான் மனித செயற்பாட்டிற்கு மானிட அறிவு மனிதம் தார்மீகம் அவசியமாகின்றது எமது

ஆளுமை மனித தர்மத்தை, மேம்பாட்டை நோக்கியதாக அமையவேண்டும். மேலோங்கிய சிந்தனைத்தெளிவுடன்செயற்பட எமது மனம் அன்பின் அடிப்படை உடையதாக, மனித ஒழுக்க நெறியைப் பின் பற்றியதாக மானுட தர்மத்தின் செயற்பாடாக மாற வேண்டும். சாந்தம் சமுதாயத்தில் நிலவும். ஆனால் அந்த அறிவு சிறு வயதிற்குள் புகட்டப்பட வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளைவது கடினம்தான். அதற்கு சிறைத்தண்டனை, தூக்குக் கயிறு. எ. கே. 47, ரி. 56 என்று பல தேவைப்படலாம். எமது சமுதாயத்தில், பலருடைய எண்ணம், பல்கலைக்கழகத்திற்கு புதிதாக வந்த மாணவர்கள், அவர்களுடைய புகுமுக காலங்களில் நடைபெறும் பகிடிவதை காலத்தில்தான் புகை பிடிக்கத் தொடங்குகிறார்கள் என்பதாகும்.

ஆனால் பல்கலைக்கழகத்தில் புகைத்தல், மது பாவித்தல் பழக்கங்களை உடைய பழைய மாணவரிடையே செய்த ஆய்வுகள், ஏறத்தாழ அரைப்பங்கினர் பள்ளிக்கூடங்களில் படிக்கும் காலத்திலேயே புகைத்தல், மது அருந்துதல் முதலியவற்றில் ஈடுபட்டவர்கள் என்பது தெரிய வந்தது. ஒரு சிலர் பாலுறவு அனுபவத்தையும் பள்ளி வாழ்க்கையிலேயே படித்துவிட்டார்கள் என்பதும் தெரியவந்தது.

மாற்றுவதற்கு மருந்தில்லாத HIV, AIDS, Genital warts என்ற பாலியல் நோய் ஒரு புறம், பழகிக் கொண்டால் அடிமை கொள்ளும் மதுவும், சிகரட்டும் மறுபுறம், அத்தோடு சேர்ந்து போதைவஸ்து பாவனை அதற்கு மேலாக, என்று எண்ணிப் பார்க்கையில், எதிர்கால சமுதாயத்தை, அதாவது இன்றைய மாணவர்களை எவ்வாறு இப்பொறிக்குள் விழாமல் தடுக்க முடியும் என்று சிந்திக்க வேண்டியது எமது கடமையாகும். கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் ஒரு மதுபானக் கடையைக் காண்பதற்கு சில கிலோ மீற்றர்கள் செல்ல வேண்டியிருக்கும். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் உத்தரவுபெற்ற மதுபானச் சாலைகள் பலவற்றைக் காணமுடியும். உயிர் காக்கும் மருந்துகளை கப்பலில் இருந்து பருத்தித்துறையில் இறக்கிக்கொண்டிருக்கும் வேளையில் அதைத் தடுத்து நிறுத்தி, மதுபானம் கொண்டு வந்த கப்பலைத் துறைமுகத்திற்கு அழைப்பித்து மதுபானங்களை முதலில் இறக்கிய பெருமை யாழ்ப்பாண மக்களையே சாரும். உயிர்காக்கும் மருந்துகளைத் தள்ளி, உயிர் போக்கும் குடிபானங்களை அவசர அவசரமாக இறக்கி மற்றவர்களின் சிரிப்புக்கு ஆளாகிய பெருங்குடி மக்கள் நாங்கள்.

உணவுத் தட்டுப்பாடு நிலவும் இந்நாட்களில், உணவு முதலிய அத்தியாவசியப் பொருட்களின் விலை கொழும்பு விலையை விட உயர்ந்துவிடும், ஆனால் பத்திரிகை விளம்பரமோ, யாழ்ப்பாண மக்களின் நன்மைகருதி கொழும்பு விலையிலேயே சிகரெட் விற்பனை செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதை குறிக்கின்றது. அதுவும் குறைவில்லாமல் கிடைப்பதற்காக இங்கு தேவையான அளவு களஞ்சியப்படுத்தப்படுகின்றதாம்.

மாணவர்களே உங்களையெல்லாம் எவ்வளவு முட்டாள்கள் ஆக்குகின்றார்கள். புற்றுநோயும், சுவாச, இருதய நோய்களும் உங்களை வந்தடைய வகை செய்கிறார்கள் '' இப்பெரியார்கள் ''. இவற்றுக்கெல்லாம் இடம்கொடுக்காமல் இப் பழக்கங்கள் ஆபத்தானவை. இவை ஒதுக்கப்பட வேண்டியவை என்று கூறும் திறன் உங்களிடையே ஏற்படுமானால் அதுதான் பண்பு. இது சரி, அது பிழை, இது நல்லது. அது ஆபத்தானவை என்று சொல்லும் வகைதெரிந்து செயற்படுவது ஆளுமை. இது வீட்டில் பெற்றோரால் தங்கள் நடத்தை மூலம் பிள்ளைகளுக்கு ஊட்டப்பட வேண்டும்ஆசிரியர்கள் தங்கள் கல்வி முறைக்கூடாக மாணவர்களுக்கு புகட்ட வேண்டும் தாங்கள் முன் உதாரணமாக திகழவேண்டும். அதுவே மாணவர்கள் மனதில் நல்ல உளப்பாங்கை விருத்தி செய்யும். ஆகவே சீரான உளப்பாங்கு மாணவர்கள் மத்தியில் இருந்தால் அவர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாக வாழ்வார்கள். அவர்கள் துவிச்சக்கர வண்டியில் சவாரி செய்யும் பொழுது 3, 4 பேர்

கைகோர்த்தபடி பாதையை அடைத்துக் கொண்டுசெல்ல மாட்டார்கள். பின்னால் வருபவர்கள் செல்ல முடியாமல் முந்த முயற்சிசெய்து விபத்திற்கு ஆளாவதை தவிர்ப்பார்கள். நன் மனித ஆளுமை உள்ளவர்கள் என்றால் மற்றவர்களுடைய நலனில் அக்கறை செலுத்துவார்கள். மற்றவர்களுடைய உரிமைக்கு மதிப்புக் கொடுப்பார்கள். இன்று நாம் எப்படி பொதுவான ஒரு பாதையில்போகும் மற்றவர்களுடைய உரிமையை மறுத்து நாம் பாதையை அடைத்துக்கொண்டு போகின்றோமோ அது போன்றே தென்னிலங்கை அரசியல் வாதிகள் எங்கள் பாதையை அடைத்து, முன்னேறும் உரிமையை மறுக்கிறார்கள். இங்கு நாம் மற்றவர்களுக்கு அவர்களுடைய சுதந்திரத்தை, உரிமையை மறுத்தால், எமக்கு பாடம் அங்கிருந்து புகட்டப்படுகின்றது. ஆகவே எமக்கு எது சரி என உணர்ந்து அதை நடைமுறைப்படுத்தும் மானுட ஆளுமைப் பண்பு வரவேண்டுமானால், முதலில் எது சரி என்பதை உணரவேண்டும். அதை எமக்குத் தெரிவிப்பதுதான் கல்வி.

''O/L''ல் 8டி எடுப்பதும் ''A/L''ல் 4ஏ கள் எடுப்பதும், பல்கலைக்கழகத்தில் தங்கப்பதக்கங்கள் பெறுவதும் தான் கல்வி என்றால் அது ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது தூக்கி எறிந்துவிட வேண்டும். கல்வி என்பது எமக்கு, எது சரி, எது பிழை எது தர்மம், எது அதர்மம், எப்படி நாம் நடந்துகொள்ள வேண்டும் என்று சிந்தித்து சரியானதைப் பகுத்துணர்ந்து செயலாற்ற வைக்கின்றது. கல்வி எமக்கு ஒழுக்கத்தைத் தருகின்றது. அந்த ஒன்றைத் தான் கற்பிக்கின்றது. ஒரு எழுத்தை எழுத வேண்டுமா? அது இப்படித்தான் எழுத வேண்டும் ''அ'' வை ''க'' வை வேறுவிதமாக எழுத முடியாது. ஒரு சொல்லை உச்சரிக்க வேண்டும். ஒரு கணக்குப் போட வேண்டுமா? 15 ஐயும் 13 ஐயும் கூட்டினால் 28 தான். 27 போடமுடியாது. அது பிழை, நீர் 100 பாகை செல்சியஸ்ஸில் தான் கொதிக்கும். 15ல் கொதிக்க முடியாது. பூமி தன்னைத் தானே சுற்றுவதற்கு 24மணி நேரம் செல்லும். அது சூரியனை ஒரு முறை சுற்றிவர $365\frac{1}{4}$ நாட்கள் எடுக்கும். இதில் எங்கேயும் மாற்றம் இருக்காது. அங்கு ஒழுங்கு மாறாது. பௌதீகவியலானாலும், இரசாயனவியலானாலும். இலத்திரனியல் ஆனாலும் இந்த நடத்தை ஒழுங்குமாறாது. கோடி வருடங்கள் ஆனாலும் மாறாது. மாறினால் குழப்பமாகிவிடும். நடக்க முடியாதது நடந்து ஒரே அழிவாகிவிடும்.

பூமி சுழலும் வேகத்தை குறைத்தால், பாதை மாறினால், நீர் 50 பாகை செல்ஸ்சியஸில் ஆவியானால், இரும்பு நீரில்பட்டு துருப்பிடிக்காமல் வெள்ளியாக மாறினால் ...... இது எல்லாம் நடக்காது. ஒழுங்கு தவறாது, ஏன் நாம் மட்டும் ஒழுங்கு தவறுகிறோம், ஒழுங்கு மாறுகிறோம். ஏன் அழிந்து போகிறோம். குத்திக் கொலை செய்கிறோம், கொலை செய்யப்படுகிறோம். காரணம் ஒழுங்கான ஒழுங்கு தவறுகின்றது. தர்மம் பிழைக்கின்றது. அதற்குக் காரணம் உண்டு. அது கல்வி இன்மை ; அறியாமை, நல்ல கல்வி உயர் அறிவைத் தரும், ஒழுக்கத்தைத் தரும், செயல்களில் தர்மம் நிலைக்கும். செயல்கள் சரியானவையாக இருக்கும். மனம் அமைதி பெறும். எனவே மனதில் குழப்பம் இருக்காது. தெளிவாகச் சிந்திக்க முடியும் படித்தது எல்லாம் ஞாபகத்திற்கு வரும். ஆகவே நல்ல கல்வி என்பது ஒழுக்கம் நிறைந்தது. அறனை வலியுறுத்தும், எமது மனிதத் தன்மையை மேம்படுத்தும், ஆளுமைத் திறனை விரிவாக்கும். இவற்றை எமக்கு

உச்சரிக்க வேண்டுமா? அதை இப்படித்தான் தருவதுதான் கல்வி. தராதது எல்லாம்

குப்பை, நல்ல கல்வி முகத்தில் அழகான கண்களாக ஒளிரும். குப்பை என்றால் கண்களே முகத்தில் அசிங்கமான புண்ணாக மாறும். ஆகவே எனது அருமை மாணவச் செல்வங்களே ஸ்கந்தா உங்களுக்கு நல்ல கல்வியை, ஒழுக்கத்தை அறிவினை முன் நிலைப்படுத்திக் கொடுத்து, உங்களின் மனிதத்தன்மையை மேலோங்கச் செய்து, அவற்றின் மூலம் ஆளுமைப் பண்பை வளர்க்க அந்த மராட்டிய வீரத் தலைவன் சிவாஜியின் பெயர் தாங்கி நிற்கும் இந்த சிவாஜியின் தலைமைத்துவத்தில் இயங்கும் ஆசிரியர் குழாம் அனைத்து உதவிகளையும் செய்ய இறைவனை வேண்டுகின்றேன்.

முருகன் என்றால் தமிழ்த் தெய்வம். இங்கு திருமுருகன் தமிழையும், சைவத்தையும் புகட்டுகின்றார். அதுவும் ஆறுதிரு முருகன். ஆகவே உங்கள் மொழி ஆற்றலும் ஆன்மீக அறிவும் மிக உயர்ந்த நிலைகளை அடைய வாய்ப்புக்கள் அதிகம். ஆறு திருமுருகன் அவர்கள் இன்றைய நிகழ்வில் பேசுவதற்கு பேச்சை ஆயத்தப்படுத்த தேவையான அளவு முன்னறிவித்தல் தராமல், ஆனால் வரமுடியாது என்று கூறவிடாமல், தனது பண்பு நிறைந்த அன்பால் என்னைக்கொண்டு வந்துவிட்டார். அந்த கல்வி சொந்த மனித அன்பு ஆளுமைப் பண்பு உங்கள் அனைவரையும் அரவணைத்து வளர்க்கட்டும்.

இன்றைய தினம் என்னையும் எனது மனைவியையும் இந் நிகழ்விற்கு அழைத்து கௌரவித்தமைக்கு எங்கள் அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் ஆரம்பயுகம்

ஆக்கம் :
**அ. பஸ்ரியன்**
99 கலைப்பிரிவு.

இலங்கைத் திருச்சபை வரலாறானது 1505இல் போத்துக்கீசரின் வருகையுடனே ஆரம்பமாகியது எனக் கூறுவர். ஆனால் போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்னரே இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை நிலத் தடி நீரோட்டம்போல் இலங்கையில் காணப் பட்டுள்ளது என்பதனை பல்வேறுபட்ட சான்றாதாரங்கள் மரபுக்கதைகள் மேலை நாட்டு எழுத்தாளர்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே இங்குகாணப்பட்ட ஆரம்பத்திருச்சபையை ஆரம்பயுகம் என அழைப்பர் (1—16ஆம் நூ. ஆ.) ஆரம்பயுகத்தில் கடுகுமணி போல்காணப்பட்ட திருச்சபைதான் போர்த் துக்கீசரின் வருகையோடு பெருவிருட்சமாக வழர்ந்துள்ளது என்பதே உண்மையாகும்.

இவ்வகையில் நாம் ஆரம்பயுகம் பற்றி ஆராயுமிடத்து அங்கு கிறீஸ்தவம் இருத்தமைக்கான சான்றாதாரங்களை கத்தோலிக்க அறிஞர்கள் தெழிவாக உறுதிப் படுத்துவதற்காக அவற்றை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பகுத்து ஆராய்துள்ளனர் அவ்வகையில் பாரம்பரியமாக வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த மக்களிடையே வாய்மொழியாகப் பேணப்பட்ட மரபுக்கதை களாகவும், ஏட்டுச்சான்றுகள் புதைபொருள் சான்றுகள் என இரு பிரிவுகளாகப் பிரித்து ஆதாரமுள்ள ஆதாரமற்ற தகவல்கள் என பட்டியல் படுத்தி உள்ளார்கள்.

ஆதாரமுள்ள தகவல்கள் எனும் வகை யில் ஆராயுமிடத்து இந்தியக் கப்பலோட் டியான கொஸ்மஸ் இண்டிக்கொபிளஸ்தர் தனது ''கிறீஸ்தவ சபைகளின் விபரணம்'' எனும் நூலில் (கி. பி. 535இல்) கி. பி. 6ஆம் நூற்றாண்டில் இலங்கையில் கிறீஸ் தவம் இருந்துள்ளது என கூறுகிறார் மேலும் அவர் குறிப்பிடுகையில் அநுராதபுரம் எனு டத்தில் ஓர் சிற்றாலயமும் சில கிறீஸ்தவ குளுமங்களும் காணப்பட்டதாகவும் வழி பாடுகள் நிறைவேற்ற ஒரு குரு இருந்ததா கவும் குறிப்பிடுகின்றார். மேலதிக ஆய்வு களின்படி இவர் ஒரு கிரேக்கத்துக்கான வர்த்தகப்பிரயாணி என அறியமுடிகின்றது. எனவே இவர் இலங்கைக்கும் வந்து மேல் கண்ட தகவல்களை நேரில் கண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது இப்பின்னணியில் இத்தகவலை உறுதிப்படுத்த கி. பி. 1912ஆம் ஆண்டில் அநுராதபுரத்தில் நடைபெற்ற அகழ்வாராட்சியின் போது அங்கு ஓர் நெஸ் தோரிய சிலுவை கண்டெடுக்கப்பட்டது. இச்சிலுவை அநுராதபுரத்தில் ஸ்பாணிய வர்த்தகர்களால் உருவாக்கப்பட்ட ஆலயத் தின்மேல் வைக்கப்பட்ட சிலுவையாக இருக்கலாம் ஏனெனில் அதில் ஸ்பா ணிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளது. இவ் இஸ்பாணியர்கள் வர்த்தகம் செய்வதற் காக இலங்கை வந்தார்கள் என்பதை இலங்கை அரசியற் பின்னணி உறுதிப்படுத்து கின்றது. எனவே அவர்கள் ஆன்மீக நலன் களைப் பேணுவதற்காக தமக்கென ஓர் ஆல யத்தை நிறுவி வழிபாடுகளை நடாத்தியிருக் கலாம் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு மேலும் இலங்கையின் சரித் திரத்தகவல்களை வெளியிடும் மகாவம்சம் கூறும் சில தகவல்களின்படி இலங்கை யின் 1505ற்கு முன் கிறீஸ்தவம் இருந்தது என்பதனை உறுதிசெய்யக் கூடியதாகவுள்

ளது மேலும் 5ஆம் நூற்றாண்டில் இலங்கையின் சிங்கள மன்னனின் படையில் இந்திய கிறிஸ்தவரான ''மைகாரா'' என்றபடைத் தளபதி இருந்ததாக அறியமுடிகின்றது. இச்சான்றாதாரங்கள் அனைத்து நிருபிக்கக் கூடிய உண்மைகளைக் காணப்படுகின்றது இவற்றிலிருந்து 1505ற்கு முன் இலங்கையில் கிறீஸ்தவம் இருந்துள்ளது என்பதை தெட்டத்தெழிவாக அறியலாம்.

மேலும் இவ் ஆய்வுகளின்படி ஆதாரமற்ற தகவல்களை புரட்டிப்பாக்கும் போது உலகத்திருச்சபை வரலாற்றில் கிறீஸ்துவின் உயிர்த் தெழுதலின்பின் '' உலகின் கடை எல்லைவரை நற்செய்தியை அறிவியுங்கள்'' (தி தூ 1, 8–9) என்ற அவ்வாக்கு இலங்கையிலும் நிறைவேறியுள்ளது என்பதனை நாம் மரபுக்கதைகளுடாக அறியக் கூடியதாகவுள்ளது. அதாவது '' தப்றபோன் '' என்று அழைக்கப்பட்ட இலங்கையில் திருத்தூதர்பணியில் பிலிப்புவால் மனம்திருப்பப்பட்ட எதியோப்பிய அண்ணனால் (தி தூ : 9–26) நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது பாதச்சுவட்டையே சிவனொளிபாத மலையில் மக்கள் வணங்குகின்றனர் என ''மம்பேயி'' என்ற ஆசிரியர் 'இந்தியவரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகின்றார் இவ்வாறே புனித தோமையரால் இலங்கையில் நற்செய்தி அறுவிக்கப்பட்டது எனக் கூறுவார். இவர் இந்தியாவின் மயிலாபூரில்' நற்செய்திப் போதனை செய்தார் என ஆதாரமுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன எனவே அங்கிருந்து அவர் இலங்கைத் தீவுக்கும் வந்திருத்கலாம் என ஊகிக்கப்படுகிறது. இத்கவலை உறுதியாக நம்பக் கூடியதாக ''யோவான்றிபெய்றோ'' எனும் வரலாற்று ஆசிரியர் 'இலங்கைத்தீவில் தங்கியிருந்து தோமஸ் நற்செய்ம்பணி செய்தார்' என கூறுகின்றார். வேறொரு தகவல் மூலம் ''மலபாரைச் சேர்ந்த தோமஸ் இந்தியாவில் நற்செய்தியை அறிவித்தார்.'' அதன் எதிரொலி இலங்கையில் பிற்பட்ட காலங்களில் இந்தியக் கிறீஸ்தவ வர்த்தகங்களால் இலங்கையில் அறிவிக்கப்பட்டிருக்கலாம். குறிப்பாக இலங்கையின் மறை சாட்சிகளின் தீவு எனப்படும். மன்னாரில் இதன் பிரதிபலிப்பைக் காணலாம். இதற்கு மன்னார் கிறீஸ்தவர்களின் விசுவாச வாழ்வும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஆதாரமற்ற தகவல் அடிப்படையில் பெத்தலகேமில் பிறந்த '' யேசுபாலனை '' வணங்குவதற்கு மூன்று கீழைத்தேய ஞானிகள் சென்றார்கள் என வேதாகமம் கூறுகின்ற அதேவேளை இலங்கையின் மன்னனான '' கஸ்பார் '' அதாவது கறுப்பு மோகஸ் என்பவன் யேசுவை வணங்கச் சென்றான் என '' யுவாண்டி பாறோஸ் '' என்ற ஆசிரியர் 1496–1570ற்கும் இடையே எழுதிய ஆசியா என்ற நூலில் குறிப்பிடுகின்றார் எனவே வேதாகமம் குறிப்பிடும் மூன்று ஞானிகளில் '' கஸ்பார் '' ஒருவராக இருககலாம் என நம்பப்படுகிறது. மேலும் இக்''கஸ்பார்'' தோமசிடம் இந்தியாவில் திருமுழுக்கு பெற்று அவருடன் சேர்ந்து நற்செய்திப் பணிசெய்து பின்னர் இருவரும் இறந்து ஓரே கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார்கள் என யுவாண்டிபாறோஸ் குறிப்பிடுகின்றார்.

எனவே இலங்கையில் 1505ற்கு முன்னர் அதாவது போர்த்துக்கீசரது வருகைக்கு முன்னர் உலகத்திருச்சபை வரலாற்று காலத்திலேயே இலங்கையிலும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு கடுகுமணி போன்ற திருச்சபை யேசுகிறீஸ்துவுக்கு சான்று பகர்ந்துள்ளது என இவ் ஆய்வு மூலமாக நாம் அறிகின்றோம். இச்செய்தி கிறீஸ்தவர்களாகிய ஒவ்வொருவரது விசுவாசத்தையும் உறுதிப்படுத்துகின்றது. காரணம் '' உலகமெலாம் அழிந்தாலும் எனது உயிருள்ளவார்த்தைகள் பலன்தராமல் போகாது '' என கிறீஸ்து யேசு கூறுகிறார். எனவே எமது விசுவாசமும் இலங்கையில் ஆரம்பயுகக் கிறீஸ்தவத்திற்கு ஓர் ஆதாரமாகும்

# திறைசேரி உண்டியல் சந்தை
## Treasurey Bills Market

செல்வன் சி. கமலராஜ்
99 வர்த்தகம்.

அரசாங்கத்தின் பெயரில் மத்திய வங்கியினால் பணச்சந்தையில் (குறுங்கால நிதிச் சந்தையில்) விற்பனை செய்யப்படுகின்ற குறுங்கால கடன் பத்திரமே திறைசேரி உண்டியல் எனப்படும்.

இது பணச்சந்தையில் நிதிகளை திரட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற கருவிகளில் இதுவும் ஒன்றாகும். இங்கு திறைசேரி உண்டியலானது அரசாங்கத்துக்கு தேவையான குறுங்கால நிதிகளை திரட்டிக்கொள்வதற்காகவே பணச்சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. இதனை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியின் பொது படுகடன் திணைக்களம் விற்பனை செய்கின்றது.

திறைசேரி உண்டியலானது முதலில் 1923ஆம் ஆண்டு 7ஆம் இலக்க திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது. 1941ஆம் ஆண்டு முதன் முதலில் திறைசேரி உண்டியலை வழங்க இலங்கை பாராளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன் பின்னர் 1953ஆம் ஆண்டு 35ஆம் இலக்க திறைசேரி உண்டியல்களில் வழங்கல் கொண்டு வரப்பட்டது. திறைசேரி உண்டியல் ஆனது 3 மாத, 6 மாத, 12 மாத முதிர்வுக் காலம் கொண்ட பல்வேறு முதிர்ச்சிக்காலங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

* இங்கு வட்டி கழித்த பெறுமதியானது கொள்விலையாக காணப்படும். முதிர்ச்சி காலத்தின் போது வங்கியில் ஒப்படைப்பதன் மூலம் முகப்பெறுமதி (சம விலை) இனை பெற்றுக்கொள்ள முடியும் திறைசேரி உண்டியலானது இலங்கையில் தற்போது 07 நாட்களுக்கு ஒரு தடவை விற்பனை செய்யப்படுகின்றது. திறைசேரி உண்டியல் ஒன்றின் முகப்பெறுதி 100/- ஆகும்.

உதாரணம் :

ஒருவர் 6 மாத முதிர்ச்சிகாலம்கொண்ட திறைசேரி உண்டியல்களை 18977.60/— இற்கு கொள்வனவு செய்தார். ஆனால் அவற்றின் முகப்பெறுமதி 20000/— ஆகும். இவர் 6 மாத முடிவில் வங்கியில் ஒப்படைப்பதன் முகப் பெறுமதியான 20000/— வை பெற்றுக்கொள்ள முடியும். இவருக்கான 6மாதத்துக்குமான வட்டி 1022.40/- ஆகும்.

திறைசேரி உண்டியல் சந்தை:
Treasurey Market

இங்கு திறைசேரி உண்டியல்கள் விற்பனை செய்யப்பட்டு அரசாங்கத்துக்கு குறுங்காலத்துக்கு தேவையான பணம் திரட்டிக் கொள்ளப்படும். பாராளுமன்றத்தினால் அங்கீகாரம் செய்யப்பட்ட தொகையை பெற்றுக்கொள்வதற்காகவே திறைசேரிஉண்டியல்கள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

பணச்சந்தையின் உபசந்தைகளிலே மிகப்பெரிய உபசந்தை இது ஆகும். இச் சந்தை முதலாம் நிலைப் பணச்சந்தை, இரண்டாம் நிலைப்பணச் சந்தை ஆகிய இரண்டு வகையான சந்தைகளையும் உள்ளடக்கும்.

திறைசேரி உண்டியல் சந்தை இரண்டு வகைப்படும் அவை வருமாறு :

1. முதலாம் தர திறைசேரி உண்டியல் சந்தை / முதலாம் நிலை பணச்சந்தை ஆரம்பநிலைப் பணச்சந்தை

* திறைசேரி உண்டியல்கள் முதன் முதலாக வெளியிடுதல் தொடர்பான கொள் வனவு விற்பனை இடம்பெறுகின்ற சந்தை முதலாம் தர திறைசேரி உண்டியல் சந்தை எனப்படும். இங்கு மத்திய வங்கி யானது மத்திய அரசாங்கத்திடம் இருந்து நேரடியாக கொள்வனவு செய்வதாக இருக் கும்.

2. இரண்டாம் தர திறைசேரி உண்டியல் சந்தை / இரண்டாம் நிலைப்பணச் சந்தை

* வெளியீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் அதன் முதிர்வு காலம் வரை மீண்டும் கொள்வனவு விற்பனை இடம் பெறுகின்ற பணச் சந்தை இரண்டாம் தர திறைசேரி உண்டியல் சந்தை எனப்படும். அதாவது திறைசேரி உண்டியல்கள் மீள கழிவிடுதல் தொடர்பான பணச் சந்தை இது ஆகும்.

திறைசேரி உண்டியல் சந்தையில் மேலும் இரு சந்தைகள் புதிதாக அறிமுகம் செய்யப் பட்டன.

1. திறைசேரி உண்டியல் மீள்கொள்வன வுச் சந்தை :

திறைசேரி உண்டியல்களது திரவத் தன்மையை மேலும் அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திறைசேரி உண்டியலின் ஒரு உப சந்தையாக இச் சந்தை அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலையொன் றில் இலங்கை மத்திய வங்கி அவற்றை மீளக்கொள்வனவு செய்யும் என்ற இலங்கை மத்திய வங்கி உடனான இணக்கத்துடன் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்ய முடியும். இந்த முறை காலப் போக் கில் வங்கிகளுக்கு இடையிலான அழைப் புக் கடன் சந்தையின் வட்டி வீச்சிலான ஆகக் குறைந்த மட்டம் ஒன்றில் உறுதிப் படுத்துவதில் வெற்றி கண்டுள்ளன.

இதன் அடிப்படையில் திறைசேரி உண் டியல் உடையவர்கள் அவற்றை மீண்டும் கொள்வனவு செய்யும் என்ற நிபந்தனையில் மத்திய வங்கியினால் அங்கீகாரம் அளிக்கப் பட்ட பின்வரும் நிறுவனங்களில் பணம் ஆக்கிக் கொள்ளலாம்.

1. இலங்கை வங்கி
2. மக்கள் வங்கி
3. தேசிய சேமிப்பு வங்கி
4. தேசிய அபிவிருத்தி வங்கி
5. ஊழியர் சேமலாப நிதியம்
6. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

இச் சந்தை அறிமுகம் செய்யப்பட்ட தன் நோக்கங்கள் வருமாறு :

1. நிதியினை மேலதிகமாக கொண்ட நிறு வனங்களுக்கு முதலீட்டு வாய்ப்பளித் தல்
2. வங்கிகளுக்கு இடையிலான சந்தையில் வட்டி வீதத்தில் ஒழுங்கற்ற தளம் பலை தவிர்த்தல்
3. நிதி பற்றாக்குறை உள்ள நிறுவனங் களுக்கு நிதியினை பெற வாய்ப்பளித் தல்
4. திறைசேரி உண்டியல்களது திரவத் தன்மையை அதிகரித்தல்

5. திறைசேரி உண்டியல் நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தை :

அழைப்புப் பணச்சந்தையில் வட்டி வீச்சினை ஆகக் கூடிய எல்லையை உறுதிப் படுத்தும் நோக்குடன் 1995ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிமுகம் செய்யப்பட்ட சந்தை இது ஆகும்.

முதன்மை வணிகர் அல்லது சான்றழிக்கப்பட்ட வணிகர்.

திறைசேரி உண்டியல் சந்தையில் ஒரு சிலர் வகித்த தனி உரிமை நீக்கப்பட்டு திறைசேரி உண்டியல்களது சந்தை வாய்ப் பினை அதிகரிப்பதற்காக 1992ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டவர்களே முதன்மை வணிகர் ஆவர்.

தற்போது '' 13 வர்த்தக வங்கிகள் 5 வங்கியல்லாத வாணிபர்களும் உட்பட

மொத்தமாக 18 முதன்மை வணிகர்கள் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மட்டுமே மத்திய வங்கியிடம் இருந்து திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்ய முடியும். இவர்களிடம் இருந்துதான் திறைசேரி உண்டியல்களை ஏனையவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

முதன்மை வணிகர் நியமனம் செய்யப்பட்டதால் முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் :

1. திறைசேரி உண்டியல் சந்தையில் ஒரு சிலர் வகித்த தனியுரிமை. நீக்கப்பட்டு நாடு பூராகவும் உள்ள முதலீட்டாளர் இச்சந்தையில் கலந்துகொண்டமை.

2. முதன்மை வணிகர்கள் திறைசேரி உண்டியல் சந்தை பற்றிய பூரண அறிவு உடையவர்களாக இருப்பதனால் இச் சந்தையில் இவர்களது போட்டி காரணமாக முதலீட்டாளர்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

3. முதலீட்டாளர் ஒருவருக்கு பணம் உடனடியாக தேவைப்படுமாயின் திறைசேரி உண்டியல்களை முதன்மை வணிகருக்கு விற்பனை செய்து பணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

4. திறைசேரி உண்டியல் சந்தை பற்றிய அறிவு இல்லாதவர்கள் கூட முதன்மை வணிகரிடம் இருந்து சுலபமாக கொள்வனவு செய்ய முடியும்.

திறைசேரி உண்டியல் கழிவிடுதல் :

திறைசேரி உண்டியலை கொள்வனவு செய்த முதலீட்டாளர் ஒருவருக்கு பணம் அவசரமாக தேவைப்படும் போது தாம் கொள்வனவுசெய்த திறைசேரி உண்டியல்களை அவற்றின் முதிர்வு திகதிக்கு முன்னதாக வர்த்தக வங்கியிடம் கொடுத்து பணமாக மாற்றிக்கொள்ளுதல் திறைசேரி உண்டியல் கழிவிடுதல் எனப்படும்.

இங்கு வர்த்தக வங்கியானது முதலீட்டாளனுக்கு குறைந்த வட்டி வீதத்தில் திறைசேரி உண்டியலை கழிவுசெய்து கொடுக்கும். பின்னர் தான் கழிவுசெய்து கொடுத்த திறைசேரி உண்டியலை முதிர்ச்சி காலத்தில் மத்திய வங்கியிடம் ஒப்படைத்து குறிக்கப்பட்ட வட்டி வீதத்தை பெற்றுக் கொள்ளும். இங்கு கழிவுசெய்து கொடுத்த வட்டி வீதத்துக்கும் முதிர்ச்சி கால வட்டி வீதத்துக்கும் இடையிலான வட்டியிலை வர்த்தக வங்கி இலாபமாகப் பெற்றுக்கொள்ளும்.

திறைசேரி உண்டியல்களை மீள் கழிவு செய்தல்:

தம்மிடம் கழிவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை வர்த்தக வங்கி முதிர்வு திகதிக்கு முன்னதாக மத்திய வங்கியிடம் கொடுத்து பணமாக்குகின்ற கருமம் திறைசேரி உண்டியல் மீள் கழிவு செய்தல் எனப்படும்.

திறைசேரி உண்டியலுக்கான கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள் வருமாறு :

1. பொது மக்களிடம் உள்ள சேமிப்பின் அளவு.
2. திறைசேரி உண்டியலுக்கான வட்டி வீதம்.
3. பங்குச்சந்தையின் நிலையற்ற தன்மை.
4. ஏனைய நிறுவனங்களில் வழங்கப்படும் வட்டி வீதம்.
5. திறைசேரி உண்டியலில் காணப்படும் திரவத்தன்மை.

திறைசேரி முறிகள் :
Treasurey Bonds

அரசாங்கம் தனது செலவுகளுக்கான பணத்தை கடனாக பெற்றுக்கொள்வதற்கு குறுங்கால கடனாக பெற்றுக்கொள்வதற்கு குறுங்கால கடன் கருவியான திறைசேரி உண்டியலினையும் நீண்டகால கடன் கருவியான ரூபாக் கடன்களையும் இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்தின் சார்பில் விற்பனை செய்து வந்தது. இவற்றை விட 1997ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து திறைசேரி முறி என்ற புதிய கருவி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த திறைசேரி முறிகளை வெளியிடுவது சம்பந்தமான சட்ட ஏற்பாடுகள் 1995ஆம் ஆண்டு 32ஆம் இலக்க பிணைப் பத்திரங்கள் (திருத்த) சட்டத்தில் அடங்கியுள்ளன. இதன் பிரகாரம் அரசின் அபிவிருத்திக்கு சம்பந்தமான செயற் திட்டங்களை நிதியீட்டம் செய்தவதற்கு அரசாங்கத்தின் சார்பில் தேவைப்படும் நிதியின் அளவுக்கு ஏற்ப மத்திய வங்கி திறைசேரி முறிகளை இரு வாரங்களுக்கு ஒரு முறை வெளியிடும் பணியினை மேற் கொள்கின்றது.

திறைசேரி முறி என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தை 1995ஆம் ஆண்டு 32ஆம் இலக்க பிணைப்பத்திரங்கள் (திருத்த) சட்ட மூலத்தின் 15ஆவது பிரிவு கூறுகிறது. அது பின்வருமாறு அமையும் "திறைசேரி முறி ஒன்று வெளியிடப்பட்டவிடத்து அந்த முறி எத்தொகை குறித்து வெளியிடப்படுகின்றதோ அத்தொகையையும், அதன் மீதான வட்டியையும் சட்டத்தில் சம்பந்தப்பட்ட விதிகள் விதி முறைகள் என்பவற்றுக்கு ஏற்ப, அதில் குறிக்கப்பட்டிருக்கும் திகதியில் அல்லது அம் முறியை விடுவித்துக்கொள்வதற்காக அதன் சார்பில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும். ஒரு பொருளின் பிரகாரம் பணம் செலுத்துவதற்கு அரசு கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும் ஒரு கருவி ஆகும்.

இதனை மத்திய வங்கியிடம் இருந்து முதன்மை வணிகர் கொள்வனவு செய்ய முடியும் இவர்களிடம் இருந்து பொது மக்கள் கொள்வனவு செய்யமுடியும். திறைசேரி முறி ஆனது அரசாங்க செலவுக்கான பணத்தை பெற்றுக்கொள்ளல். கடன் பிணைகள்சந்தையைவிருத்திசெய்தல்போன்ற விடயங்களை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

திறைசேரி முறி ஒன்றில் காணப்படும் விடயங்கள் :

1. தொடர் இலக்கம்
2. முறி இலக்கம்
3. முறியின் பெறுமதி
4. முதிர்ச்சி திகதி
5. பதிவாளர் ஒப்பம்
6. தொகுதி
7. வட்டியினை பெற்றுக்கொள்வதற்கான பற்றுச்சிட்டு

திறைசேரி முறி ஒன்றில் காணப்படக் கூடிய சிறப்பம்சங்கள் :

1. திறைசேரி முறியானது முத்திரை வரியில் இருந்து விலக்குப்பெற்றது.
2. 6 மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தப்படும் வருடாந்த கூப்பன் வட்டி விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது.
   (இது காலத்துக்கு காலம் மாறும்)
3. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியீடு செய்யப்படுகின்றது.
4. கடன் மற்றும் மூலதன சந்தையின் அபிவிருத்திக்கு துணை புரியக் கூடிய கருவி ஆகும்.
5. ஏல விற்பனை முறையின் கீழ் இவை மத்திய வங்கியினால் விற்பனை செய்யப்படுகின்றது.

---

**உசாத்துணை நூல் :**

பொருளியல் நோக்கு

# சந்தைப்பொருளாதாரமும் அரசாங்கத்தின் தலையீடும்

**திரு. சின்னத்துரை விஜயகுமார்**
விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

இன்று அனேகமான நாடுகள் சந்தைப் பொருளாதாரத்தின் கீழேயே இயங்கிவருகின்றன. 2ஆம் உலகப்போரின் பின்னர் ரஷ்யாவைச்சார்ந்த சோஸலிச நாடுகள் ஓர்புறமும் அமெரிக்காவைச்சார்ந்த முதலாளித்துவ நாடுகள் மறுபுறமும் இருவேறுபட்ட கொள்கைகள் அபிவிருத்தி மாதிரிகளைப் பின்பற்றி இயங்கிவந்தன. இதன் காரணமாக கெடுபிடியுத்தம் தீவிரமடைந்து நேரடியுத்தங்கள் ஏற்படுமளவுக்கு பிரச்சனைகள், முரண்பாடுகள் தீவிரமடைந்தன. ஆயினும் 1990 களில் மிகையில் கொர்பச்சேவ் அமெரிக்க முதலாளித்துவத்தின் பணத்துக்கு அடிமையாகி சோஸலிச சித்தாந்தங்களை உடைத்தெறிந்தார். கொர்பச்சேவின் புதிய சித்தாந்த சீர்திருத்தம் காரணமாக சோவியத்யூனியன் பலதுண்டங்களாக உடைந்து பல குடியரசுகள் தோன்றி, அவை பல யுத்தங்களை (குரோசினி, செச்சனிய யுத்தம்) நடாத்தி முடிந்தமை பழையகதையாகிவிட்டது. இத்தகைய உடைவின் பின்னர் பல சோஸலிச நாடுகள் தங்கள் கொள்கைகளிலும் இயங்கு வழிமுறைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தின. உலகின் நிலைமாற்றுப்பொருளாதாரங்களாக தம்மை வரித்துக்கொண்டன. நிலைமாற்றுப் பொருளாதாரம் என்பதன் கருத்து முதலாளித்துவ சந்தைப்பொருளாதாரங்களாக மாற்றம் கண்டுவரும் திட்டமிடப்பட்ட சோஸலிச பொருளாதாரத்தில் அதில் அரச ஏகபோகம் ஒழிக்கப்படுவதுடன் பொருளாதாரத்தில் திறந்த நிலை ஏற்படவேண்டும் என்றும்தொழில் முனைவோர் தம் ஆற்றல்களிற்கேற்ப செயற்படுவதற்கு இடமளிக்கவேண்டும் என்றும் தனியார் தொழில் முயற்சி மீண்டும் ஆரம்பிக்கப் படவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் இன்று கியூபா, வடகொரியா போன்றநாடுகள் சந்தைப்பொருளாதாரக்கொள்கையை நிராகரித்து தொடர்ந்தும் சோஸலிச முறையின் கீழ் இயங்கிவருகின்றன. கடுமையான அமெரிக்க எதிர்ப்புக்கொள்கையை பிடல்காஸ்ட்ரோ இன்று விட்டுவிடவில்லை. எலியன் கொல்சாலஸ் எனும் ஆறுவயதுச் சிறுவனின் விவகாரம் அண்மையில் சர்ச்சைகளை ஏற்படுத்திவந்துள்ளது. இதை சிறுவனின் விவகாரமாக நோக்காது அமெரிக்க முதலாளித்துவத்திற்கும் இறுக்கமான கியூபாவின் சோஸலிசத்திற்கும் இடையிலான விவகாரமாகவே பல அரசியல் பொருளியலாளர்கள் நோக்குகின்றனர்.

ஆயினும் சோஸலிசத்தின் உடைவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் முதலாளித்துவத்தை நோக்கிய அசைவும் முதலாளித்துவத்துக்குக் கிடைத்த வெற்றியாகவே நோக்கர்கள் கருதினாலும் கெடுபிடி யுத்தம் பனிப்போர் ஒன்று சற்று ஓய்ந்துள்ளது என்பது குறித்து சர்வதேசரீதியான திருப்திகள் வெளியிடப்பட்டமை இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும்.

சந்தைப்பொருளாதாரத்தில்குறைபாடுகளுண்டு எனப்பலர் கூறுகின்றனர். உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலக வர்த்தக ஒழுங்குவிதிகள், சர்வதேச நாணய நிதியம் உலகவங்கி போன்றவற்றின் செயற்பாடுகள் சந்தைப்பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்றன. இவை சந்தைப்பொருளாதாரத்தின் நன்மைகள் பெருமளவுக்கு

வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கி நகர்த்துவதில் குறியாகவிருக்கின்றன, என்று பலர் விமர்சனம் செய்துள்ளனர். 1999இன் இறுதியில் அமெரிக்காவின் சியாட்டாவில் நடந்த உலக வர்த்தக அமையத்தின் கூட்டத்தில் பல ஆயிரக்கணக்கானவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அதேபோல் 2000ஆம் ஆண்டு சித்திரை மாதம் சர்வதேச நாணய, உலகவங்கி போன்றனவற்றின் கூட்டம் அமெரிக்க வோசிங்டனில் நடந்தபோது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. வளர்முக பொருளாதாரங்களின் அபிவிருத்திக்கு இவை துணைபோக வில்லையென்றும், வளர்முக நாடுகளின் பிரச்சனைகளை இவை மோசமாக்குகின்றன என்றும், அமெரிக்காவின் முகவராக தொழிற்படுகின்றன என்றும் குறைகள் கூறப்பட்டுவருகிறது. கஸ்ட்ரோ சர்வதேச நாணய நிதியத்தை அழித்து விடும்படி G 77 மாநாட்டின்போது பகிரங்கக்கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் இந்தோனேஷிய ஜனாதிபதி வாஹிட் போன்ற சில தலைவர்கள் இவ்வாறான சர்வதேச ஸ்தாபனங்களுடன் தொடர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் மூன்றாம் உலக நாடுகள் நன்மையடையலாம் எனக்கருதுகிறார். (தினக்குரல் ஏப்ரல் 16) எது எவ்வாறாயினும் நீதியான புதிய சர்வதேச ஒழுங்கு விதிகளின் கீழ் சந்தைப்பொருளாதாரத்தின் நன்மைகளை உள்நாட்டுமட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பரவலாக்கி வளர்முக நாடுகளும் நன்மையைச்செய்யும் வழிமுறையொன்றை கண்டுபிடித்தாகவேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் மிகமோசமான பிரச்சனைகளை வறியநாடுகள் எதிர்நோக்குமென்பது உண்மையாகும்.

இனி நாம் சந்தைப்பொருளாதாரம் பற்றிய கோட்பாட்டு நிலைகளை நோக்குவோம். சந்தைகள் சிறந்த முறையில் செயற்பட்டு பூரண போட்டி நிலையில் இயங்கி வரும்போது மிகச்சிறந்த மூலவள ஒதுக்கீடு இடம்பெறுகின்றது. இது மறைகரத்தினால் மேற்கொள்ளப்படுவதாக அடம்ஸ்மித் கருதினார். நுகர்வோர் உச்சமட்டத்தில் திருப்தியடைவதுடன் உற்பத்தியாளர்கள் சுதந்திரமான போட்டிச்சந்தைப் பொறிமுறையொன்றுக்குள் தமது இலக்குகளை உச்ச மட்டத்தில் பெறுகின்றனர். எனவே

1. உற்பத்தியாளர்களிடையே, திறமையான முறையில் மூலவள ஒதுக்கீடு.
2. உற்பத்திசெய்யப்பட்ட பண்டங்களை நுகர்வோரிடையே திறமையான முறையில்விநியோகித்தல்.
3. உற்பத்திப் பொருட்களின் திறமையான கலவை என்பவற்றைக்கொண்ட ஓர் சமனிலை தோன்றுகிறது.

சந்தைகள் மூலவளங்களை திறமையான முறையில் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக கோட்பாட்டு விளக்கங்களுண்டு. பொருளியல் பாடப்புத்தகங்களில் கூறப்பட்ட கோட்பாட்டு விளக்கங்களின்படி சுதந்திரமான முறையில் போட்டி இடம்பெற்றுவரும் சந்தைகளிலுள்ள உற்பத்தியாளர்கள் விலைகளை ஏற்பவர்களாக (Price Taker) காணப்படுகின்றனர். எனவே நிரம்பல் விலைகள் எல்லைச்செலவுக்கு அண்மிக்கின்றன / சமப்படுத்தப்படுகின்றன. பிரவேசச் சுதந்திரம் காணப்படும் நிலையில் அதிகளவு நிறுவனங்கள் சந்தையில் பிரவேசிப்பதுடன் செலவுகளை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதுடன் மூலவளங்கள் அதிஉச்சமட்ட திறமையுடன் உபயோகப்படுத்தப்பட்டுவருகின்றன. (பொருளியல் நோக்கு 1998) எனவே போட்டிச் சந்தையில் நுகர்வோர் செலுத்தும் விலை உற்பத்தியாளர் சந்தர்ப்பச் செலவாகவிருந்து வருகிறது. மேலும் சமூகத்தின் கண்ணோட்டத்தில் போட்டி வீண்விரயத்தைக் குறைப்பதுடன் காரணிகளிற்கு அவற்றின் உற்பத்தித்திறனிற்கேற்ற விதத்தில் வெகுமதிகளையும் அளித்து வருகிறது. எனவே கோட்பாட்டு அனுபவங்களிலிருந்து தனியார் துறையிலும்சரி, பொதுத் துறையிலும் சரி போட்டி விரும்பத்தக்கதாகும். உதாரணமாக இலங்கை இது தொடர்பாக அனுகூலமான நிலைமையொன்றைப் பெற்றுக்கொண்டது. கையடக்கத்தொலைபேசி அல்லது செல்லிடப்பேசி (செல்ரெல், மொபிற்றல்) களின் விலை ஆரம்பத்தில் ஏக

போக உரிமையாக காணப்பட்ட நிலையில் விலையும் அழைப்புக்கட்டணமும் அதிகமாக இருந்ததுடன் அதன் புவியியல்பரப்பும் சுருங்கியதாக காணப்பட்டது. ஆனால்இது இன்று சிலர் உரிமைச் சந்தைக்குள் வந்ததால் ஆரோக்கியமான போட்டிச்சூழ்நிலைகளில் இதன் விலை செங்குத்தாக வீழ்ச்சியடைந்ததுடன் அழைப்புக்கட்டணமும் குறைந்து அதன் புவியியல் பரப்பும் அதிகரித்தது. எனவே போட்டி விரும்பத்தக்கதொன்றாகும்.

புதிய சாஸ்திரிய பொருளியலாளர்கள் ''கிழக்காசிய அற்புதம்'' தொடர்பான சில எண்ணங்களை வெளியிட்டனர். இதன் வெற்றிக்கு சர்வதேச வர்த்தகத்தின் திறந்த தன்மை, விலைக்கட்டுப்பாடுகள் மற்றும் ஏனையதிரிபுபடுத்தும் கொள்கைகள் இல்லாதிருந்தமையின் வெற்றியாக நோக்குகின்றனர். ஆனால் கிழக்காசியாவில் அரசின்கைத்தொழில் கொள்கை முறைகளும் தலையீடுகளும் இருந்துவந்துள்ளதென அரச தலையீட்டு ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையில் சந்தைப்பொருளாதாரத்தின் முக்கிய கூறாக கட்டற்ற வர்த்தகம் அல்லது திறந்தவர்த்தகம் காணப்படுகிறது. புதிய சாஸ்திரிய கோட்பாட்டாளர்கள் வினைத்திறன் காரணங்களையும் முன்வைத்து அபிவிருத்திப்பொருளியலாளர்கள் சந்தை விரிவாக்கத்தினை முன்வைத்தும் இதனை ஊக்குவித்து வருகின்றனர். உண்மையில் எமக்கு வேண்டியது நெகிழ்ச்சித் தன்மையாகும். அதனையே அனுபவரீதியான சான்றுகள் எமக்கு கற்பிக்கின்றன.

சந்தைப்பொருளாதாரமொன்றில் முற்றாக அரசதலையீடு தேவையில்லை என்பதை எவரும்ஏற்கமாட்டார்கள் ஏனெனில் சந்தைப்பொருளாதாரத்தின் கீழ் சந்தைத் தோல்விஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இங்கு ஞாபகப்படுத்தப்பட வேண்டிய விடயம் யாதெனில் இன்று சந்தைநட்புக்கொள்கை பற்றிய உரையாடல் முக்கியம் பெறுகின்றது. அதாவது அரசுசந்தையுடன் பகைமை பாராட்டாது நட்புணர்வுடன் கூடிய கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. இந்தக் கருத்து/வாதம் ஏற்றுக்கொள்ள கூடியதாகவிருந்தாலும் பொருளாதாரஉறுதி, வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்தி நாடு உயர்ந்த நிலையையடைந்துகொள்ள சந்தைப்பொருளாதாரமொன்றில் அரசதலையீடு அவசியமாகும். இந்த வகையில் சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசின் பங்குபற்றி ஒவ்வொன்றாக நோக்குவோம்.

1. மூலவள ஒதுக்கீடும் பொதுப்பண்டங்களை வழங்குதலும் :

ஒருநாட்டின் உற்பத்தி மட்டத்தினையும் உற்பத்திவகைகளும் பல்வேறு உற்பத்திப் பிரிவுகளிடையே மூலவளங்கள் பகிர்ந்தளிக்கப்படும் முறையில் தங்கியுள்ளது. இன்று சிறந்த வள ஒதுக்கீடு பற்றியே எல்லோரும் பேசிக்கொள்கின்றனர். தற்போதய வெளியீட்டுமட்டம் (Actual Output) சாத்தியமான (Potential Output) வெளியீட்டுமட்டமாக இல்லாமல் இருக்கக்கூடும். எனவே சிறந்த வளஒதுக்கீட்டின் மூலமும் வளமீள் பகிர்வு மூலமும் தற்போதைய வெளியீட்டு மட்டத்திற்கும் சாத்தியமான வெளியீட்டு மட்டத்திற்குமிடையிலான இடைவெளியை குறைக்கமுடியும். இதனை சந்தையின் மூலம் செய்வதுகடினமாக இருப்பதால் வளமீள் பகிர்வினூடாக அரசு தலையிட்டு இதனை சாதித்துக்கொள்ளமுடியும். மேலும் சந்தைத் தோல்விக்கான பிரதான காரணம் பொதுப் பண்டமாகும். நுகர்வில் போட்டித்தன்மையற்றதும் விலக்குதல் விதிக்குட்படாததுமான பண்டமே பொதுப்பண்டமாகும். அதாவது விலை அறவிடமுடியாது இருத்தல், ஒரு நுகர்வோனின் நுகர்வுகாரணமாக மற்றொருவரது நுகர்வு பாதிக்கப்படாதிருத்தல் எல்லைச்செலவு பூச்சியமாகவிருத்தல், விலைசெலுத்தாவிட்டாலும் நுகர்விலிருந்து விலக்கிவைக்க முடியாதிருத்தல் போன்றன பொதுப்பண்டத்தின் இயல்புகளாகும்.

உதாரணம் : தேசியபாதுகாப்பு, மணிக்கூட்டுக்கோபுரம், வெளிச்சவீடு இத்தகைய பண்டங்களிற்குவிலையைவிதித்துக்கொள்ள முடியாது இருப்பதனால் சந்தைமுறைமையினால் இவற்றை வழங்கமுடியாதுள்ளது. இத்தகைய பண்டங்களின்மூலம் சமூகத்

தேவைகள் நிறைவேற்றப்படுவதனால் சமூக நலனை கருத்திற்கொண்டு அரசு, வளங்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும் அரசாங்கம் வரிகள்மூலம் பணத்தினைத்திரட்டி இப் பொதுப்பண்டங்களை மக்களிற்கு வழங்க முடியும்.

2. நீதித்தன்மை அல்லது சமத்துவத்தைப் பேணல் :

நாட்டுமக்களிடையே தீவிரமான வருமான ஏற்றத்தாழ்வு நிலை காணப்படாத நிலையே நியாயத்துவமாகும். இது எல்லா மக்களிற்கும் சமமான வருமானத்தைப்பெற வேண்டும்என்பதைக்குறிக்கவில்லை மாறாக மிகக்குறைந்த வருமான சமமின்மையை குறிக்கிறது. நீதித்தன்மையைப் பேணுவதன் மூலம் (i) வறுமையைக்குறைத்தல் (ii) சமூக விரோத நடவடிக்கைகளைக் குறைத்தல் என்பவற்றை ஏற்படுத்தமுடியும், என்பதே இதன்முக்கியத்துவமாகும். சந்தைத்தொழிற் பாடுகள்மூலம் கொள்வனவு ஆற்றல் உடையவர்களிற்கு மட்டும் பொருட்களும் சேவைகளும் கிடைக்கின்றன. ஏழைகளிற்கு இவை கிடைக்காமற்போகின்றது. வருமானச்சமமின்மை இவர்களை கடுமையாக பாதிப்பதுடன் சமூகப்பிரச்சினைகளும் ஏற்பட்டுவிடுகின்றது. எனவே இந்த நிலையில் அரசு தலையிட்டு நியாயத்துவத்தை நிலை நாட்டுவது அவசியமாகும். அவ்வகையில் அரசுபின்வரும் வழிமுறைகள்மூலம் சந்தைப்பொருளாதாரமொன்றில் தலையிட்டுக்கொள்ளலாம்.

1. வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின்மீது படிப்படியாக அதிகரித்துச் செல்லும்அடிப்படையில்வரிவிதிப்பினை மேற்கொள்வதன் மூலமும் பெருமளவுக்கு குறைவருமானக் குடும்பங்களினால் நுகரப்பட்டுவரும் பொருட்களின் மீது பூச்சிய அல்லது குறைந்தபண்டவரி விதிப்பினை மேற்கொள்வதன் மூலமும் வரிக்கொள்கையில் ஓர் சமத்துவ நிலையை எடுத்துவரமுடியும்.
2. குறைந்தவருமானம் பெறும் வறியமக்களிற்கு நுகர்வுமானியம், வறுமைநிவாரணம் போன்றவற்றை வழங்குதல்.
3. சொத்துரிமை தொடர்பான உச்ச வரம்பு விதித்தல்மூலம் செல்வந்தர்கள் வைத்திருக்கும் சொத்துக்களை மட்டுப்படுத்துவதுடன் காணிச்சீர்திருத்தம் குத்தகை விவசாயிகளிற்கு உரிமம் வழங்குதல், சொத்துக்களின் மீள்பங்கீடு போன்றவற்றின் மூலம் ஏழைகளிற்கு சார்பான கொள்கைகளைப்பின்பற்றல்
4. தொழிலாளர்கள் சார்பாக இழிவுக் கூலிச்சட்டத்தை அரசு கடுமையாக அமுல்செய்து தொழிலாளர்கள் நிரந்தரப்பாதுகாப்பை பெறஉதவுதல் மேற் கூறிய வழிமுறைகள் மூலம் அரசு தலையிட்டு சந்தைப் பொருளாதாரமொன்றின் சிறப்பான இயங்கு நிலைக்குதவ முடியும்.

3. பொருளாதார உறுதியைப்பேணல் :

சந்தைப் பொருளாதாரமொன்றில் பொருளாதார உறுதியை நிலைநாட்டக் கூடியவகையில் அரசு தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்வேண்டும். பொருளாதாரச் செயற்பாடுகள் ஏற்ற இறக்கங்களிற்கு சீராக இயங்குவதே பொருளாதார உறுதியாகும். அதாவது பணவீக்க பணச்சுருக்கத்தை நீக்குதல், சென்மதி நிலுவை சமனிலையை ஏற்படுத்துதல் நாணயமாற்று வீதத்தை நிலையான மட்டத்தில்பேணுதல் வேலைவாய்ப்பில் ஏற்படும் தளம்பலைக் குறைத்தல் போன்றவற்றின்மூலம் பொருளாதார உறுதியைப் பேணமுடியும்.

பொருளாதார உறுதிப்பாடு 2 வகைப்படும் :

1. உள்ளக உறுதிப்பாடு – உள்ளக உறுதிப்பாடு உயர்உள்நாட்டுபணவீக்கத்தினை தவிர்த்துக்கொள்வதைக் குறிக்கும்.
2. வெளியக உறுதிப்பாடு – வெளியக உறுதிப்பாடு நாட்டின் சென்மதிநிலுவையில் உயரளவிலான நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினை தவிர்த்துக்கொள்வதனைக் குறிக்கும்.

பொருளாதார உறுதியின் முக்கிய அம்சமாகவிருப்பது விலைமட்ட உறுதியாகும். பணவீக்கமும் பணச்சுருக்கமும் பொருளாதார முன்னேற்றத்தைத் தடுக்கும் பிரதான

காரணிகளாகும். எனவே பொதுவிலைமட்டம் உறுதியாக இருக்கக்கூடிய வகையில் நடவடிக்கையினை அரசு மேற்கொள்ள வேண்டும்.

1. சனத்தொகையதிகரிப்பிற்கேற்ப உற்பத்தியை அதிகரித்தல்.

2. வேலைவாய்ப்பினை அதிகரித்தல்.

3. வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையினை இழிவுபடுத்தல்.

4. பணநிரம்பலை உத்தம மட்டத்தில் பேணுதல்.

போன்றவற்றின் மூலம் பொருளாதார உறுதியினை ஏற்படுத்த முடியும். சந்தைப்பொருளாதாரமொன்றில் அரசு பொருளாதார உறுதியினை பேணுவதற்காக முக்கியமான 3கொள்கைகள் ஊடாக தலையிட்டுக்கொள்கிறது. அவைபற்றி இனி நோக்குவோம்.

**1. இறைக்கொள்கை :**

நாட்டின் பேரினப்பொருளாதார குறிக்கோள்களை எய்தும்பொருட்டு அரச செலவீனம், வரிவிதிப்பு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைபோன்றவற்றை நெறிப்படுத்தி முகாமைசெய்வது இறைக்கொள்கையாகும். இறைக்கொள்கையினூடாக நேர்வரிகளை அதிகரித்துவிடுவதன்மூலம் செலவிடத்தகுவருமானத்தை குறைவடையச் செய்துகொள்வனவுத்தகுதியை குறைப்பதன் மூலம் கேள்வியை குறைவடையச்செய்து பணவீக்கத்தினை கட்டுப்படுத்தலாம். அதேபோல் மறைமுகவரிகளைக் குறைத்துவிடுவதன் மூலம் பொருட்கள் சேவைகளின் விலையை குறைவடையச்செய்து பணவீக்கத்தை கட்டுப்படுத்தலாம். மேலும் அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு பணவீக்கம் சாரா மூலங்களிலிருந்து நிதியீட்டம் செய்தல் உற்பத்தியை அதிகரித்து அதிகளவு வேலைவாய்ப்பைத் தரக்கூடிய முதலீட்டுத் திட்டங்களையும் பொருளாதார அடிக்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தல், சென்மதி நிலுவை சாதகமாகக் கூடியவகையில் ஏற்றுமதி இறக்குமதிகளை ஒழுங்படுத்தல் போன்றவற்றின் மூலமும் பொருளாதார உறுதியினை நிலைநாட்ட முடியும்.

**2. நாணயக்கொள்கை :**

நாட்டின் பேரினப்பொருளாதார குறிக்கோள்களை எய்தும்பொருட்டு பணநிரம்பல், வட்டிவீதம் போன்றமாறிகளை ஒழுங்குபடுத்தி முகாமை செய்வது நாணயக்கொள்கையாகும். இங்கு மத்தியவங்கி அரசின் சார்பாக வட்டி வீதம், பகிரங்கச் சந்தை நடவடிக்கை, சட்டப்படியான ஒதுக்கு வீதம், தெரிவுக்கடன் கட்டுப்பாட்டு முறைகள் போன்றவற்றின்மூலம் வங்கிகளின் கொடுகடன்களை ஒழுங்குபடுத்தி பணநிரம்பல், விலைமட்டம் போன்றவற்றை உறுதியாகப்பேணுகின்றது. இங்கு பாரிய வேலைவாய்ப்பினையும் உற்பத்தியதிகரிப்பினையும் ஏற்படுத்தக்கூடிய முதலீட்டுத்திட்டங்களிற்கு வங்கிகள் மூலம் கடன்வழங்க நடவடிக்கையெடுக்கலாம்.

**3. வெளிநாட்டு வர்த்தக மற்றும் நிதிக்கொள்கை :**

இது ஏற்றுமதி இறக்குமதி என்பவற்றுடன் தொடர்புபட்டதனால் இறக்குமதி பணவீக்கம் ஏற்படாதவகையிலும், நாட்டிற்கு நலன்தரக்கூடிய சர்வதேச ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலம் சென்மதி நிலுவையிலும் நாணயமாற்று வீதத்திலும் நேர்க்கணியவிளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் சர்வதேசரீதியான வர்த்தகக்கொள்கைகளை அரசு திட்டமிட்டு நடாத்த வேண்டும்.

**4. பொருளாதாரவளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தல் :**

பொருளாதாரவளர்ச்சியென்பது மாறா விலையிலானமொத்ததேசியஉற்பத்தி நீண்டகாலப்போக்கில் தொடர்ச்சியாக அதிகரிப்பதைக்குறிக்கும். ஆரம்பத்தில் பொசிந்துசெல்லும் கோட்பாட்டை வலியுறுத்தியவர்கள் வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் ஒன்றாகவே நோக்கினர். ஏனெனில் பொருளாதார வளர்ச்சியேற்படும்போது பொருளாதாரவளர்ச்சியின் பலாபலன்கள் கீழ்மட்டமக்களிற்கும் கசிந்துசெல்லுமென கருதியமையேயாகும். ஆனால் இது நடைமுறையில் எதிர்விளைவைக்காட்டியமையால் பின்வந்த பொருளியலாளர்கள்

அரசதலையீட்டை வலியுறுத்தினர். இவர்கள் வளர்ச்சியுடன் கூடிய மீள்பகிர்வினை வலியுறுத்தி அபிவிருத்தி வேறு வளர்ச்சி வேறெனவும் ஆனால் வளர்ச்சி அபிவிருத்திக்கான முன்நிபந்தனையெனவும் வலியுறுத்தினர். உண்மையில் அபிவிருத்தியென்பது பொருளாதாரவளர்ச்சியுடன் வேலையின்மை குறைவடைந்து வருமானச்சமமின்மை குறைவடைந்து மக்கள் உயர்வாழ்க்கைத்தரத்தினை அனுபவித்து நிற்பதனைக் குறித்து நிற்கும். சுருக்கமாக அபிவிருத்தியென்பது முழுமையான வறுமையில் ஓர் குறைவு ஏற்படுவதனை குறித்து நிற்கின்றதெனலாம். சந்தைப்பொருளாதாரத்தினூடாக தன்னிச்சையாக பொருளாதார வளர்ச்சியினையும், அபிவிருத்தியினையும் அடைந்துகொள்ளல் என்பது கடினமானதாகும். ஏனெனில் தனியார்துறையின் ஒழுங்குபடுத்தல் பொருளாதாரத்தினை ஒழுங்குபடுத்தல் சமூகபொருளாதார கீழ் கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், முதலீட்டிற்கான உசிதமான சூழ்நிலையை உருவாக்குதல் போன்றவை தொடர்பாக அரச தலையீடு அவசியமாகும். இதுபற்றி நாம் நோக்குவோம்.

(a) சந்தைத் தோல்விகள், விலையிடல்களை மேற்கொள்ள முடியாமை; பாரிய மூலதனத்தேவையும் அது தொடர்பான ஆபத்து நிலைமை ( Risk ) போன்றவை காரணமாக சமூக பொது முதலீட்டுத் திட்டங்களில் தனியார்துறை முதலிடத்தயங்குகின்றது. எனவே அரசாங்கம் இத்தகைய சமூக பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகள்மீது முதலிட வேண்டியுள்ளது. இத்தகைய முதலீட்டுத்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் தனியார்துறையினரின் பொருளாதார நடவடிக்கையின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதோடு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிக முதலீடுகளை மேற்கொள்ள தூண்டப்படுகின்றனர். இது மொத்த உற்பத்தி மட்டம், வருமானமட்டம், வேலை மட்டம் என்பவற்றில் சாதகமான நோக்கணிய விளைவினையேற்படுத்தும். உதாரணமாக அரசாங்கம் கட்டுநாயக்கா, பியகம, கொழும்பு, கொக்கல, கம்பகா ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு பாதைகள், நீர்வழங்கல், வடிகாலமைப்பு, புகையிரதப்பாதைகள், விமான நிலையங்கள் போன்ற அவசியமான பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை செய்தமையால் அதிகளவான முதலீடுகள் இங்கு குவிக்கப்பட்டதுடன் நிறுவப்பட்டதொழிற்துறைகளில் உற்பத்தித்திறனும் உயர்ந்து சென்றுள்ளது.

(b) உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கு பொதுத்துறையின் தலையீடு அவசியமாகவிருந்துவரும் துறை கல்வி, சுகாதாரம் மீதான செலவாகும். சந்தைமுறையின் கீழ் சமூகநலப் பொருட்களான கல்வி, சுகாதாரம் வழங்கப்படக்கூடியதாகவிருந்தாலும் சந்தைமுறையின் கீழ் நிலவும் நிரம்பல் அளவுகள் அவற்றின் கேள்வியைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லாதிருக்கலாம். சந்தைகள் மூலம் கல்வி, சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வந்தாலும் கட்டணம் செலுத்துபவர்கள் மாத்திரம் அதனைப் பெறமுடியும். உண்மையில் கல்வியும் சுகாதாரமும் எல்லோருக்கும் நியாயமான முறையில் மனித வள முதலீடு என்றவகையில் கிடைக்கச்செய்யவேண்டும். இதனைச் சந்தையிடம்விட்டால் எல்லோருக்கும் கிடைப்பது சாத்தியமற்றுப் போவதுடன் உயர்ந்தமட்ட எழுத்தாற்றலற்ற சமுதாயத்தையும் தோற்றுவிக்கலாம். அதிலும் சிறுதொகையினர்மட்டுமே கல்விக்கான பணம் செலுத்தக்கூடியவர்களாக இருந்துவரும் குறைவருமான நாடுகளைப் பொறுத்தவரையில் இந் நிலைமை தீவிரமடையும். அனைத்துக்கும் மேலாக கல்வி அல்லது பயிற்சி என்பவற்றின் இறுதி அனுகூலம் கல்வியைப்பெற்றவர்களிற்கு அல்லது ஊழியரை பயிற்றுவித்த வேலை கொள்வோருக்கு மட்டும் சேர்ந்துவிடாது முழுச் சமூகத்திற்கும் நன்மையைப் பெற்றுக் கொடுக்கும். தக்கபயிற்சி அல்லது திறன்களின் அபிவிருத்தியின் இறுதி

விளைவு ஊழிய உற்பத்தித்திறன் வளர்ச்சியாகும். இன்று கல்விமீதான பொதுசெலவீனம் சமூகசேவையாக நோக்கப்படாது மனித மூலதனத்தின் மீதான முதலீடாகவே நோக்கப்படுகிறது.

வரலாற்றுப் படிப்பினைகள் அனுபவங்களை எடுத்துநோக்கும்போது "உற்பத்தித் திறன் கொண்ட ஊழியப்படை துரிதவளர்ச்சியின் பின்னணியில் இருந்து வந்தது இரகசியமாகும்" என்ற உண்மையை கிழக்காசிய பொருளாதாரங்களின் அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது. அதேபோல் யப்பானில் அனைவர்க்குமான இலவசக்கல்வியில் அரசின் தலையீடு பெருமளவுக்கு சமத்துவ இயபுல்கொண்ட சமூகத்தை உருவாக்கியது. இதன் காரணமாகவே பாரம்பரிய கமத்தொழிற் பொருளாதாரம் துரிதவளர்ச்சி கண்டுவரும் கைத்தொழில் பொருளாதாரமாக மாற்றமடைந்தது. ஸ்தாபிதமான வளர்ச்சிக் கோட்பாடுகளை புறமொதுக்கிய விதத்தில் கிழக்காசியப் பொருளாதாரங்கள் சமத்துவ சமூகமொன்றில் உயர்மட்ட சேமிப்புக்களை சாதித்துக்கொள்ள முடியும் என்பதனையும் பௌதிக மூலதனத்தின் அதிகரிப்பிலும் பார்க்க மனிதமூலதனத்தின் அதிகரிப்பு மிகுந்த முக்கியத்துவத்தை கொண்டுள்ளதுஎன்பதனையும் எடுத்துக்காட்டியது.

உண்மையில் ஏற்றத்தாழ்வான கல்வி, சுகாதாரம் திறன்கள் என்பன வறுமையை நிலைத்திருக்கச் செய்யும். அதேவேளை கல்வி, சுகாதாரம், பயிற்சி என்பவற்றின் நியாயமான பகிர்வு வறுமையினைக் குறைக்க உதவுகிறது. எனவே மனிதமூலதனம் மீதான முதலீடு ஒருபுறம் வளர்ச்சியினைச்சாதித்துக்கொள்வதற்கும் மறுபுறத்தில் ஏற்றத்தாழ்வு நிலை குறைந்தளவில் காணப்படும் சமூக குறிக்கோளை சாதித்துக்கொள்வதற்கும் உதவுகிறது. கல்வி சுகாதாரம் மீதான மனிதமுதலீட்டை வசதிவாய்ப்புக்கள் குறைந்த சமூகப்பிரிவினர்மீது திருப்புதல் வேண்டும். இதனை அரசாங்கம் மாத்திரமே செய்யமுடியும்.

( o) பொருளாதார வளர்ச்சி / அபிவிருத்தியை ஏற்படுத்துதல் தொடர்பாக அரசின் தலையீடு வலியுறுத்தப்படும். மற்றைய துறை / அம்சம் சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டினை தடுத்து நிறுத்துவதாகும். ஏனெனில் பொருளாதார வளர்ச்சியுடன் நன்மைகள் மட்டுமல்ல தீமைகளும் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. சூழல் மாசாக்கல், சில இயற்கை வளங்களின் இழப்பு போன்றவை பொருளாதார செலவுகளாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனவேதான் பசுமைக்கணக்குகளில் பொருளாதார நடவடிக்கையின்போது ஏற்படும் இயற்கை வளங்களின் இழப்பு மற்றும் சுற்றுப்புறச்சூழல் மாசாக்கல் என்பன கணிக்கப்பட்டு அளவீடு செய்யப்படுவதுடன் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் சீராக்கம் செய்யப்படுகின்றது.

வளிமாசடைதல், நீர்மாசடைதல் போன்றசுற்றுப்புற சீர்கேடுகள் குறித்து யப்பான் அரசு அதிக அக்கறை காட்டி வந்துள்ளது. இதன் விளைவாக மாசாக்கலை எடுத்துவரும் கைத்தொழில்கள் மீது வரிவிதித்தல், ஏனையஒழுங்கு விதிகளைப் பிரயோகித்தல் போன்றவற்றை யப்பான் அரசு மேற்கொண்டது. இதன்போது குறைந்தமட்ட தொழில்நுட்பம் கொண்ட தொழிற்துறைகள்தான் உயர்ந்தமாசாக்கலை எடுத்து வருவதாக கண்டுபிடிக்கப்பட்டமையால் உயர்ந்த தொழில்நுட்பத்தை நோக்கிய நகர்வு ஒன்று யப்பானில் ஏற்பட்டுக்கொண்டது. எனவே சந்தைப் பொருளாதாரத்தின் கீழ் மாசாக்கல், சுற்றுப்புறச் சீர்கேடுகள் பற்றி தனியார் கவனம் செலுத்துவதில்லை. தமது விலையிடலிலும் அதனை கவனத்திற் கொள்வதில்லை. இதன் காரணமாக நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி ( Susfainable development )

பாதிக்கப்படலாம். எனவே சந்தைப் பொருளாதார முறையின் கீழ் அரச தலையீடு மிக அவசியமானதென்றாகும்.

**முடிவுரை :**

சந்தைகள் சிறந்தமுறையில் செயற்பட்டு பூரணபோட்டிநிலையில் இயங்கிவரும் போது மிகச்சிறந்த மூலவள ஒதுக்கீடு இடம் பெறுகின்றது. இதனை அடம்ஸ்மித் மறை கரத்தின் தொழிற்பாடு என் கூறினார். சிறந்த மூலவள ஒதுக்கீடு தொடர்பாக நாம் திருப்தி கொண்டாலும், வள மீள்பகிர்வினை, வருமான மீள்பகிர்வினை சந்தைப் பொருளாதாரமொன்றில் தன்னிச்சையாக செய்யுமென எதிர்பார்க்க முடியாது.

அரசாங்கம் சந்தைப் பொருளாதாரமொன்றில் தனியார் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வது அவற்றின்மீது தலையிடுவது அவ்வளவு பொருத்தமற்றது, செயற்றிறனற்றது. மாறாக சட்டத்தையும், ஒழுங்கையும் பேணல், சொத்துரிமையை உறுதிப்படுத்தல், பொதுப்பொருட்களை வழங்கல், சமூக நலப்பொருட்களை வழங்கல், உள் கட்டமைப்பு வசதிகளை வழங்கல், தனியுரிமையை கட்டுப்படுத்தல், தீயவிளைவினைத் தரக்கூடிய உற்பத்தியினை மட்டுப்படுத்தல், நலன் தரக்கூடிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல், அமுலாக்கல் என்பன குறித்து தேவையானபோது அரசு தலையிட்டுக் கொள்ள வேண்டும். இதன் மூலமே சந்தைப் பொருளாதாரத்தின் பலாபலன்களை நாட்டுமக்கள் எல்லோரும் உள்நாட்டிலும் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் ஒருசிலர் மாத்திரம் சந்தைப்பொருளாதாரத்தின் நன்மைகளை அனுபவித்துக்கொள்வர்.

இதேபோல சர்வதேசரீதியாக சந்தைப் பொருளாதாரத்தின் நன்மைகளை அபிவிருத்தியடைந்த நாடுகளே அதிகம்பெறுகின்றன என்றும் வளர்முக நாடுகள் சந்தைப் பொருளாதாரத்தின் பலாபலன்களை பெற்றுக்கொள்வதில்லையென்றும் பல வளர்முக நாடுகளிலுள்ள தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சென்ற ஆண்டு உலகவர்த்தக அமையத்தின் மாநாடு அமெரிக்காவின் சியாட்டாவில் நடைபெற்றபோது உலக வர்த்தக ஒழுங்குவிதிகள் மூன்றாம் உலக நாடுகளை அதிகம் பாதிக்கின்றது என்று கூறிப்பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதேபோல் 2000ஆம் ஆண்டு ஏப்ரலில் சர்வதேச நாணயநிதியம் உலகவங்கி ஆகியவற்றின் கூட்டத்தொடர் அமெரிக்காவின் வோசிங்டனில் நடந்தபோது பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிறுவனங்கள் வளர்முக நாடுகளின் பிரச்சனைகளை மேலும் மோசமாக்குகின்றன என்றும் அமெரிக்காவின் முகவராக தொழிற்படுகின்றன என்றும் குறை கூறப்பட்டது. எனவேதான் அண்மையில் கியூபாவில் நடந்த G77 மகாநாட்டின்போது உலகமயமாக்கல், திறந்த வர்த்தகம், சர்வதேச ஒழுங்கு விதிகள் போன்றவை வளர்முகநாடுகளைப் பாதிக்கின்றன என்று பல தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எது எவ்வாறாயினும் நீதியான புதிய சர்வதேச ஒழுங்குவிதிகளின் கீழ் சந்தைப்பொருளாதாரத்தின் நன்மைகளை வளர்முக நாடுகளிற்கு எடுத்துச்செல்லும் வழிமுறையொன்று கண்டுபிடிக்கப்பட்டாக வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் வறியநாடுகள் மேலும் மிகமோசமான பிரச்சனைகளை எதிர்நோக்கக்கூடும்.

# உலகின் பொறியியற் கைத்தொழிலின் வளர்ச்சி

**ராதிகா சுந்தரானந்தன்**
*2000ஆம் கலைப்பிரிவு.*

**பொறியியற் கைத்தொழில் :**

பொறியியற் தைத்தொழில் என்பது கப்பல் கட்டும்தொழில், மோட்டார் வண்டித் தொழில், விமானம் கட்டும் தொழில், பொறிகள் மின்இயக்க கைத் தொழில் என்பவற்றைக்குறிக்கும். இத்த கைய கைத்தொழில்கள் ஒவ்வொன்றும் அடைந்து வருகின்ற வளர்ச்சியினை நோக்கு வோம்.

**கப்பல்கட்டும் தொழில் :**

கப்பல் கட்டும் தொழில் இன்று பிர தான இடத்தை வகித்துவருகின்றது. கப்பல் கட்டுந்தொழிலை நிர்ணயிப்பதற்கு பிரதான காரணிகளாக பின்வருவன விளங்குகின்றன.

இத்தொழிலின் இடவமைப்பினை நிர்ணயிக்கும் பிரதான காரணியாக விளங் குவது இரும்புருக்குமையங்களாகும். கப்பற் பாரப்பொறிகள் உருக்குத் தகடுகள் உருக்குத் தண்டவாளங்கள் என்பவற்றை இலகுவில்பெற வாய்ப்பானவையாக இரும் புருக்குமையங்கள் விளங்குவதனால் இவற் றுக்கு அண்மையில் கப்பல் கட்டும் தொழிற் சாலை அமைந்து காணப்படுகின்றது. அடுத்து கப்பல்கள் பாரியளவில் கட்டப்படு வதனால் கப்பல்கள் செல்லக்கூடிய விசால மான துறைமுகங்களைக் கொண்ட கடற் கரை யோரங்களும் கப்பல் கட்டுந்தொழி லுக்கு அத்தியாவசியமானவையாக விளங்கு கின்றன. எந்திரவியலில் ஏற்பட்ட விருத்தி கப்பல்கட்டும் தொழிலை சிக்கல்மிக்கதாக்கி விட்டது. இதனால் சிறந்த தொழில்நுட்பத் திறன் வாய்ந்த தொழிலாளர்கள் கப்பல் கட்டும் தொழிலுக்குத் தேவைப் படுகின் றனர். மேலும் கொதிகலன்கள் எஞ்சின்கள் சில்லுகள் அச்சுகள், கயிறு சுற்றும் அச்சா ணிகள் பம்பிகள் தளபாடங்கள் எனப் பல் வேறு பொருட்கள் தேவைப்படுவதி னால் இத்துறை சார்ந்த தொழில்களும் விருத்தியுற்ற நாடுகளிலேயே கப்பல் கட்டும் தொழில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உலகிலே கப்பல்கட்டும் தொழில் விருத்தியடைந்த நாடுகளாக யப்பான், ஐக்கியராச்சியம் ஜேர்மனி சுவீடன், டென்மார்க், நெதர் லாந், பிரான்ஸ் முன்னைய சோவியற்குடி யரசு போன்றன விளங்குகின்றன. கப்பல் கட்டும் தொழிலில் முதன்மைபெற்ற நாடாக நீண்டகாலமாக விளங்கியது ஐக் கிய இராச்சியமாகும். இன்று இவ்விடத்தை யப்பான் பிடித்துவிட்டது. உலகில் கப்பல் உற்பத்தியில் 50% மான கப்பல்களை யப் பான் உற்பத்தி செய்து வருகின்றது. யப் பானில் கிடைக்கும் இரும்புருக்கு கடற்கரை யோரங்களுக்கு அண்மையில் அமைந்திருக் கின்றமை, துறைமுக விருத்தி, புதிய தொழில்நுட்பம் என்பன யப்பானில் கப்பல் கட்டும் தொழில் விருத்தியடைந்ததற்குக் காரணம் ஆகும். இன்று யப்பான் 2லட்சம் தொன்நிறைகொண்ட பாரிய கப்பல்கயையும் அமைத்து வருகின்றது. ஐக்கிய இராச் சியம் ஒருகாலத்தில் $\frac{1}{2}$ பங்கினை உற்பத்தி செய்து வந்தது. ஆனால் இன்று 5%மான கப்பல்களையே கட்டிவருகின்றது. போட்டி நாடுகளின் மலிவான உற்பத்தி யப்பானின் நவீன தொழில்நுட்பத்துடன் போட்டியிட முடியாமை போன்ற காரணங்களே ஐக்கிய இராச்சியம் கப்பல் கட்டுந் தொழிலில் வீழ்ச்சியடையக் காரணமாகும். கிளைட் சைட், மெர்சிசைட், போக்கன்கெட், பெல் பாஸ்ற், பரோ என்பன பிரதான கப்பல் கட்டும் தொழிற்சாலைகளாக ஐக்கிய இராச்சியத்தில் விளங்கியது. 2ஆம் உலக மகாயுத்தத்துக்குமுன் ஜேர்மனி கப்பல்

கட்டும் தொழிலில் முதல் இடத்தினைப் பெற்றது. பின் பிரான்ஸ், ருசியா, இத்தாலி போன்ற நாடுகளும் இத்தொழிலில் ஈடுபட்டன. ஐக்கிய அமெரிக்கா உலகிலே அதிகமான கப்பல்களைக் கொண்டிருந்தாலும் கப்பல்கட்டுந் தொழிலில் அவ்வளவாக முன்னேற்றம் அடையவில்லை. இன்று போர்க்கப்பல்கள் எண்ணெய்க்கப்பல்கள், சரக்குக்கப்பல்கள் எனப்பல்வகையான கப்பல்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கப்பல் கட்டுந்தொழிலின் அண்மைக் காலப்போக்கினை நோக்கினால் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யப்பான் போன்ற நாடுகளின் கப்பல்களுக்கு அதிகளவு மதிப்பும் சந்தைவாய்ப்பும் இருக்கின்றது. அதற்குக் காரணம் நவீன எலக்ரோனிக் சாதனங்களும் பாரியளவு நீடித்த தரமும் ஆகும். முன்பு கப்பல்கள் துறைமுகங்களில் கட்டப்பட்டன. ஆனால் இன்று அவற்றின் பாகங்கள் வெவ்வேறு பிரதேசங்களில் தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்டு பாரிய துறைமுகக் கட்டிடங்களில் பொருத்தப்படுகின்றன. பழைய காலத்தில் புகழ்பெற்றிருந்த கப்பல் கட்டுந்தளங்கள் இன்று தம் முக்கியத்துவத்தினை இழந்துவிட்டன. குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் நியூ இங்கிலாந்துமையம் விளங்குகின்றது. வெளிநாட்டு வர்த்தகம். யுத்தங்கள் என்பன கப்பல்கட்டும் தொழிலை விருத்தியடைய வைத்துள்ளன. இன்று கொள்கலன்களைக் கொண்ட கப்பல்கள் கட்டப்பட்டுவருகின்றன. உதாரணமாக பெற்றோலியப் பொருட்கள் அப்படியே நிரப்பப்படுகின்றன. தானியங்களும் கொள்கலன்களில் அப்படியே நிரப்பப்படுகின்றன. செய்மதிகளின் உதவியுடன் செல்லக்கூடிய கப்பல்களும் கட்டப்பட்டு வருகின்றன.

**விமானம் கட்டும் தொழில் :**

பொறியியற் கைத்தொழிலில் விமானம் கட்டும் தொழிலும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. றைற் சகோதரர்கள் முதன் முதலில் விமானத்தினைக் கண்டு பிடித்தனர். இதன் பின்னர் ஐக்கிய இராச்சியமும் பிரான்சும் விமானம் கட்டும் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தன. 1ஆம் 2ஆம் உலகமகாயுத்தத் தேவைகளுக்காக யப்பான், ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் முழுமூச்சுடன் ஏராளமான விமானங்களைக் கட்டுவித்தன. இன்று ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யப்பான். ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா போன்ற நாடுகள் விமானம் கட்டுந் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. விமானம் கட்டுங் கைத்தொழில் ஒன்றை நிறுவ பரந்த இடவசதியும் மூலதனமுமே அடிப்படைத் தேவைகளாகும். அலுமினியம் எங்கு கிடைக்கின்றதோ அங்கு இக்கைத்தொழில் நிறுவப்படும். அலுமினியம் உற்பத்தி செய்யும் இடம்மட்டுமெல்லாமல் இலகுவில் கொண்டு வரக் கூடிய பகுதிகளிலும் இத்தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது அலுமினியம் பாரம் குறைந்ததாகவும் துரு ஏறாததும் வலிமையானதாகவும் இருப்பதனால் விமானங் கட்டுவதற்கு உகந்ததாக இருக்கின்றது. ஐக்கிய அமெரிக்கா, நோர்வே, கனடா, ருசியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அலுமினியம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இது விமானம் கட்டும் தொழிலுக்குச் சாதகமாக அமைந்துள்ளது. எடுத்துக் கட்டப்பட்ட விமானத்தை ஓடிப்பரிசோதிக்க பரந்த இடவசதி வேண்டும். ஆகவே இத் தொழிலை நிறுவுவதற்கு பரந்த இடவசதியும் வேண்டும். விமானங்களைக் கொள்வனவு செய்யும் நாடுகளே இத் தொழிலுக்கு உதவிப் பணம் வழங்குகின்றன. தொழிலாளர்கள் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களாகவும் உயர்ந்த சிறப்புத் தேர்ச்சியும் நீண்ட காலப் பயிற்சியும் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்தொழிலானது விமானத்தின் வெளிப்பகுதியை உற்பத்தி செய்தல், உந்து கருவியினை உற்பத்தி செய்தல் எனப் பகுக்கப்பட்டுள்ளது. விமானம் கட்டும் தொழிலில் முதன்மை பெற்ற நாடாக விளங்குவது ஐக்கிய அமெரிக்காவாகும். போல்ரிமோர், கலிபோணியா, நியூயோக் மக்சிக்கன், கொனற்றிக்கட், ஒகையோ ஆகிய பகுதிகளில் விமானம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன ஐக்கிய ராச்சியத்தில் பேமிங்காம் கோவேந்திரி, பிறிஸ்ரல் லண்டன் ஆகிய இடங்கள் விமானங் கட்டும் இடங்கள் ஆகும்.

யப்பானில் டோக்கியோ, யோக்கமாகா கோபே, ஓசாகா, நாகோயாப் பகுதிகளில் விமானக் கூட்டுத்தாபனங்கள் உள்ளன. பிரான்சில் பிரதான விமானங்கட்டும் மையம் பாரிசை அடுத்து உள்ளது, சுப்பர் சொனிக் விமானங்களை பிரான்ஸ் உற்பத்தி செய்து வருகின்றது.

விமானங் கட்டும் தொழிலின் அண்மைக்காலப் போக்கினை நோக்கும் போது இதன் உற்பத்திச் செலவு அதிகரித்து வருகின்றது. இவ்வுற்பத்தியினால் கிடைக்கும் இலாபம் குறைவாக உள்ளது. இன்று மிகவும் மோசமான வசதியுடைய நுணுக்கமான விமானங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கொண்கோட் ஒலியிலும் வேகமாகச் செல்லக்கூடிய விமானங்களும் இன்று உற்பத்தி செய்யப்படுகின்றன. நுணுக்கமான விமானம் ஒன்றைக் கட்டுவதற்கு 2 வருடங்கள் எடுக்கின்றன. இனி வருங்காலங்களில் விமானம் கட்டும் தொழிலில் பாரிய விருத்தி ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

மோட்டார் வண்டித் தொழில்:

சிறந்த கொண்டு செல்ல சாதனங்களாகவும் போக்குவரத்துச் சாதனங்களாகவும் மோட்டார் வண்டிகள் விளங்குகின்றன. பல்வேறு ஆலைகளில் உருவாக்கப்படும் உதிரிப்பாகங்கள் கோப்பு நிரல் ஆலையில் பொருத்தப்பட்டு மோட்டார் வண்டியாக மாறுகின்றது. இரும்பினையும் உருக்கினையும் கொண்ட இரும்புருக்குப் பிரதேசத்துக்கு அண்மையில் மோட்டார் வண்டித் தொழிற்சாலை அமைக்கப்படுகின்றது. மோட்டார் வாகனங்களின் அமைப்பு, வேகம், எரிபொருள் நுகர்வு, நீண்ட பாவனை வீதிகளுக்கேற்ப ஓடும் தன்மைகள் போன்ற தொழில் நுட்பத்திறன் வாய்ந்த இடங்களில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுவருகின்றது. சந்தை வாய்ப்பும் மூலதனவசதியும் இத்தொழிலின் விருத்திக்குக் காரணமாக அமைகின்றன. இந்தியா போன்ற நாடுகள் கார்களிலும்பார்க்க பஸ்கள், லொறிகள், என்பவற்றினையே அதிகம் உற்பத்தி செய்கின்றன. யப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி பிரான்ஸ், இத்தாலி, இந்தியா, ஐக்கியராச்சியம் போன்ற நாடுகள் மோட்டார் வண்டித் தொழிலில் முதன்மைபெற்ற நாடுகளாக விளங்குகின்றன. கார்கள், மோட்டார் சைக்கிள், லொறிகள் எனப்பலவகையான மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்து யப்பான் இன்று முதன்மை பெற்ற நாடாக விளங்குகின்றது. மின்னியக்கத்துறையின் விருத்தியும் இரும்புருக்குத் தொழிலின் விருத்தியுமே யப்பானின் மோட்டார் வண்டித்தொழிலின் விருத்திக்கு காரணமாக அமைந்து காணப்படுகின்றது. மேலும் மோட்டார் வண்டிகளின் சொகுசானவடிவமைப்பும் பாரம்குறைவாக இருப்பதும் மலிவானவிலை, நீண்டபாவனை உதிரிப் பாகங்களை இலேசாகப்பெறக்கூடியதன்மை போன்றனவும் யப்பான் முன்னேறக் காரணமாக அமைகின்றன. நிசான் மிச்சுபிசி ரொயோட்டா, இசுசு, கொண்டா, சுசுக்கி போன்ற வாகனங்கள் ஏனைய நாடுகளுடன் போட்டிபோட்டு வருகின்றன.

ஐக்கிய அமெரிக்காவின் இரும்புருக்குத் தொழிலும் ஈர்ஏரிப்பிரதேசத்தில் எந்திரங்கள் தயாரிப்பதற்கு இருந்த அனுபவமும் மோட்டார் வண்டித் தொழிலுக்கு ஏதுவானவையாக விளங்கின. டெற்றொயிற் கிளீவலான்ட் ஆகிய பகுதிகளுக்கு பிற்ஸ்பேக் இரும்புருக்கான தேவையான உருக்குத் தகடுகள் சட்டங்கள் என்பவற்றினை வழங்கி வருவதனால் இப்பிரதேசங்கள் மோட்டார் வண்டித் தொழிலில் முதன்மை பெற்று வருகின்றன. போதியளவு மூலதனம் தொழில் நுட்பம் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு என்பன இங்கு பரந்த சந்தை காணப்படுவதற்கு காரணம் ஆகும். அமெரிக்கா யப்பானின் சொகுசுக்காரர்களை விரும்புவதனால் இரண்டு நாடுகளும் சேர்ந்து போர்ட் நிசான்கார் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

ஐரோப்பாவில் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி என்பன மோட்டார் வண்டித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. பெரும் தொகையான கார்கள் விலைப்படாமை உலக நாடுகள் விதித்த இறக்குமதித் தீர்வையின் அதிகரிப்பு விலை

கூடியதும் எரிபொருளை கூடுதலாக நுகரக் கூடியதுமான பெரிய கார்களை உற்பத்தி செய்தமை யப்பானிய வாகனங்களின் போட்டி என்பன இந்நாடுகளின் மோட்டார் வண்டித் தொழிலின் வீழ்ச்சிக்குக் காரண மாக அமைந்தன. ஐக்கியராச்சியத்தின் மொறீஸ், றேனேஸ்ட் பிரான்சின் பேஜோ இத்தாலியின் பியற் ஜேர்மனியின் பொக்ஸ் வேகன் என்பன உலகப் புகழ்பெற்ற கார்கள் ஆகும். இந்தியாவின் டாட்டா லேண்ட பாரண்குகள் கரடு முரடான வீதிகளுக்கு உகந்தனவாக (இருப்பனவாக) இருப்பதனால் சந்தை வாய்ப்பைப்பெற்றுள்ளன.

**மின்னியக்கத் தொழில் :**

அண்மைக் காலத்திலேயே இத்தொழில் விருத்தி அடைந்துள்ளது. வானொலி, தொலைபேசி, தொலைக்காட்டி, பக்ஸ், ரெலக்ஸ், ரேடர் செய்மதி கணனிகள் முதலியவை மின்னியக்கப் பொறிகளாகும். யப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், ஜேர்மன், ருசியா, பிரான்ஸ் முதலிய நாடுகள் மின்னியக்கத் தொழிலில் முன்னேறியுள்ளன.

**பொறிகள் :**

அச்சுப் பொறிகள், தகரத்தில் அடைத்தல், பொருட்களைப்பதனிடுதல், பாற்பண்ணைத் தொழில், உலோகவேலை, மரவேலை, தையல் வேலை, நெசவு வேலை முதலிய பலவற்றினையும் பொறிகள் என்ற பெயரால் அழைக்கின்றோம். ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சுவீடன், பெல்சியம், ஜேர்மனி, இத்தாலி, சுவிஸ்லாந் என்பன நெசவுப் பொறிகளை உற்பத்தி செய்து வருகின்றன. இந்தியாவும் அண்மையில் இவ்வுற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் கைத்தொழிற் பொறிகளை உற்பத்தி செய்வதிலும் பாவிப்பதிலும் பெரும்மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நீர்மின்வலுவின் உபயோகம் தன்னியக்கப் பொறிகள் பாவனைக்கு வந்துள்ளன. இன்று எலக்ரோனிக் கருவிகள் பொருத்தப்பட்ட பொறிகள் உற்பத்தி பொறிகளின் வேலைத்தரத்தினை உயர்த்தியுள்ளது.

---

**சூழல் சுற்றுலா என்றால் என்ன ?**

சுற்றாடலை பாதுகாத்து உள்நாட்டு மக்களின் நலன்களை முன்னேற்றும் இயற்கை இடங்களுக்கான பொறுப்பு வாய்ந்த பயணம்.

# "லயஞானகுபேரபூபதி"

ஆசிரியர் சி. சிவஞானராஜா,
நுண்கலைத்துறை,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்"

இது நல்லூரின் சிறப்பை எமக்கு உணர்த்துகிறது.

"கனவிலே நீகாணும் காட்சிகளை நீ சென்று
இணுவிலிலே நின்றுபார் தெரிவாய்"

இது இணுவிலின் சிறப்புதனை எமக்கு உணர்த்துகிறது.

"கொண்ட மாங்கல்யம் கோலமாய் நிலைத்திடத்
தொண்டை மானாற்றுக்கு நீ செல்"

இது செல்வச்சந்நிதியின் சிறப்பை எமக்கு உணர்த்துகிறது.

"கண்ணுக்கும் பண்ணுக்கும் வெண்ணெய்க்கும் பயமின்றி
அண்மிந்த அளவெட்டி செல்வாய்"

இது அளவெட்டியின் சிறப்பை எமக்கு உணர்த்துகிறது. இவற்றையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று பின்னர்தான் புரியநேரிடும். தீர்த்தங்களால் மகிமைபெற்ற பூமியாகப் பாரதம் விளங்குகிறது. காத்திரமான மண்வளம் மலிந்த பூமியாக விளங்குவதில் இலங்கை அற்புதம் பெறுகிறது உலகிலேயே இந்தியாவும், இலங்கையும் வரம்பெற்ற நாடுகளாகக் கருதமுடியும். காரணம் தெய்வீகமும், ஆன்மீகமும், பண்பாடு—கலாச்சாரமும் மேலோங்கி நிற்பதே அதுவாகும். இரு நாடுகளுக்கும் பண்டுதொட்டு இற்றைவரை ஆன்மீகத் தொடர்புகளும் உண்டு. இத்தொடர்புகள் உலகம் உள்ளவரை வளரும் தன்மையன. இத்தன்மையதால் மனம் சார்ந்த தர்மங்களை வளரச் செய்யும் மனோதர்மக் கலைகள், நீடு வாழ்கின்றன. இதனால் நுண்கலைகள், அழகியல் கலைகள், முருகியல்கலைகள், லலித கலைகள், கவின்கலைகள் எனச் சிறப்பித்துக் கருதப்படும் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகியன தெய்வ அனுக்கிரகத்தோடு சிருஷ்டிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. இவற்றை யாராலும் தடுக்கவோ, தணிக்கவோ, அழிக்கவோ, அடக்கவோ முடியாது.

இந்நிலையில் அகில உலகத்தையும் மெய்சிலிர்க்கவைத்த, சொக்க வைத்த, சோபிக்கவைத்த, மனோலயப்பிரவாகம் செய்த ஒரு மாமனி தனை எமது நாடு பெற்றுக்கொண்ட பாக்கியம் எமக்கெல்லாம் பெருமை தருகிறது இப்பெருமைதனைக் கருதும்போது தான், எமது ஊரின் பெருமைக்கான மண்ணைப் பற்றிக் கருத முடிகிறது. இதனையெல் லாம் யார் கருதப்போகிறார்கள்? யாருக்குத்தான் நேரம் இருக்கிறது? கணனிமயமாக மாறிவரும் நவீன உலகம், கணித, விஞ்ஞான ஏனைய துறைகளில் மூவாயிரம் ஆண்டளவில் நிகழ்த்தப்போகும் சாதனையைச் சிந்திக்கின்றது. ஆனால் இசை உலகமோ ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபது எழுபதுகளில் கணனிக்குள் பத்திரப்படுத்தி வைக்க முடியாத, அபாரத்திறமைகொண்ட விரல்களினால் விண்ணையும், மண்ணையும் மகிழவைத்த ஒரு சீரிய தவில்கலைஞனைக் கண்டு வியந்து நின்றது. அத்தகு கலைஞரே, "லயஞானகுபேரபூபதி" என்று போற்றப்பட்ட அளவையூர் தெட்சணாமூர்த்தி அவர்களாவார், பிரபல இசைஞானம் மிக்க தவில்மேதையாக விளங்கிய, விஸ்வலிங்கம் அவர்களுக்கும், பண்பாடும், பயபக்தியும் நிறைந்த இரத்தினம் அம்மாளுக்கும், 26-08-1933இல் அவதரித்த தெய்வீகப் புத்திரரான தெட்சணாமூர்த்தியா வார். அறிவும், அழகும், அற்புதமும் நிறைந்த, அதீதவளர்ச்சி பெற்றதைக் கண்ணுற்ற பெற்றோர் உரியகாலமறிந்து, பிரபல தவில் வித்துவான் களிடம் பயில அனுமதித்தனர் குடும்ப பாரம்பரியங்களுக்கமைவாக, பிரபல தவில் கலைஞர்களான என். சின்னத்தம்பி, பி. எஸ். இராஜ கோபால், காமாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் குருவாக அமைந்தனர். குருசிஷ்ய முறையில் தெட்சணாமூர்த்தி அவர்கள், ஒரு நாளைக்கு பதினாறு மணித்தியாலங்கள் சாதகம் செய்வதற்குத்தெய்வீக சம்பந்தம் சாதகமாக அமைந்ததெனலாம். ஒருகலையைப் பயில்வதற்கு மாதா, பிதா குரு, தெய்வ வணக்கமும், மூத்தவர்களின் ஆசீர்வாதமும், இயற்கை யின் அனுகூலமும் இருந்தால் மட்டுமே கலையும் வளரும், நிலையும் உயரும் கலைஞரும் உயர்வார்கள் (கணனியுகத்தில் குரு – சிஷ்ய பக்குவம் நிறைந்திட இறைவன் தான் கருணைதரவேண்டும்) வணக்க மும், ஆசீர்வாதமும் நிறைந்த தெட்சணாமூர்த்தியின் வித்தைகண்ட யாவரும் ஒரே மனதுடன் இந்தியாவுக்கு, அனுப்ப ஆவலுற்றனர். இந்தியாவில் குருகுல வாசசிட்சையில் முன்னோடியான நாச்சியார் கோவில் இராகவப்பிள்ளை குருவாக அமைந்தார். இரண்டு வருடங்கள் சிட்சையைக் கற்றுக்கொடுத்த இராகவப் பிள்ளையவர்கள் கூறிய வார்த்தைகள் இங்கு சிந்திக்கத்தக்கவை. மகிழத்தக்கவையே

"உனக்கு இனிச் சொல்லித்தர என்னிடம்
ஒன்றுமே பாக்கியில்லை. ஒரு விடயம்
காதிலே விழுவதற்குள் உனது கைகளில்
அது ஒலித்து விடுகிறது இறைவனின்
வரப்பிரசாதம் பெற்ற நீ ஊருக்குத்
திரும்பலாம் மகோன்னத பெயரும், புகழும்
உன்னைவந்து சேர அதிக காலம் இல்லை"

என்பதே அதுவாகும். இத்தகு ஆசீர்வாதத்துடன் இலங்கை திரும்பிய வேளை, தந்தையாரின் மறைவு காரணமாகக் குடும்பப் பொறுப்புக்குரிய தனயனாகத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. தொடர்ந்து தனது மூத்தசகோதரி கணேஷ் குடும்பத்துடன் வாழ்வதற்காக அளவெட்டிக்குரிய மண்வாசனையும் சேர்ந்தபோது தான் தெட்சணாமூர்த்தியின் கைகள் பேசத்தொடங்கியது. இந்தச் சங்கமிப்பினைத் தொடர்ந்து, பிரபல தவில் வித்துவான்களாகிய யாழ்ப்பாணம் காமாட்சி சுந்தரம்பிள்ளை, இணுவில் சின்னத்தம்பி, பி. எஸ். இராஜகோபால், இந்தியாவில் இருந்து வருகைதந்த பிரபல தவில் வித்துவான் நாச்சியார் கோவில் இராகவப்பிள்ளை, திருமுல்லைவாயில் லயச் சக்கரவர்த்தி முத்துவேற்பிள்ளை, திருவிழந்தூர் இராமதாஸ்பிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளை, வடபாதி மங்கலம் தட்சணாமூர்த்திப்பிள்ளை, கும்பகோணம் தங்கவேற்பிள்ளை, நீடாமங்கலம் சண்முகவடிவேல் முதலியோருடனும், பிரபல்யமான நாதஸ்வர வித்துவான்களாகிய யாழ்ப்பாணம் முருகையாப்பிள்ளை, சீர்காழி திருநாவுக்கரசுப்பிள்ளை, பிரபல்யமான நாதஸ்வர ஜோதியாக விளங்கிய திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியம்பிள்ளை, குழிக்கரைப் பிச்சையாப்பிள்ளை, காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை, டாக்டர் ஷேக்சின்ன மௌலானா, திருவிடை மருதூர் வீரசாமிப்பிள்ளை, திருவீழிமிழலை கோவிந்தராஜபிள்ளை சகோதரர்கள், செம்பொன்னாறு முத்துக்குமாரசாமிப்பிள்ளை சகோதரர்கள், சிதம்பரம் ராதாகிருஷ்ணபிள்ளை, பல்லவி நடராஜசுந்தரம்பிள்ளை, தருமபுரம் கோவிந்தராஜாபிள்ளை — சகோதரர்கள், கோட்டூர் இராஜரத்தினம்பிள்ளை, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், வேதாரணியம் வேதமூர்த்தி, மதுரை சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்கள், பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, இணுவில் தவில்மேதை சின்னராஜா, மற்றும் பெரியகணேசு, சின்னக்கணேசு, அளவையூர் குமரகுரு, புண்ணியமூர்த்தி, அளவையூர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி என். கே. பத்மநாதன், சுந்தரமூர்த்தி, அளவையூர் பாலகிருஷ்ணன், சிதம்பரநாதன், கோண்டாவில் பாலகிருஷ்ணன், சாவகச்சேரி பஞ்சாபிகேசன், கோண்டாவில் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள், தவில் கலைஞர் காரையூர் கணேசன், தைதடிப்பழநி இன்னும் பல கலைஞர்களுடன் யாழ்ப்பாணத்தின்கண் ணமைந்த அனைத்து ஆலயங்களிலும், மங்கள வைபவங்களிலும் சுச்சிதமாகவும், காத்திரமாகவும் வாசித்த பேறதனால் வரம்பெற்ற திறம் கலைஞனாக தெட்சணாமூர்த்தி திகழ்ந்தார். இவற்றையெல்லாம் பார்த்து, கேட்டு, அனுபவித்தவர்கள் உண்மையிலே யாழ்க்குடா நாட்டுமக்கள் குறிப்பாக அளவெட்டி, இணுவில் மக்கள் மகா பாக்கியசாலிகளேயாவார்கள்.

சென்னைத் தமிழ்ச்சங்கத்தின் இசைவிழாவிலே, காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளையின் நாதஸ்வர இசைமாரியின் போது, நீடாமங்கலம் சண்முகவடிவேல் அவர்களோடு, தெட்சணாமூர்த்தி அவர்களும்

சேர்ந்து வாசித்த தவில் கச்சேரியில் தான் இந்தியாவே ஒருகணம் மெய்மறந்ததெனலாம். இந்தியாவில் முத்திரை பதித்த கச்சேரியாகக் குறிப்பிடலாம். அகில இந்திய வானொலி, வழமையாக நள்ளிரவு பன்னிரண்டு மணியுடன் நிறுத்துவதற்குப்பதிலாக, ஒலிபரப்பினைத் தெட்சணாமூர்த்தியின் தவில்கச்சேரி முடியும்வரை நீடித்தது. ஸபாஷ், ஸபாஷ் என இரசிகப்பெருமக்கள் இரசித்தகாட்சி மெய்சிலிர்க்க வைப்பதாகும். இன்னும் சொல்லவா!...

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலின் திருவிழா விற்கென இந்தியாவிலிருந்து வருகைதந்த பிரபல நாதஸ்வர மேதை ஷேக் சின்னமௌலான அவர்கள், நாதஸ்வர மழைபொழிந்தபோது, கச்சேரிதர்மம் காத்தவராய், இரவு ஒன்பது மணியிலிருந்து அதிகாலை நான்குமணிவரை தனது தவில் லய வின்னியாசத்தினால் ஜனசமுத்திரத் தினைக்கொள்ளை கொண்ட குபேரபூபதியாக விளங்கியமையே, யாழ் மாவட்ட தவிலரங்கினது உன்னதமான முத்திரைக்குக்குத் தெட்சணா மூர்த்தியவர்கள் பெற்ற வலம்புரி எனலாம். அந்தமேடையில் வைத்தே "டாக்டர்" பட்டம் கொடுத்திருக்கப்படவேண்டிய தேவையினை, அதீதக் கலைஞர்கள் யாருமே உணராதது கவலைக்குரியதொன்றாகும். இப்போதுகூட வழங்கமுடியும். யார் சிந்திக்கப்போகிறார்கள்? இந்த விடயத்தில் புத்திஜீவிகள் யார்தான் ஒற்றுமையாகப் போகிறார்கள்? ஒரு கலைஞனை இன்னொரு கலைஞன் வாழ்த்துவது என்பது இலங்கை யில் எப்போது உதயமாகும் என்பதனையே, ஒரு சாதாரண, வளரும் கலைஞன் எதிர்பார்க்கின்றான்! ஒரு குழந்தைக் கலைஞரைக்கூட ஆதர வாக அரவணைக்கின்ற தன்மையினை தெட்சணாமூர்த்தி அவர்களிட மிருந்துதான் கற்றுக்கொள்ள முடியும். மேடையிலே தாளத்தில் தடம் புரண்ட கலைஞர்களை, இலாவகமாகக் காப்பாற்றிய இசைஞான வல்லமை அவருக்கே தனித்துவமானதாகும்.

இசைஞானம், லயஞானம், சொல்ஞானம், பழகும்ஞானம், சக கலைஞர்களோடு வாழுகின்ற ஞானம், மனோதர்மஞானம், ஆன்ம ஞானம், இரசிக்கப்பெருமக்களைக் கவருகின்ற ஞானம், உடை நடை பாவனை ஞானம், விளம்பரமற்ற ஞானம், சமயஞானம், சக்கரவர்த்தி யாக இருந்தும் அளந்து பேசுகின்ற ஞானம், கலைஞர்களுக்கு ஏதாவது துன்பம் நேரிடும்போது உதவிசெய்து அவர்களையும் தாங்குகின்ற வாழ்வியல் தருமம், நேரம் தவறாமை, மேடைக்குரிய தருமம், கச்சேரி தர்மம் யாவற்றையும் காப்பாற்றிய சீரிய கலைஞனாக, இசையுலகில் முடிசூடாமன்னனாக, இலங்கையில் மட்டுமல்ல உலகிலேயே அதியுயர் விருது பெற்றிருக்கவேண்டிய ஒரு இசைமேதை தெட்சணாமூர்த்தி அவர்

களுக்குக் கலாச்சாரப் பண்புகளை மதிக்கின்ற சமுதாயம் ஆற்றவேண்டிய தேவைகள் பல உண்டு. அவற்றில் முக்கியமானவை.

(அ) அமரத்துவம் அடைந்தபின்னர் வழங்குகின்ற அதியுயர் விருது அளித்தல்.

(ஆ) லயஞான குபேரபூபதி மண்டபம் அமைத்தல்.

(இ) இணுவிலில் அமைந்த அவரது சிலையினைக் கலைத்துவம் பெறச் செய்தல்.

(ஈ) அவர்சார்பில் இசைவிழா நடாத்துதல்.

(உ) அவர் வாழ்ந்த இல்லத்தினைத் தெய்வீக இல்லமாக்கல், பேணுதல்.

(ஊ) பல்கலைக்கழக மட்டத்தில், பாடசாலை மட்டத்தில் கட்டுரை, இசைப்போட்டிகளை நடாத்துதல் பேருரை வழங்குதல்.

(எ) லயஞான குபேரபூபதி – தெட்சணாமூர்த்தி நம்பிக்கை நிதிச் சபையை ஏற்படுத்துதல்.

(ஏ) வருடமொருமுறை இசைக்கலைஞர்கள் பங்குபற்றும் இசைமாநாடு கூட்டுதல்.

போன்ற இன்னோரன்ன இசைப்பணிகளை முன்னெடுக்கலாம். இதனையார் முன்னெடுக்கவல்லவர் என்று கருதும் போது, இசைத் துறையில் முன்னணிக்கலைஞர்களாக விளங்கும் வாய்பாட்டு, வயலின், மிருதங்க, தவில், நாதஸ்வர, நுண் கலைப்பீட முத்த கலைஞர் களையே சாரும்,

முக்கியமாக, இணுவில் மண்ணுக்கும், அளவெட்டி மண்ணுக்கும் இந்தப்பாரிய கடமையுண்டென்பதை யாருமே அலட்சியம் செய்துவிட முடியாது.

கற்பனைச் சுரங்கம், கரவேக கேசரி, பல்லவி விஸ்தாரிணி, தாள நடைச்சுரபி, லயச்சக்கர வர்த்தி, மனோலயச்சிற்பி, லயஞானவாரிதி, லயஞானமேதை, லயஞான விருட்சம், தவில்ஞானக் குரிசில், கரவேகக் கலாநிதி, தவிலரசு, அதிதலயப்பிரவாகி, தவில் கலைமாமணி, லயசமுத்திரமுத்து, லயஞான சூரியன், தவில் மேதை... என இவ்வுலகில் கூடிய பட்டங்களையும், கூடிய பதக்கங்களையும் பெற்ற இசைக் கலைஞராக மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்துவரும் லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தி அவர்கள் தெய்வீகப்பேறு அடைந்த தினமாகிய 13-05-1975 அன்று ஸ்கந்தா சமுகம் தனது அஞ்சலியைக் காணிக்கை யாக்கிக் கௌரவமளித்தது. அடுத்து வரும் தினமாகிய 13-05-2001இல் அவரைக் கௌரவமளிக்கும் வகையில் நினைவுப்பேருரை ஸ்கந்தா சமூகத்தினரால் கொண்டாடப்பட விருக்கிறது. இந்நிகழ்வில் அவரது மகன் தவில்ஞான வித்தகர் திரு. உதயசங்கர் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்படவுள்ளார்.

# தமிழக வரலாற்றுக் காலங்களில் இசைக் கலை

இ. சியாமளா
*2000 கலை*

கருத்தின் உறைவிடமாகவும் அழகின் இருப்பிடமாகவும் அமைந்து, உள்ளதை உள்ளம் உணர்ந்தவாறு வெளிப்படுத்தி, உள்ளத்திற்கு உவகையூட்டுவதால் தான், கலை, தன்னலமும் பழி பாவங்களும் நிறைந்த உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்கிறது என்றார் தாகூர். அழகிய பொருளைப் படைத்தல், செயற்கைப் பொருள்களைச் செய்தல், மனத்திடைத் தோன்றும் அழகுணர்ச்சியைக் குறித்தல் என்பது மேனாட்டவர் கலைத் தத்துவம். கலையே வாழ்வின் வழிகாட்டும் ஒளிப்பந்தம் என்கிறார் ஒஸ்கார் ஒயில்டு. ஆயகலைகள் அறுபத்து நான்கு உள. அதில் இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், இலக்கியம் என்பன நுண்கலைகளாகும்.

முத்தமிழில் இசையும் ஒன்றாம். இசை எனும் சொல் இசைவிப்பது என்னும் பொருள்படும். கற்றோர், பாமரர் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் இசைவிப்பது இசையாகும். இசைக்கு ஓரறிவு, ஆறறிவு எனும் பேதமில்லை. இசை விலங்குகளையும், தன்வசப்படுத்த வல்லது. இதற்கு இலக்கியச் சான்றாகக் கலித்தொகையில் வருகின்ற

''காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு''

எனும் அடிகளைக் கூறலாம். பண்டைக் காலத்தில் தமிழில் எழுந்த நூல்கள் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன. தமிழகத்தில் எழுந்த கல்வெட்டுக்கள் இசைவடிவிலேயே செய்தி கூறுகின்றன. குழந்தை பிறந்ததிலிருந்து அக்குழந்தை வளர்ந்து, இறக்கும்வரை பாடல்கள் பாடப்படுகின்றன. இசை உள்ளத்து உணர்வை வெளிப்படுத்த உதவுகின்றது.

பண்டைத் தமிழ் நாட்டிலே குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய நிலப்பாகுபாடுகள் காணப்பட்டன. நிலத்திற்கு ஏற்றவாறு மனவுணர்ச்சியை இனிய முறையில் வெளிப்படுத்தும் இசை தோன்றிற்று. இதற்குத் துணைக் கருவிகளும் பல தோன்றின. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தோர் குறிஞ்சிப் பண்பையும், முல்லை நிலத்தில் வாழ்ந்தோர் முல்லைப்பண் அல்லது சாதாரிப் பண்ணையும், பாலை நிலத்தில் வாழ்ந்தோர் பாலைப் பண்ணையும், மருத நிலத்து வாழ்ந்தோர் மருதப்பண்ணையும், நெய்தல் நிலத்து வாழ்ந்தோர் செவ்வழிப் பண் அல்லது நெய்தற் பண்ணையும் பாடியின்புற்றனர். பகற் பண்கள், இராப் பண்கள் எனப் பொழுதுகளை மையமாகக் கொண்டும் பண்கள் அமைந்திருந்தன. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனத் தமிழ்ப் பண்கள் ஏழு வகைப்படும்.

பண்களைத் தோற்றுவித்தது போலவே ஐவகை நிலத்தில் வாழ்ந்தோரும் இசைக் கருவிகளையும் தோற்றுவித்தனர். குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் யாம யாழினையும், தொண்டகப் பறையினையும் பயன்படுத்தினர். முல்லை நிலத்தில் வாழ்ந்தோர் முல்லை யாழினையும், ஏறுகோட் பறை

யினையும் பயன்படுத்தினர். மருத யாழும், மணமுழவும் மருத நிலத்திற்கு உரியனவா கின. விளரியாழினையும், மீன்கோட் பறை யினையும் நெய்தல் நிலைத்தோர் இசைத் தனர். பாலை நிலத்தோர் பாலை யாழி னையும், திரைகோட் பறையினையும் வாசித் தனர்.

இவை மட்டுமன்றிப் பண்கள் பாடப் படுவதற்கு உரிய காலத்தையும் அவர்கள் வகுத்திருந்தார்கள். குறிஞ்சிப் பண்பாடு வதற்குரிய நேரம் சாமம் என்றும், பாலைப் பண் பாடுவதற்குரிய நேரம் நண்பகல் என் றும், சாதாரிப்பண் பாடுவதற்குரிய காலம் மாலை என்றும், மருதப் பண்ணிற்குரிய நேரம் விடியல் என்றும் வகுத்தனர்.

இவ்வாறு பண்களை அவற்றிற்குரிய இசைக்கருவிகளுடன் உரிய காலங்களில் பாடி இசையின்பம் துய்த்தனர். இவற் றைப் பிழையின்றிப் பாடுவதையும் கடமை யாகக் கொண்டிருந்தார்கள். பத்துப் பாட் டுக்களுள் ஒன்றாம் மலைபடுகடாத்தில் பெருங்கௌசிகனார் கூத்தன் ஒருவனை ஆற் றுப் படுத்தும் பொழுது ''நறுங்கார் அடுக் கத்துக் குறிஞ்சி பாடி'' எனவும், ''எருது எறிகாமரோதை யொடு நல்யாழ், மருதம் பண்ணியசையனிர் கழிமின்'' எனவும் குறிஞ்சி நிலத்தில் குறிஞ்சிப் பண்ணையும் மருத நிலத்தில் மருதப் பண்ணையும் பாடிக் கொண்டு போகுமாறு அறிவுறுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பாடுதலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் பாணர், பாடினியர் எனப் பட்டனர். அக்காலத்தில் இசையைப் பாணர், பாடினியர் விறலியர், கூத்தர் என் போர் பேணிப் பாதுகாத்தனர். அவர்கள் அரசர்களையும் வள்ளல்களையும் அடைந்து தம் திறமையைக் காட்டிப் பரிசில் பெற்று வாழ்ந்தார்கள். அரசர்களும், வள்ளல்களும் பாணர்களைப் பெரிதும் ஆதரித்தார்கள். சீறியாழ் வாசிப்போரைச் சிறுபாணர் என்றும் பேரியாழ் வாசிப்போரை பெரும் பாணர் என்றும் அழைக்கும் மரபு இருந் துள்ளது. சங்க காலத்தில் குழல், யாழ், முழவு, முரசு, சிறுபறை, உடுக்கை முதலி யன பயன்படுத்தப்பட்டன. பெருநாரை, பெருங்குருகு, தாளசமுத்திரம், தாளவகை யோத்து, வாய்ப்பியம், இந்திரகாளியம் என் பன பண்டைய இசைத்தமிழ் நூல்கள் ஆகும். ''பதினாறு படலம்'' என்ற இசைத்தமிழ் நூலைச் சிலப்பதிகார அரும்பத உரைகா ரர் தம் உரையில் மேற்கோளுடன் குறிப் பிடுகின்றார்.

இசைத், தமிழிற்குப் பொற்காலம் சங்ககாலம். அகத்தியர் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிற்கும் இலக்கணம் வகுத்திருந்தார். இயற்றமிழ் வளர்க்கச் சங்கம் இருந்தது போன்றே இசைத்தமிழை வளர்ப்பதற்கும் தனிச்சங்கம் இருந்ததாக அறிய முடிகிறது. இதற்குத் திருக்கோவை யாருள் வரும் பாட்டினை உதாரணம் கூறு வர். இசைத்தமிழ்ச் சங்கத்தை பாண்டி யர்கள் ஆதரித்தனர் என்பதைப் பின்வரும் நளவெண்பாப் பாடல் கூறுகின்றது.

''ஆழி வடிம்பலம்ப நின்றானும்
அன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத்திருந்தானும் —
நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாய் இச்சேய்''

இச்செய்யுள் சுயம்வரம் நடைபெறும் பொழுது தமயந்திக்குப் பாண்டியனை அறி முகப்படுத்தும் போது தோழி கூறியதாகும். சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுகாதையில் இசைக்கு இலக்கணங் கூறப்பட்டுள்ளது. கானல்வரியும், ஆய்ச்சியர் குரவையும், வாழ்த்துக்காதையும் இசைக்கு இலக்கணம் கூறும் இலக்கியங்களாகக் காணப்படுகின் றன. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய நடன அரங்கில் இசையாசிரியன் இருந்தான் என்று கூறப்படுகிறது. இசையாசிரியன் அமைதி, தண்ணுமையாசிரியன் அமைதி, குழலாசிரியன் அமைதி, யாழாசிரியன் அமைதி, அரங்கின் அமைதி முதலியன சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் கூறப் பட்டுள்ளன. ''கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன்னுந்தோன்றிய சான்றோர் செய்யுட்களினுள்ளே வில்யாழும், சீறியா ழும், பேரியாழுமே குறிக்கப்பட்டு இருக்கின் றன. சகோடயாழும், (செம்முறைக்

கேள்வி) மகரயாழும், செங்கோட்டியாழும் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், பெருங்கதையிலும், சீவக சிந்தாமணியிலும் காணப்படுவ'' என்று யாழ் நூலிலே விபுலாநந்த அடிகளார் கூறியுள்ளார். எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான பரிபாடல் இசைத்தமிழ் நூலாரும். சங்கமருவிய காலத்தில் காரைக்காலம்மையாரும், முதல் மூவாழ்வார்களும் பக்தியை வளர்க்க இசையைப்பயன்படுத்தினர். காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் தெய்வத் தமிழிசைப் பாடல்கள் நிறைந்தது.

கி. பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டுவரை தெய்வீக இசை தமிழகத்தில் தோன்றிச் செழிப்புற்று இருந்தது. இக்காலத்தின் முற்பகுதியைத் தெய்வீக இசைத் தோற்றத்தின் காலமாகவும் பிற்பகுதியை அதன் வளர்ச்சிக்குரிய காலமாகவும் கொள்ளுவர். 7ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டுவரை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி நற்றமிழில் இன்னிசை பாடினர். 10ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் அல்லது 14ஆம் நூற்றாண்டுவரை சோழ அரசர்கள் சிவநெறிச் செல்வராயிருந்து தேவாரங்களை நாடு முழுவதும் பரப்பினர்.

இடைக்காலத்தில் தோன்றிய அடியார்கள் இன்னிசையால் இனியை தமிழைப் பரப்பினார்கள். சமணம் போன்ற பிற சமயங்களிலிருந்தும் மக்களை விடுவிக்க அடியார்கள் பாடுபட்டார்கள். அவர்கள் மக்கள் மனதைக் கொள்ளைகொள்ள வல்லது இசையே எனக்கண்டு அதன் மூலம் மக்களைத் தம்வசமாக்கினர். மக்களின் உள்ளத்தூறும் உணர்ச்சிகளை வெளியிட்டு வந்த இசை, தெய்வத்தைப்பற்றிய கருத்துக்களையும் வெளியிடுவதற்குரியதாக ஆயிற்று.

அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் பல்லவர்காலத்துத் தோன்றிய, தேவார முதலிகள். பண்பொருந்தும் இசைப்பாடல்களைப் பாடினர். இவர்கள் பாடல்களை நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்முரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், செவ்வழி, காந்தார பஞ்சமம், கொல்லி, சாதாரி முதலியபண்களில் பாடியுள்ளனர். சம்பந்தர், அப்பர் போன்றவர்கள் தாளம் இசைத்துக்கொண்டு கால் நடையாகக் கோவில்கள் தோறும் சென்று பாடினார்கள். மாடுகளை மேய்த்துப் புல்லாங்குழலை இறைவனுக்கு அர்ப்பணமாக்கிய ஆனாயநாயனார் புல்லாங்குழலில் ஐந்தெழுத்து மந்திரத்தை இடைவிடாது மீட்டி இறைபேறுபெற்றவர்.

இக்காலத்தில் யாழ், குழல், கின்னரி, கொக்கரி, சச்சரி, தக்கை, முழவம், மிருதங்கம், மத்தளம், உடுக்கை, தாளம், துடி, கொடிகட்டி, துந்துபி, வீணை போன்றபல வாத்தியங்கள் இசைக்கலையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை இக்காலத்து எழுந்த திருமுறைப்பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன. நாவுக்கரசர் ''மாசில் வீணையும்...'' என்று வீணையைக் குறிப்பிடுகிறார். ஆழ்வார்கள் வேய்ங்குழல், சங்கு முதலியன பற்றித் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

சைவ அடியார்கள் மட்டுமன்றி வைணவ அடியார்களும் பாடல்கள் பாடி இறைவனைத் துதித்தனர். பழந்தமிழ்ப் பண்களும் பழைய இலக்கணத்திற்கேற்ற தாளமும் நம்மாழ்வாருடைய பாசுரங்களில் அமைந்திருப்பதை அறியலாம், வைணவப் பெரியார்கள் அதனைத் தேவகானம் எனப் பாராட்டுவர். தேவாரத்திற் காணப்படும் தக்கராகம், காந்தாரம், நட்டபாடை, இந்தளம் முதலிய பண்கள் திருவாய்மொழியிலும் காணப்படுகின்றன. தேவாரத்திற் காணப்படாத பண்களிற்சிலவாகிய செருத்தி முதிர்ந்த விந்தளம், வியந்தம், நாட்டம் முதலியன இதனுள் காணப்படுகின்றன.

பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களான குடுமியா மலையிலுள்ள கல்வெட்டும், திருமயத்திலுள்ள கல்வெட்டும் இக்காலத்து இசைச்சிறப்பை விளக்குகின்றன. குடுமியா மலைக் கல்வெட்டு ஏழுநரம்புகளை உடைய வீணை இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டதைக் கூறுகிறது. மகேந்திரவர்மன் பரி

வாதினி எனும் பெயர்பெற்ற வீணையை வாசிப்பதில் வல்லவன் என்பதைக் கல்வெட்டு மூலம் அறியக் கூடியதாய் உள்ளது. மகேந்திரவர்மன் தாளவகைகள் ஐந்தினுள் 'சங்கீர்ண' தாளத்தை அமைத்ததாகக் கருதப்படுகிறது. ராஜசிம்ம மன்னனுக்கு வித்தியாதரன் என்ற சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டது. அவனது இசையாற்றலைக் கௌரவித்து 'வீணாநாரதன்' என்ற சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டதாகக் காஞ்சிக் கைலாசநாதர் கோயிற் கல்வெட்டுக் கூறுகிறது. பல்லவர் காலத்தில் இசை உன்னத வளர்ச்சி பெறுவதற்கு அரசர்களும், சமயப் பெரியார்களும் முன்னின்று உழைத்துள்ளார்கள். கலைஞர்களுக்கு கௌரவ விருதுகள் கொடுத்து முதன்மை வழங்கினார்கள்.

சோழ மன்னர்கள் கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு மகத்தானது. மன்னர்களின் அரண்மனை விழாக்களிலும் ஆலயங்களில் பூசை வேளைகளிலும் இசை கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும் என இக்கால ஆட்சி மரபு வகுத்திருந்தது. இராஜராஜ சோழன் இசைபாடும் ஓதுவார்களை ஆலயம் தோறும் நியமித்து பூஜை வேளைகளில் தவறாது திருமுறை இசைக்க ஏற்பாடு செய்திருந்தான். இவனே தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டிய சிறப்புக்குரியவன். இங்கு தினம் தோறும் திருப்பதிகம் ஓதுவதற்கு நாற்பத்தெட்டுப்பேரை நியமித்திருந்தான். அதன் பொருட்டு அவர்கட்கு மானியமும் வழங்கியிருந்தான் என ராஜ ராஜ சோழனுடைய கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. இவன் மகன் இராஜேந்திர சோழனும் இம்முறையையே மேற்கொண்டு தேவாரப் பண்களை வளர்த்தான் இவனால் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழேஸ்வரத்தில் நாள்தோறும் தேவாரம் ஓதப்பட்டு வந்தது. இவன் தேவாரம் ஓதுவோர் இருந்து பாடவென்றே மண்டபம் ஒன்றைக் கோயிலினுள் அமைத்திருந்தான். இது தேவார மண்டபம் என்று அழைக்கப்பட்டது. இதனை இராஜேந்திர சோழனுடைய கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. குலோத்துங்க சோழன் பெரியபுராணம் பாடக் காரணமான பேரரசன். குலோத்துங்க சோழன் இசைமீது கொண்டிருந்த பற்றுதலால் ஏழிசை வல்லபி என்னும் இசைவிருதுபெற்ற மங்கையை மணந்து வாழ்த்தானென்று கூறுவர்.

சோழர்காலத்துதித்த மணிவாசகரும் இசைக்குப் பெருந்தொண்டாற்றினார். நாட்டார் இசையைப் பின்பற்றி இவரால் பாடப்பட்ட திருவெம்பாவைப் பாட்டு, அம்மானைப் பாட்டு, கோத்தும்பிப் பாட்டு, தெள்ளேணப் பாட்டு, பூவல்லிப்பாட்டு, ஊசற் பாட்டு, குயிற்பாட்டு முதலியன இசைக்குரிய பாட்டுக்களாகும். திருமுறைகளில் திருவிசைப்பா இக்காலத்திலேயே எழுந்தது. திருமுறைகளும் சோழர் காலத்திலேயே தொகுக்கப்பட்டன. ஆழ்வார்களின் நாலாயிரத்திவ்வியபிரபந்தமும் இக்காலத்திலேயே தொகுக்கப்பட்டது. பெரிய புராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் போன்றவையும் இக்ககாலத்தில் எழுந்தவை ஆகும். திருத்தக்கதேவர் 'காந்தருவதத்தை யார் இலம்பகம்', 'சுரமஞ்சரியார் இலம்பகம்' முதலியவற்றுள் இசைபற்றிக் குறிப்பிடுகின்றார். சேக்கிழார் பெரிய புராணத்தில் இசையின் சிறப்பினை விளக்கிக் காட்டுகின்றார். கம்பராமாயணத்தில் சோழர் காலத்து இசைஅனுபூதியை உணரமுடிகிறது. மிதிலைக் காட்சிப்படலத்தில் இசை பயில்சாலைகள் மிதிலையில் இருந்தன என்ற கம்பரின் வரிகள் சோழர் காலத்தில் இசை பயில் சாலைகள் பற்றிய அறிவு இருந்துள்ளமையை விளக்குகிறது. சோழர்காலத்துப் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்கள் இசை பற்றிய செய்திகளை நமக்குத் தருகின்றன. இராஜராஜ நாடகம், பூம்புலியூர் நாடகம் என்பவற்றிற்கு இசையே முதன்மை வழங்கியது என இக்காலக் கல்வெட்டுக் கூறுகிறது.

நாயக்கர் காலத்தில் தென்னாட்டில் இசைக்கலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. இக்காலத்தில் கர்நாடக இசையும் ஆந்திர, தெலுங்கு மொழிகளாலான இசைப் பாக்கள் தமிழ் நாட்டில் புகுந்து இசைக் கலையில் மாற்றத்தை ஏற்படுத்தின. நாயக்கர் காலத்தில் தென்னாட்டில் புதிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

நாதஸ்வரம், உருத்திரவீணை, மிருதங்கம் போன்றன நடைமுறையில் இன்றுமுள்ள வாத்தியங்கள். நாயக்கர் காலத்திலேயே தென்னாட்டில் அறிமுகம் ஆனது. சரபோஜி மன்னன் இசைக்குத் தன்னாலான உதவியை வழங்கினான். அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதி, அபிராமி அம்மை பதிகம் போன்ற வற்றையும் அருணகிரிநாதர் திருப்புகழ், வேல்விருத்தம், மயில்விருத்தம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் போன்றவற்றையும் பாடி இசையை வளர்த்தனர். அருணகிரிநாதர் பதினாறாயிரம் திருப்புகழை சந்தத் தோடுபாடி இசைக்குப்பெரும் தொண்டாற்றியுள்ளார். நாயக்கர் காலச் சிற்பங்கள் சில இசைக் கருவிகளுடன் காணப்படுகின்றன. உதாரணமாக 17ஆம் நூற்றாண்டுக் 'கலைமகள்' தந்தசிற்பத்தையும், 18ஆம் நூற்றாண்டு திருக்குறுங்குடியிலுள்ள 'குழலூதும் பிள்ளை' சிற்பத்தையும் கூறலாம்.

சங்ககாலத்திலிருந்து இசைக்கலை இன்றுவரை பலமாற்றங்களுடன் அழியாது நின்று நிலைபெறுகின்றது.

---

**உசாத்துணை நூல்கள்:**


இந்து நாகரிகம் — க. சொக்கலிங்கம்

தமிழ் இலக்கிய வரலாறு — வி. செல்வநாயகம்

உலகத்தமிழ் மாநாடு விழாமலர்

1. நுண்கலைகள் — சிவ அரசி
2. இடைக்கால இசை — இசையரசு எம். எம். தண்டபாணிதேசிகர்.
3. சங்ககால இசை — ப. சுந்தரரேசன்
4. பல்லவர் காலம் — டி. ஆர். இராமச்சந்திரன்

# "இலங்கைத் தமிழ் அரங்கு" ஒரு பருவரை

திரு. கந்தையா ஸ்ரீகந்தவேள் B. A. Dip. in. Edu.
ஆசிரியர், யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை.

**அறிமுகம் :**

இலங்கைத் தமிழ் அரங்கின் வரலாற்று ரீதியான வளர்ச்சியானது மரபு வழிக் கூத்துக்களுடன் ஆரம்பமாகின்றது எனலாம். தொடர்ந்து விலாசம் எனும் நாடக மரபின் வருகையும், பார்ஷிவழி அரங்கின் வருகையும் இடம் பெற்றதெனலாம். ஆங்கிலேயர் வருகையின் பின்னர் வந்து புகுந்த வசனம் பேசி நடிக்கும் நாடகங்களும் அதனை ஒட்டி எழுந்த நவீன பாணி நாடகங்களும் நவீன நாடகங்களாக அழைக்கப்பட்டன. இந் நவீன நாடகத்தினை பல்வேறு கால கட்டங்களாக வகுத்துப் பார்க்கலாம். 1990ஆம் ஆண்டுகளில் தமிழகத்து நாடகக் கம்பனிகளின் வருகையும் நவீன நாடக அரங்கேற்றங்களும்; இலங்கையர்கள் முதன் முதலாக நாடக மன்றங்களைத் தயாரித்து அரங்கேற்றியமை; 1930களில் பிரக்ஞை பூர்வமாக நவீன நாடகங்களை எழுதும் முறை பல்கலைக்கழக மட்டத்தில் உருவானமை; 1950களில் பாரம்பரியக் கூத்துக்கள் இலங்கைப் பல்கலைக்கழக மட்டத்தில் புத்தாக்கும் முயற்சிகள் உருவானமை; பாரம் பரியக் கூத்துக்களைக் பேணும் முயற்சிகளும் இடம் பெற்றமை; 1970களில் கொழும்பை மையமாகக் கொண்ட காத்திரமான அரங்க இயக்கங்களின் தோற்றமும் அவற்றின் நாடகத் தயாரிப்புக்களும் இலங்கைத் தமிழ் அரங்க வரலாற்றில் திருப்பு முனையாகியமை; 1980 களில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஒரு அரங்க வரலாறு உதயமாகியமை; 1990களில் இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் பரந்து வளர்ந்து சென்றமை; முதலிய கால கட்டங்களாக வகுத்து நோக்கலாம்.

**1. மரபுவழி நாடகங்கள் :**

பண்டைய கூத்து நாடகங்களே மரபு வழி நாடகங்கள் என அழைக்கப்படுகின்றன. மரபுவழி நாடகங்களின் ஆரம்பகாலம் எது என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. இலங்கைத் தமிழர் கூத்துக்களையே பாரம்பரியமாக ஆற்றுகை செய்து வந்தனர். 18ஆம் நூ. ஆ. தான் கூத்துப் பிரதிகள் பல உருவானமை புலனாகின்றது. எடுத்துக் காட்டாக கணபதி ஐயர் (1709 - 1794) வாளபிமன் நாடகத்தை எழுதினார். இக்கூத்துக்கள் பிரதேச வேறுபாடு கொண்டவனாக காணப்பட்டன. இதனால் மட்டக்களப்புக் கூத்துக்கள், மன்னார்க்கூத்துக்கள், மலையகத்துக் கூத்துக்கள், வன்னிக்கூத்துக்கள், யாழ்ப்பாணக் கூத்துக்கள், சிலாபக் கூத்துக்கள் என வகைப்படலாயிற்று.

மட்டக்களப்புக் கூத்துக்கள், வடமோடி தென்மோடி, வசந்தன், மகுடி, பறைமேளக் கூத்து என வகைப்படுத்தப்படுகின்றன. மன்னார் கூத்துக்கள் வாசாப்பு, வடபாங்கு தென்பாங்கு என வகைப்படுத்தப்படுகின்றன. மலையகக் கூத்துக்கள் பொன்னர் சங்கர், காமன் கூத்து, அருச்சுனன் தபசு என வகைப்படுத்தப்படுகின்றன. வன்னிக்கூத்து கோவலன்கூத்து, காத்தவராஜன்கூத்து, மகுடிக்கூத்து என வகைப்படுகின்றன. யாழ்ப்

பாணக்கூத்துக்கள் வடமோடி, தென்மோடி வசந்தன், காத்தவராஜன், தாளக்காவடி, உடுக்கடிகதை என வகைப்படுத்தப்படுகின்றன. இக்கூத்து வடிவங்கள் தனக்கென தனித்துவம் கொண்டனவாக விளங்குகின்றன. இப்பிரதேச ரீதியான கூத்துக்களில் மட்டக்களப்புக் கூத்துக்கள் தமது பாரம்பரியப் பண்புகளைப் பேணி வருகின்றன.

2. கத்தோலிக்க கூத்துக்கள் :

ஐரோப்பியர் வருகையின் பின்னர் இலங்கையில் கத்தோலிக்க மதசார்பு பொருந்திய கூத்துக்கள் தோன்றின இதற்கு எடுத்துக்காட்டாக என்றிக் எம்பரத்தோர். மூவிராசாக்கள் நாடகங்களைக் குறிப்பிடலாம். இலங்கையின் மரபுவழிக் கூத்துக்களில் கத்தோலிக்கர்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது. இதுவரை இந்துமத உள்ளடக்கங்கொண்ட கூத்துக்களாக இருந்த கூத்துக்கள் தற்போது கத்தோலிக்க மத உள்ளடக்கங்கொண்ட கூத்துக்களாக மாறின. இதன் பேறாக ஆட்டம் நிறைந்த கூத்துக்கள் ஆட்டம் குறைந்து இசை கொண்டதாக விளங்கின. இதற்கு தென்மோடிக் கூத்துக்கள் வாய்ப்பாக அமைந்தன. யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் இவ்வகைக் கூத்துக்கள் ஆடப்பட்டன.

3. விலாச நாடகங்கள் :

பார்ஷிவழி நாடகக்காரரது வரவினால் 18ஆம் நூற்றாண்டில் விலாசம் என்றொரு நாடக வடிவம் அறிமுகமாகின்றது. அரிச்சந்திர விலாசம், மதனவல்லி விலாசம், என்பவற்றை உதாரணமாகக் கொள்ளலாம், இவ்விலாச வகை நாடகங்கள் கூத்திலிருந்து வேறுபட்டனவாக விளங்கின. ஆட்டம் குன்றி கர்நாடக இசை முதன்மை பெற்றது. இவை இசையை முதன்மையாகக் கொண்டிருந்தமையினால் இசை நாடகங்கள் என அழைக்கும் மரபு ஏற்படலாயிற்று. இலங்கையில் இவ்வகைக் கூத்துக்களை கொட்டகைக்கூத்து மடுவக்கூத்து, அண்ணாவிமரபு நாடகங்கள் எனவும் அழைப்பர். தென் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த இவ்வகை நாடகங்கள் இலங்கையில் வேர்ஊன்றி வளர்ச்சி பெற்றன. வி. வி. வைரமுத்து எனும் கலைஞர் இவ்வகை நாடகங்களை நடித்துப் புகழீட்டினார். இவ்வகை நாடகங்கள் சீன், சோடனை, காட்சியமைப்பு ஆகியவற்றுடன் நடைபெற்றமையால் மக்கள் மத்தியில் நன்கு பிரபல்யம் பெற்றன எனலாம்.

4. நவீன நாடக அரங்கு :

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் நவீன நாடகம் தோற்றம் பெற்று வளரலாயிற்று. காலனித்துவ ஆட்சி உருவாக்கிய ஆங்கிலக்கல்வி, கிறிஸ்தவ மதப் பரம்பல், முதலியன மத்தியதர வர்க்கத்தைத் தோற்றுவித்தன எனலாம். இவர்கள் தமக்கு என ஒரு அரங்கத்தைத் தோற்றுவித்தனர். இப்புதிய அரங்கு தனக்கென தனித்துவப் பண்புகளை ஐரோப்பிய நாடக அரங்கிலிருந்து பெற்றுக்கொண்டது. தமிழகத்தைச் சேர்ந்த பம்மல் சம்பந்த முதலியார் தமது "சுகுண விலாச சபை" மூலமாக 1907ஆம் ஆண்டில் இருந்து கொழும்பில் தமது நாடகங்களை அரங்கேற்றினார். இதுவே நவீன அரங்கின் தோற்றத்திற்கு வித்திட்டது. இந்நாடக வகையின் பால் ஈர்ப்பு பெற்ற இளைஞர்கள் அவருடைய நாடகங்களை நடிக்கலாயினர். இவர்களில் கலையரசு சொர்ணலிங்கம் முதன்மையானவர் ஆவார். இவர் 1913இல் "லங்கா சுபோத விலாச சபை" என்ற நாடக மன்றத்தை உருவாக்கி பயில்முறையாக நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றி வந்தார். இது நவீன அரங்கு வரலாற்றில் ஒரு படி மலர்ச்சி எனலாம். இதனைத் தொடர்ந்து பல நாடக மன்றங்கள், 1920களில் இலங்கையின் பல பாகங்களிலும் உருவாகின. "சரஸ்வதி விலாச சபை" (1914), "சுபசோபனா விலாசசபை" (1914), "சுகிர்த விலாச சபை" (1920), "சத்தியவிலாச சபை", (1920), "வித்தியா விநோதசபை", (1924); அமைச்சூர் நாடகமன்றம் (1933), முதலிய பல நாடகமன்றங்கள் உருவாகிப் பல நாடகத் தயாரிப்புக்களை அரங்கேற்றின. மேற்குறித்த மன்றங்களில் "லங்கா சுபோத விலாசசபையும்" "சரஸ்வதி விலாசசபையும் முறையே கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயங்கின. "லங்கா சுபோத விலாசசபை" பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்களை

நெறிப்படுத்தியது. 'சரஸ்வதி விலாசசபை' சுய ஆக்க நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட நாடகங்கள் முற்று முழுதான நவீன நாடகமாக அமையவில்லை. நாடகத்தின் கருப்பொருள் புராண இதிகாசங்களில் இருந்தே எழுதப்பட்டன. இதனால் இவ்வகை நாடகங்களை முன்நவீன நாடகங்கள் என்றே கூறப்படுகின்றன.

அடுத்து, இலங்கைத் தமிழரது மண்வளம் ததும்பிய சமூக நாடகங்களின் வருகை இடம்பெறுகின்றது. இப்போக்கின் முன்னோடியாகப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை விளங்குகின்றார். 1936ஆம் ஆண்டு முதல் இவரது நாடகங்கள் பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் அரங்கேற்றப்படலாயிற்று. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவரது நாடகங்களை நெறிப்படுத்தினார். யாழ்ப்பாணத்தின் மத்திய தர வர்க்கப் பிரச்சனைகள் அவரது நாடகக் கருப்பொருளாயின. இவை இயற்பண்பு யதார்த்தப் பண்புடன் அரங்கேற்றப்பட்டன. 'நாடகம்', 'இரு நாடகம்' எனும் தொகுப்புக்களும் மாணிக்கமாலை, சங்கிலி, சுந்தரம் எங்கே முதலிய நாடகங்களுடன் கையெழுத்துப் பிரதியாகவே இடம்பெறும் சில நாடகங்களும் குறிப்பிடப்படுகின்றன. அவரது நாடகங்களை அரசியல் விமர்சன நாடகங்கள் எனவும் சமூக விமர்சன நாடகங்கள் எனவும் விமர்சகர்கள் குறிப்பிடுவர். 'சங்கிலி' ஒரு வரலாற்று நாடகமாகும். 'மாணிக்கமாலை' வடமொழி நாடகமான 'இரத்தினாவளி' எனும் நாடகத்தின் மொழி பெயர்ப்பாகும்.

இடைக்காலத்தில் தமிழ்நாட்டு அரசியல் செல்வாக்கால் ஈழத்திலும் செயற்கைப் பாங்கான சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் பல தோன்றலாலயின. திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்கள் இலங்கையிலும் செல்வாக்குப் பெற்றன. இவ்வகையான நாடகங்கள் சினிமாவின் தாக்கம் பெற்ற நாடகங்களாகவும் அமைந்தன. 'அப்பாஸ்' எழுதிய 'கள்ளத்தோணி' எனும் நாடகம் இவ்வகைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

5. கூத்தரங்கின் புத்தாக்க நடவடிக்கைகள் :

1956இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம், தேசிய விழிப்புணர்வு, பண்பாடு பற்றிய பிரக்ஞையை இலங்கையருக்கு ஏற்படுத்தியது சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழர் மத்தியிலும் பெரும் பிளவை உண்டுபண்ணியது. இதன் பேறாக சிங்களவர் மத்தியில் பேராசிரியர் எதிரிவீரசரச்சந்திராவும் தமிழர் மத்தியில் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் மரபுவழி நாடகங்களைப் புத்தாக்கம் செய்தனர். கலைக்கழகத்தமிழ் நாடகக்குழு பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் செயற்படத் தொடங்கியது. மரபுவழி நாடகங்களைப் புத்தாக்கும் முயற்சியுடன்; கூத்து நூல்களைப் பதிப்பித்தமை; அண்ணாவிமார் மகாநாடு நடத்தி அண்ணாவிமாரைக்கௌரவித்தமை; நாட்டுக்கூத்துப் போட்டிகளை நடத்தியமை; முதலிய பல பணிகளை ஆற்றியமை இவரது பணியாகும். இவர் புத்தாக்கம் செய்த நாடகங்களுக்கு எடுத்துக்காட்டாக, 'இராவணேசன்', 'வாலிவதம்', 'கர்ணன் போர்' 'நொண்டிநாடகம்' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இதைத்தொடர்ந்து புதிய தலைமுறையினர் பலர் கூத்தின் உள்ளடக்கங்களைக் கொண்டும் ஆற்றுகை முறைமைகளைக் கொண்டும் நவீன நாடகங்களைத் தயாரித்தனர். இந்த மரபில் வந்தவர்களாக சி. மௌனகுரு, சி. முருகையன், நிலாந்தன், சி. ஜெயசங்கர் முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களது நாடகங்களுக்கு எடுத்துக்காட்டாக முறையே 'சங்காரம்' 'உயிர்த்த மனிதர்கூத்து', 'நவீன பஸ்மாசுரன்' முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

6. 1970களில் தமிழ் அரங்கு :

கொழும்பை மையமாகக் கொண்ட காத்திரமான அரங்க இயக்கங்கள் தோற்றம் பெற்றன. 'நடிகர் ஒன்றியம்' குறிப்பிடத்தக்க திருப்பத்தை ஏற்படுத்திற்று. சுஹைர் ஹமீட், நா. சுந்தரலிங்கம், அ. தாசீசியஸ், இ. சிவானந்தன், க. பாலேந்

திரா போன்றோர் 'நடிகர் ஒன்றியத்தின்' நாடகத் தயாரிப்புக்களை தயாரித்தனர். சுயஆக்க நாடகங்கள், தழுவல் நாடகங்கள் என அமைத்தன. இக்காலத்தில் எழுந்த நாடகங்கள் இடதுசாரிச் சிந்தனையின் பால் ஈடுபாடுகொண்டிருந்தன. 'அதலபாதாளம்', 'அவளைக் கொன்றவள் நீ', 'அபசுரம்', 'கடூளியம்', 'கோடை', 'புதியதொரு வீடு' எனப்பல காத்திரமான நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. மகாகவி, முருகையன், சிவானந்தன், அம்பி முதலிய புகழ் பெற்ற நாடகாசிரியர்கள் இக்கால நாடகங்களை எழுதினர்.

70களின் இறுதியில் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் பட்டப்பின் கல்வி டிப்புளோமா பயிற்சி வகுப்பு இரண்டு ஆண்டுகள் நாடகவியலில் மேற்கொள்ளப்பட்டது. இதன் பெறுபேறே பிற்கால ஈழத்து தமிழ் அரங்கைப் புதிய திசைக்கு மாற்றியது. கற்கை நெறியாக அரங்கு வளர்த்தெடுக்கப்படலாயிற்று.

7. 80களில் தமிழ் அரங்கு:

80களில் யாழ்ப்பாணத்தில் மையம் கொண்ட அரங்கு, 'தேசிய நாடக வடிவம்', எனும் சிந்தனையைச் சுட்டி நிற்கின்றது இனவன்முறை இதற்கு சாதக விளைவாகியது. 1978இல் 'அவைக்காற்றுக் கலைக் கழகமும்' உருவாக்கப்பட்டு பல நாடக அரங்கேற்றங்கள் இடம் பெற்றன. நாடக அரங்க கல்லூரியை குழந்தை ம. சண்முகலிங்கமும் அவைக்காற்றுக் கலைக் கழகத்தை பாலேந்திராவும் இயக்கினர். நாடக அரங்கக் கல்லூரி சுய ஆக்க நாடகங்களையும் அவைக்காற்றுக்கலைக்கழகம் மொழி பெயர்ப்பு தழுவல் நாடகங்களையும் தயாரித்தன.

1975இல் யாழ்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்மையால் நாடகம் கல்விமுறையாக வளரவும் நாடகத் தயாரிப்புக்கு களமாக அமையவும் வழிவகுத்தன. இதனால் காத்திரமான அரங்கப் போக்கு ஒன்று உருவாகியது. சி. மௌனகுரு, பலநாடகங்களை மேடையேற்றினார். எடுத்துக்காட்டாக 'புதியதொருவீடு' குறிப்பிடலாம்.

இக்காலத்தில் தான் சண்முகலிங்கம் அவர்களது 'மண்சுமந்த மேனியர்' தேசிய நாடக சிந்தனையைத் தூண்டியது என்பர் கா. சிவத்தம்பி அவர்கள். பாலேந்திரா 'கண்ணாடி வார்ப்புக்கள்', 'புதிய உலகம் பழைய இருவர்' முதலான பல மொழிபெயர்ப்பு தழுவல் நாடகங்களைத் தயாரித்தார். இதன் பயனாக மேலைத் தேய நாடகாசிரியர்களை தமிழுக்கு அறிமுகம் செய்தார்.

நாடக நிறுவனங்களைத் தவிர வெளியேயும் நாடகத் தயாரிப்புக்கள் இடம்பெற்றன. இளைய பத்மநாதன் 'ஏகலைவன்' எனும் நாடகத்தினையும் ஆனந்தராஜன் 'ஹம்லெட்' எனும் நாடகத்தினையும் தயாரித்தனர். இக்காலத்தில் 'ஆறு நாடகங்கள்' 'நாடகம் நான்கு' எனும் நாடக நூல்கள் வெளிவந்தன. திரு. க. சிதம்பரநாதன் எனும் நெறியாளரின் தோற்றமும் முக்கியத்துவம் பெறலாயிற்று. விடுதலை இயக்கங்களின் அரங்கத் தயாரிப்புக்களும் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்திற்று. எடுத்துக் காட்டாக 'மாயமான்' 'விடுதலைக்காரி', 'கசிப்பு' போன்றவற்றைக் குறிப்பிடலாம். யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்கு நாடகம் பாடமாகியது. அங்கு புதிய படைப்புக்களும் பரீட்சார்த்த முயற்சிகளும் இடம் பெற்றன. எடுத்துக்காட்டாக 'கண்ணன் என்பதோர் நினைவுமாகி' எனும் நடன நாடகத்தைக் குறிப்பிடலாம். திருமறைக் கலாமன்றத்தின் அரங்கப் பணிகளும் இக்காலத்தில் முக்கிய இடத்தைப் பெற்றன, நாடகத் தயாரிப்புக்கள் கண்காட்சிகள், கருத்தரங்குகள், நாடகப் பட்டறைகள் எனப் பல பணிகளை ஆற்றியது.

8. 1990களில் தமிழ் அரங்கு:

யாழ்ப்பாணத்தில் மையம் கொண்ட இலங்கைத் தமிழ் அரங்கு படிப்படியாக அதிலிருந்தும் விலகி இலங்கையின் பல பாகங்களுக்கும் நகரத் தொடங்குகின்றது. 90களின் ஆரம்பங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களின் தயாரிப்புக்கள் மிகுந்த தாக்கத்தை உண்டு பண்ணின. அரங்கு பன்முகமாக வளரத்

தொடங்கியது. இதனால் மட்டக்களப்பு, கொழும்பு, வவுனியா எங்கணும் அரங்கு காத்திரமாக அமைந்தது மட்டுமல்லாது அது வன்மையான சமூக மாற்றுச் சாதன மாகவும் உபயோகிக்கப்படலாயிற்று.

கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழகத் தில் நாடகம் ஒரு பாடமாகியது. அங்கு வருடா வருடம் உலக நாடக தினவிழா நடைபெற்று வருகின்றமை, குறிப்பிடத் தக்க ஒன்றாகின்றது. மட்டக்களப்பில் சி. மௌனகுரு, சி. ஜெயசங்கர் பாலசுகு மாரன், திலகநாதன், முதலானோர் பல நாடகத் தயாரிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். எடுத்துக்காட்டாக சி. மௌனகுரு 'புதியதொருவீடு' சி. ஜெயசங்கர் நவீன பஸ்மாசுரன் போன்ற நாடகங்களைத் தயாரித்தனர்.

வவுனியாவில் திரு. க. ஸ்ரீகணேசன், திரு. க. சிதம்பரநாதன், திரு. விந்தன் முதலியோர் நாடகக் கலைப்பயிற்சி நாட கத்தயாரிப்புக்களில் ஈடுபடுகின்றனர்.

கொழும்பில் றொசாங்கன் சில முயற்சி களை மேற்கொண்டு வருகின்றார். சி. ஜெய்சங்கர் ஆங்கில மொழி நாட கங்களை கொழும்பில் நிகழ்த்தி வருகின்றார்.

திருகோணமலையிலும் கூத்துக்கள், இலக்கிய நாடக முயற்சிகள் என்பன முக்கி யத்துவம் பெறலாயிற்று. எடுத்துக்காட்டாக நிலாவொளி என். இராஜரட்ணம், றொபட் முதலியோர் இத்தயாரிப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் சூரியா பெண்கள் அமைப்பு சார்பில் 'நிராகரிக்க முடியாத படி' எனும் நாடகத்தை திரு. சி. ஜெயசங்கர் தயாரித்தார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் 'போர் முழக்க நாடகங்கள்' இடம்பெற்று வருகின் றன.

'களத்தில் காத்தான்' நாடகத் தயாரிப் பாளர் புதுவை அன்பன் முக்கியமானவர். மலையகத்தில் திரு. நிசாம் முக்கியமான வராகின்றார். இவர் தயாரித்த நாடகம் 'வெளிச்சம் - வெளியே இல்லை' தடைசெய் யப்பட்ட ஒரு நாடகமாகியது.

90களின் இறுதியில் யாழ்ப்பாணத்தில் மீண்டும் நாடகங்கள் முனைப்புடன் அரங் கேற்றப்பட்டன. 'பிறேம் ஆனந்' எழுதித் தயாரித்த 'வழிச்சுடர்', க. ரதீதரன் எழு தித்தயாரித்த மலநீக்கம், ஜெயரஞ்சினியின் 'விவாதகள அரங்கு', 'எச்சில்இலை', 'கான லிலே ஒரு கப்படா காண்டம்' தேவானந்தின் அக்கினிப் பெருமூச்சு, சுந்தரேசனின் 'ஊன்று கோல்' சண்முகலிங்கத்தின் 'வேள்வித்தீ' என்பன முக்கியமான தயாரிப்புக்களாகும்.

முடிவுரை :

கூத்துடன் தொடங்கி, கத்தோலிக்கக் கூத்து, பார்ஷிவழி அரங்கு, நவீன நாடக அரங்கு என விரிந்து 20கள், 50கள், 70கள், 80கள், 90கள் எனப் பரந்து சென்ற இலங்கைத் தமிழ் அரங்கு புதிய பரிமாணங் களுடன் வீர புருசராய் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

---

## உசாத்துணை நூல்கள் :


1. ஈழத்து தமிழ் நாடக அரங்கு :
   கலாநிதி சி. மௌனகுரு — யாழ் பல்கலைக்கழக வெளியீடு 1993.
2. ஈழத்து இசைநாடக வரலாறு :
   கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை — யாழ் இலக்கிய வட்ட வெளியீடு 1990.
3. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் :
   கலாநிதி சி. மௌனகுரு — விபுலம் வெளியீடு 7ஆம், மட்டக்களப்பு 1998
4. கடந்த நூற்றாண்டில் ஈழத்து தமிழ் நாடக அரங்கு :
   கந்தையா ஸ்ரீகணேசன் — தமிழினி 2000, தமிழகத்தில் வாசிக்கப்பட்ட கட்டுரை.
5. ஆற்றுகை, நாடக அரங்கியலுக்கான சிறப்பிதழ்கள் :
   திருமறைக்கலா மன்றம், யாழ்ப்பாணம்.
6. யாழ்ப்பாணத்து தமிழ் நாடக அரங்கு :
   விமர்சனக் கட்டுரைகள், கந்தையா ஸ்ரீகணேசன்— கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா 1997.

# இரு சிறுகதைகள் – ஒருநோக்கு

1. கனகாம்பரம் – கு. ப. ரா
2. பாற்கஞ்சி – சி. வைத்திலிங்கம்

பா. மகாலிங்கசிவம், B. A. (Hons)

## 1. கனகாம்பரம்

வ. வே. சு. ஐயர், பாரதியார் முதலியோரினால் தொடக்கப்பட்ட தமிழ்ச்சிறுகதை பூரணமாக வளர்ச்சி அடைந்த காலம் மணிக்கொடி சஞ்சிகை வெளிவந்த காலமாகும். மணிக்கொடி காலத்தை தமிழ்ச் சிறுகதையின் பொற்காலம் 'என்றும், மணிக்கொடியில் எழுதிய எழுத்தாளர்களை மணிக்கொடிக் குழுவினர்' என்றும் அழைப்பது வழக்கம். மணிக்கொடி பத்திரிகையில் சிறுகதை எழுதியவர்களில் புதுமைப் பித்தன், மௌனி, பிச்சமூர்த்தி வ. இராமையா, கு. ப. இராஜகோபாலன், அழகிரிசாமி ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களில் கு. ப. இராஜகோபாலன் சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம், இலக்கியக்கட்டுரை முதலிய பல துறைகளில் தமது ஆற்றலை வெளிக்காட்டி உள்ளார். இவரது சிறுகதைகள், காணாமலே காதல், 'புனர்ஜென்மம்' 'கனகாம்பரம்' முதலிய நூல்தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. ஏறக்குறைய எண்பத்தைந்து சிறுகதைகள் எழுதியுள்ளார்.

### கு. ப. ராஜகோபாலன் சிறுகதைகள் :

கு. ப. ரா. உயிருள்ள பாத்திரங்களை உருவாக்குவதில் தனித்திறமை வாய்ந்தவர். ஆண் பெண் உறவு தொழிற்படும் விதம் பற்றிய உளவியற்பாங்கான சித்தரிப்பாக இருப்பதே இவரது கதைகளின் சிறப்பம்சமாகும். இவரது கதைகள் பாலுணர்ச்சி பற்றியதாகவே அதிகம் உள்ளது என்ற குற்றச்சாட்டும் இவர்மேல் உள்ளது. பெரும்பாலும் ஆண் பெண் உறவுகளால் ஏற்படும் துன்பங்களை பல்வேறு கோணங்களிலிருந்தும் இவர் காட்டியுள்ளார்.

மனிதனது நுணுக்கமான உணர்வுகளை உயிர்த்துடிப்போடு வெளிக்கொணர்வதால் இவர் பிரெஞ் எழுத்தாளரான மாப்பஸானோடு ஒப்பிடப்படுகிறார். சிறுகதைப் பொருளால் மட்டுமல்ல, உருவ அமைப்பிலும் தமிழ்ச்சிறுகதைக்கு பலம் சேர்த்துள்ளார். புதுமைப்பித்தனை விட கு. ப. ராவே அதிக உருவப் பரிசோதனைகளைச் செய்துள்ளார் என்று விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

**கனகாம்பரம் :**

கு. ப. ராவினால் சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முதல் எழுதப்பட்ட இச்சிறுகதையானது, அவருடைய ஏனைய பெரும்பாலான கதைகளைப் போல ஆண்பெண் உறவுநிலையை அடிப்படையாகக் கொண்டதாகும். முன்பின் தெரியாத ஒரு அந்நிய ஆடவனுடன் படித்த பெண்களே தயக்கமின்றிப் பேசுவது ஓர் அசாதாரண விடயமாகக் கருதப்பட்ட ஒரு சூழலில் இக்கதை நிகழ்கின்றது இக்கதையில் ஆசிரியர் பெண்கள் பற்றிய பாரம்பரியமான பல சமூக மனப்பாங்குகளையும், நவீன காலத்திற்கேற்ற புதுமையான சமூக நோக்குநிலையும் எடுத்துக் காட்டி இரண்டையும் முரண்பட வைப்பதன் மூலம் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டிவிடுகின்றார். புரிந்துணர்வின்மையும், சந்தேகங்களுமே கதையோட்டத்தை வளர்த்துச் செல்கின்றன.

**ராமு, மணி, சாரதா — பாத்திரப்படைப்புக்கள் :**

மிகக்குறைந்த பாத்திரங்களை அமைத்து அவற்றை உளவியல் அடிப்படையில் முழுமையாக வளர்த்துச் செல்வதே கு. ப. ராவின் பணியாகும். அவ்வகையில் ராமு, மணி ஆகிய இருவரும் நண்பர்களாகவும், ஒத்த குணவியல்பு உடையவர்களாகவும் காட்டப்பட்டுள்ளனர். இவ்விருவரும் உயர்கல்வி நிலையத்தில் கல்வி கற்றபோது

ஆணும் பெண்ணும் சமமாகப் பழக வேண்டும் என்று மேடைகளில் பேசிய மிக முற்போக்கான கொள்கையுடையவர்களாக இருக்கின்றனர். எனினும் அந்தக் கொள்கைகளை தம்முடைய வாழ்க்கையோடு இணைத்துக்கொள்ள முடியாத முரண்பாட்டை இவர்களிடையே காணலாம். சாரதா தன்னோடு பேசியதால் ராமு அடைந்த தடுமாற்றமும், தன் நண்பனை உள்ளே வந்து உட்காரும்படி அழைத்ததால் மணி கொண்ட விபரீதமான சந்தேகமும் இவர்களுடைய முரண்பாட்டினை எடுத்துக் காட்டுகின்றன. இவர்கள் எவ்வளவு முற்போக்கான கொள்கை உடையவர்களாக இருந்தாலும் பெண்கள் பற்றிய பாரம்பரியமான மனப்போக்கிலிருந்து மாற்றம் அடையாதவர்களாகவே இங்கு காட்டப்பட்டுள்ளனர்.

இக்குறைபாடுகளுடன் ராமுவிடம் சில நல்ல குணங்களும் காணப்படுகின்றன. தன்னுடைய நண்பனின் குடும்பம் குழம்பிவிடக்கூடாது என்பதற்காக அவன் துடிப்பதும், நண்பனின் மனநிலை அறிந்து நீண்ட நேரம் பேசாமல் வீட்டை விட்டு வெளியேறுவதும் அவனுடைய நல்ல பண்புகளைக் காட்டுகின்றன.

**சாரதாவின் குணவியல்பு, பெண்களின் மென்மையான மனவுணர்வு :**

கனகாம்பரத்தில் படைக்கப்பட்டுள்ள ஏனைய இரு பாத்திரங்களைப் போல சாரதாவும் வாழ்க்கை முரண்பாடுடைய ஒருத்தியாகக் காட்டப்படவில்லை. அவள் இறுதிவரை கணவனுக்கு ஏற்ற ஒரு பெண்ணாக

நடந்துகொள்பவளாகவே ஆசிரியரால் காட்டப்படுகின்றாள். இங்கு சாரதா என்ற பெண்ணின் மென்மையான மனவுணர்வு நான்கு கட்டங்களில் வைத்து விளக்கப்படுகின்றது.

1. சாரதா என்ற கிராமப்புற பெண்ணின் மனநிலை :

சாரதா ஒரு படிப்பறிவற்ற கிராமப்புறப்பெண். அவளுடைய நடையுடை பாவனைகளும் கிராமப்புறத்தையே நினைவுபடுத்துகின்றன. ஆனால் கணவன் விரும்பியபடி வாழவேண்டும் என்ற பெண்ணுக்குரிய மனோநிலை அவளிடம் காணப்படுகின்றது. கணவனின் உபதேசத்தை உள்வாங்கி, அதன்படி நடக்க முயற்சிக்கின்றாள். அதன்மூலம் கணவனை மகிழ்ச்சிப்படுத்தலாம் என்ற ஆர்வம் அவளிடம் காணப்படுகின்றது.

2. கணவனின் நண்பன் வந்துபோகும் சூழல் :

''இதோ வந்து விடுவார். உள்ளே வந்து உட்காருங்கள்'' என்று அழைப்பதில் கணவனின் நண்பன் பற்றிய அவளது நம்பிக்கையான மனநிலை வெளிப்படுகின்றது. இதன்மூலம் தான் பட்டண நகரத்திற்கேற்ப நடப்பதாகக் கருதி, கணவன் மகிழ்ச்சி அடைவான் எனும் எண்ணமும் அவளிடம் இருப்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. இங்கும் கணவர் கருத்தறிந்து நடக்கும் பெண்ணின் மென்மையான மனநிலையைக் காணலாம்.

3. தனது எதிர்பார்ப்புப் பொய்த்துவிட்ட நிலை :

இங்கு கணவன் அவள்மேல் கொண்ட சந்தேகத்தினால் தன் பெண்மை அவமானப்படுத்தப்பட்டதை உணரும் ஒருத்தியாக அவள் காட்டப்டுகின்றாள். கணவனிடம் எதிர்பார்த்த பாராட்டுக்குப் பதிலாக நம்பிக்கையீனமே அவளுக்குப் பரிசாக கிடைக்கின்றது. இதனால் கோபம் அடைந்து சடக்கென்று உள்ளே திரும்பிப் போய் விடுகின்றள். இங்கு தவறான சந்தேகத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணின் மென்மையான மனநிலை காணப்படுகின்றது.

4. கணவனை மன்னிக்கும் சூழல் :

கணவன் தவறு செய்தாலும் அதனை மன்னித்து எதுவுமே நடக்காதது போல நடந்து கொள்ளும் பெண்ணின் இயல்பு இங்கு காட்டப்படுகின்றது.

''கனகாம்பரம் எனக்குப் பிடிக்காதே, நீங்கள் சொன்னதில் தப்பென்ன? என்று சாரதா பெண்களுக்கென்றே அமைந்த முறையில் பேச்சை மாற்றி விட்டாள்'' என ஆசிரியர் இம்மனநிலையை மிக அழுத்தமாக வெளிப்படுத்துகின்றார்.

**கனகாம்பரம் எனும் பூ கதையில் பெறும் முக்கியத்துவம் :**

இக்கதையின் தலைப்பு 'கனகாம்பரம்' என்பதாகும். கனகாம்பரம்பூ வெளித்தோற்றத்தில் அழகானதாக காணப்பட்டாலும் அது வாசனை

அற்ற ஒன்றாகவே உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு நக ரப்புற பெண்களின் வாழ்க்கைப் போக்கிற்கு குறியீடாக கனகாம்பர பூவை, கதாசிரியர் பயன்படுத்துகின்றார். இவ்விடயத்தை தலைப்போடு மட்டும் விட்டுவிடாது கதையின் உள்ளேயும் எடுத்து மணி என்ற பாத் திரத்தின் ஊடாக விளங்குகின்றார்.

'பட்டணத்துப் பெண்கள் மாதிரித் தான் இருக்கிறது அவர்கள் வைத்துக் கொள்கிற கனகாம்பரமும், வாசனை இல்லாத பூவை எங்கே யாவது தலையில் வைத்துக் கொள்வதுண்டோ? காக்கரட்டான் பூவைத் தலையில் வைத்துக் கொள்கிற பெண்களுடைய வாழ்க்கைப் போக்கும் அப்படித் தான் இருக்கும்'

என மணி கூறுகின்றான். இங்கு கதாசிரியரின் நோக்கமாகிய, நகர்ப்புறப் பெண்களின் வாழ்க்கைச் சிறுமைத் தனங்களை எடுத்துக் காட்ட அவருக்கு கனகாம்பரமே கை கொடுத்தது.

அது மட்டுமல்ல, மணி என்ற பாத்திரத்தின் வெளிப்படையாகச் சொல்ல முடியாத மனநிலையை எடுத்துக்காட்டி கதையோட்டத்தை வளர்த்துச் செல்லவும் கனகாம்பரம் உதவுகின்றது.

'இது என்ன பூ என்று இதை நித்தியம் வாங்கித் தலையில் வைத் துக் கொள்கிறாய் என்று அவன் அவலை நினைத்து உரலை இடித்தான்'

என ஆசிரியர் கூறுகின்றார். இதனைத் தொடர்ந்து வரும் உரை யாடல்களும் இப்பகுதியில் அந்நிய ஆடவன் ஒருவனை வீட்டிற்கு அழைப்பதால் மணியின் மனதில் ஏற்பட்ட அதிருப்தியையும் விபரீதமான சந்தேகங்களையும் சாரதாவிற்கு வெளிப்படுத்த கனகாம்பரப் பூ பயன் பட்டதைக் காட்டுகின்றது.

இதைப் போலவே, 'கனகாம்பரம் எனக்குப்பிடிக்காதே. பெண்க ளுக்குகென்றே அமைந்த முறையில் பேச்சை மாற்றி விட்டாள்' என கதையின் இறுதிப் பகுதியிலும் கனகாம்பரப் பூ இடம் பெறுகின்றது. இங்கு கோபம் மாறி கணவரின் தவறை மன்னித்து சமாதானமாகிப் போகின்ற பெண் இயல்பை வெளிப்படுத்தவும், கதையை முடித்து வைக்கவும் கனகாம்பரப்பூவே பயன்படுகின்றது.

### கு. ப. ராவின் உரைநடைச் சிறப்பு:

கு. ப. ரா. கையாண்ட தனித்துவம் மிக்க உரைநடை, அவர் சொல்ல வந்த கதைப் பொருளை வெளிப்படுத்தப் பெரிதும் துணை நின்றது. மென்மையான உணர்வுகளை வெளிக் கொணர்வதற்கேற்ற உரையா டல்களையே அவர் பிரயோகித்தார். அவர் கையாண்ட சொற்கள் உணர்வுக் குறிப்பாற்றல் கொண்டனவாகவும், கவிதைப் பண்பு கொண் டனவாகவும் காணப்படுகின்றன.

'மிருதுவான பாஷையில் கம்பீரமான உணர்ச்சி நிலையை வருணிப்பதில் ராஜகோபாலன் தனிப்பட்ட கலைஞன்'

என வ. ராமையா கூறுகிறார்.

'சாரதா என்று சொல்லி மேலே பேச முடியாது நிறுத்தினான். வேண்டாம் என்று அவனது முகத்தை தடவினாள்'

இங்கு முதல் வாக்கியத்தில் தான் மனைவி மேல் தவறாக சந்தேகப் பட்டதற்காக வருந்தி மன்னிப்பு கேட்கத் துடிக்கும் மணியின் மனநிலை சொல்லாமல் விளங்கவைக்கப்படுகின்றது.

அடுத்த வாக்கியம் கணவனின் தவறை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் சாரதாவின் மன நிலையைக் காட்டுகின்றது. இரு சிறு வாக்கியங்களால் பெரும் போராட்டத்தில் சிக்கியிருக்கும் இரு பாத்திரங்களின் மனநிலையைத் வெளிப்படுத்தி வாசகர்களின் கற்பனையை தூண்டி விடுகின்றார்.

ஆசிரியரின் உரைநடையில் உள்ள சிறப்பம்சம். வாக்கியங்களை காரணகாரிய அடிப்படையில் அமைப்பதாகும். கதையின் தொடக்கமே மணி என்று வாசலில் நின்று கொண்டே ராமு கூப்பிட்டான் என அமைகின்றது. அவன் உள்ளே செல்லாமல் வெளியே நின்றதற்கான காரணம் அடுத்த வரியில் 'நண்பன் வீட்டில் இருக்கின்றானோ இல்லையோ என்ற சந்தேகம்'' என எடுத்துக்காட்டப்படுகிறது இப்பண்பினை கதை முழுவதும் காணலாம்.

தான் கூறும் விடயத்தை மேலும் அழுத்திக்கூற விரும்பும் போது கேள்விகளை அடுக்கி அவற்றை மனதில் பதிப்பது ஆசிரியரிடம் காணப்படும் இன்னோர் அம்சமாகும்.

'அந்தப் பெண்ணின் அசட்டுத்தனமோ, அறியாமையோ மணிக்கு கோபத்தை உண்டாக்கினால்? அவர்களிடையே பெருத்த மனத்தாங்கல் ஏற்பட்டால்? யார் கண்டார்கள்?

என்னும் பகுதியில் இதனைக் காணலாம்.

தேவையான இடத்தில் சிறுசிறு வாக்கியங்களை அமைப்பதும், மரபுச்சொற்கள், உவமைகள் என்பவை பயன்படுத்துவதும், பாத்திர உரையாடல்களை குறைத்துத் தானே கதையினை கூறிச் செல்வதும் அவரிடம் காணப்படுகின்ற ஏனைய சிறப்பம்சங்கள்.

## 2. பாற்கஞ்சி — வைத்திலிங்கம்

**ஈழத்துச் சிறுகதைகள் :**

ஈழத்திலே சிறுகதை 1930களின் பிற்பாதியிலேயே தோற்றம் பெறுகின்றது. ஆங்கிலேயர் வரவினால் ஏற்பட்ட புதிய சமுதாய மாற்றமும் ஆங்கிலக் கல்வியறிவும், தமிழக சஞ்சிகைகளில் எழுதிய தமிழக

எழுத்தாளர்களின் பாதிப்பும் ஈழத்தில் சிறுகதை தோன்றக் காரண மாக அமைந்தன. இவ்வகையில் இலங்கையர்கோன் சி. வைத்திலிங்கம் க. தி. சம்பந்தர் ஆகியோர் ஈழத்துச் தமிழ்ச்சிறுகதையின் தோற்றத் துக்குக் காரணமாக அமைந்தனர். இம் மூவரும் ஈழத்துத் தமிழ் சிறு கதையின் முன்னோடிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களோடு சோ. சிவபாதசுந்தரமும் குறிப்பிடத்தக்கவராவார். இவர்களது கதைகள் கலைமகள் கிராம ஊழியன், சூறாவளி, மணிக்கொடி, ஆனந்தவிகடன் முதலிய தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளில் வெளிவந்தன. ஈழகேசரியும் இவர்களது முயற்சிக்குக் களமாக அமைந்தது.

2. சி வைத்திலிங்கம்

ஆரம்பகாலச் சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளில் சி. வைத்திலிங்கத்தின் கதைகளே இலக்கியத் தரத்தில் முதலிடம் பெறு வதாக பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவர். இவர் மிகக் குறைவாக முப்பதிற்கு உட்பட்ட கதைகளையே எழுதியுள்ளார். அவற்றுள் வரலாற்றுக் கதைகளும். சமூகக் கதைகளும், ஆண் பெண் உறவைச் சித்திரிக்கும் கதைகளும் உள்ளன. ஆண்பெண் உறவைச் சித்திரிக்கும் கதைகளில் கு. ப. ராவின் செல்வாக்கு இருப் பதை அறிந்து கொள்ளலாம்.

3. பாற்கஞ்சி :

இக்கதையானது ஒரு ஏழைக்குடும்பத்தின் நிறைவேறாத ஆசை களைப் பாற்கஞ்சியைக் குறியீடாகக் கொண்டு சித்தரிக்கின்றது. சிறு தேவை யொன்றைக்கூட நிறைவேற்றுவதில் அக்குடும்பத்துக் குள்ள பிரச்சனைகளும் அதனால் ஏற்படும் சோகங்களும் இக்கதை யில் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

9. எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களுமே கதையில் முக்கியத்துவம் பெறுகின்றன :

விவசாயக் குடும்பமொன்றில் முருகேசன் காமாட்சி அவர் களின் மகன் ராமு ஆகிய மூன்று பாத்திரங்களை முக்கியமாகக் கொண்டு இக்கதை இயங்குகின்றது. இம்மூன்று பாத்திரங்களுமே வாழ்க்கையில் எதிர்பார்ப்புக்களையும் அவை நிறைவேறாததால் ஏற்படும் ஏமாற்றங்களையும் உடையனவாகப் படைக்கப்பட்டுள்ளன.

அ. ராமு :

முதலிலே ராமு என்ற பாத்திரத்தை எடுத்து நோக்கினால் எப் பொழுதும் கூழையே குடித்து வெறுப்படைந்த சிறுவனான அவன் தாயிடம் பாற்கஞ்சி தரும்படி கேட்கிறான் வறுமையில் உழலும் தாயோ நெல்விளைந்துவிடும் என்ற நம்பிக்கையில் நாளைக்குத் தருகிறேன் நாளைக்குத் தருகிறேன் எனக் கூறி அவனை ஏமாற்றி வருகின்றாள்.

இங்கு நாளைக்குப் பாற்கஞ்சி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும் ஒருவனாகவே ராமு காட்டப்படுகின்றான். இறுதியிலே மழைபெய்து அவனுடைய நம்பிக்கைகளைக் குலைத்தவிட, ''அம்மா, இன்றைக்குப் பாற்கஞ்சி தாரதாய்ச் சொன்னியே, பொய்யாம்மா சொன்னாய்?'' என்று தானடைந்த ஏமாற்றத்தைத் தாயிடம் வெளியிடுகிறான்.

எனினும் இறுதியில் ''நாளைக்குத் தாரியாம்மா பாற்கஞ்சி'' என மீண்டும் ஒரு எதிர்பார்ப்புக்குத்தயாராகி விட்ட ஒருவனாக அவன் படைக்கப்பட்டுள்ளான்.

ஆ. முருகேசன் காமாட்சி :

ராமுவைப் போலவே முருகேசன் காமாட்சி ஆகிய பாத்திரங்களும் கூட எதிர்ப்புக்களும் ஏமாற்றங்களும் உடையவனாகவே காட்டப்படுகின்றன. முதல் வருடத்திலே மழை ஏமாற்றி விட்டதால் ஏற்பட்ட வறுமையை இவ்வருட அறுவடையில் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை இருவரிடமும் காணப்படுகின்றது ஒரு பெருநாளை எதிர் பார்ப்பது போல் காமாட்சியும் முருகேசனும் அறுவடை நாளை எதிர்நோக்கி இருந்தார்கள் என கதாசிரியர் அவர்களின் எதிர்பார்ப்பினை எடுத்துக்காட்டுகின்றார்.

நம்பிக்கையான எதிர்பார்ப்பினால் தங்கள் பேருக்கும் வாங்க வேண்டிய ஆடம்பரப் பொருட்கள் எவையெவை யெனப் பட்டியலிட்டு மனக்கோட்டை கட்டுகின்றார் இவ்வெதிர்பார்ப்புகளின் உச்சக்கட்டமாக காமாட்சி களஞ்சிய அறையை மெழுகிக் கோலமிட்டு வைக்கிறாள். விரைவில் நெல்லாகிய லக்ஷ்மி வந்து அங்கு உறையப்போகின்றாள் என்ற நம்பிக்கை அவளுக்கு

முருகேசன் கதிர்ப்பாய்களையும், அரிவாட்களையும் தயார்படுத்துவதோடு அறுவடைக்கு உதவுபவர்களிடம் சென்று மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிறான்.

ஆனால் அவர்களது எதிர்பார்ப்புக்கள் திடீரென ஏற்பட்டமழையினாலும் வெள்ளத்தாலும் பொய்த்துப் போகின்றன. தங்கள் எல்லாக் கனவுகளும் மண்ணோடு மண்ணாகப் போய்விட தங்கள் ஒரே மகனின் சாதாரண பாற்கஞ்சி ஆசையைக் கூட நிறைவேற்ற முடியாத ஏமாற்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர்.

தங்கள் எதிர்பார்ப்புக்கள் வீணாகிவிடுமோ என்ற சூழலில் அந்த ஏழை விவசாயிகள் கடவுளிடமே சரணடைகின்றனர். கடவுள் காப்பாற்றுவார் என்ற முருகேசனின் நம்பிக்கையும் காமாட்சியின்

வேண்டுதல்களும் இதனையே எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் கடவுள்மேல் கொண்ட எதிர்பார்ப்பிலும் ஏமாற்றம் அடைந்தவர் களாகவே அவர்கள் கதாசிரியரால் சித்தரிக்கப்படுகின்றனர்.

கதையின் இடையில் ஒரு கனவுக் காட்சி வருகின்றது. முரு கேசனின் கனவில் காமாட்சியும் ஏனையவர்களும் கட்டுக் கட்டாக நெல்லைக் குவிக்கின்றனர் கனவு கலைந்த பின் முருகேசன் கற் பனை உலகில் சஞ்சரிக்கின்றான் கற்பனையில் ராமு வயிறு நிறை யப் பாற்கஞ்சி குடிக்கிறான். காமாட்சி ஒட்டியாணம் அணிந்திருக் கிறாள். இவற்றின் மூலம் இக்குடும்பம் வறுமையிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக இருப்பது என்பது கனவிலும் கற்பனையிலும் தான் முடியுமென்பதை ஆசிரியர் காட்டுகின்றார்.

5. கதையின் பாற்கஞ்சி பெறும் முக்கியத்துவம்:

ஏழைக்குடும்பத்தின் வறுமையை எடுத்துக்காட்டும் இக்கதை யில் பாற்கஞ்சி ஒரு குறியீடாக உள்ளது இத்தகைய குடும்பங் களில் எத்தனையோ ஆசைகள் உள்ளன. அவையெல்லாம் நிறை வேறாமல் மண்ணோடு மண்ணாகி மடிந்து போகின்றன. அவ்வா றான ஆசைகளுக்கெல்லாம் ஓர் எளிமையான குறியீடாகவே பாற்கஞ்சி அமைகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஏமாற் றத்தின் இயல்புகளை அன்றாட நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி ஆசிரியர் காட்டுகின்றார்.

கதைத்தொடக்கத்தில் பாற்கஞ்சி இடம்பெறுகின்றது. அதுமட்டு மல்ல தொடர்ந்து கூழ் குடித்ததனால் வெறுப்படைந்திருக்கும் மகனுக்கு நாளைக்குப் பாற்கஞ்சி தருவதாகத் தாய்தன் நம்பிக்கையை வெளிப்படுத்துவதுடன் கதை ஆரம்பிக்கின்றது.

இறுதியிலே நாளைக்குப் பாற்கஞ்சி தருவாயா என்று ராமு தாயைக் கேட்க அனேக நாள் பழக்கத்தினாலே நாளைக் ...... என்று மட்டுமே அவளால் சொல்ல முடிந்தது அந்த அரைகுறை யான வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளி கொட் டியது என இறுதியிலும் பாற்கஞ்சி வருவதுடன் கதை முடிவடை கிறது. இங்கு முருகேசனின் வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட் டியது பாற்கஞ்சி மட்டுமல்ல அவ்வருடத்தில் நிறைவேற்ற முடியாமல் போகப் போகும் எல்லாத் தேவைகளுக்கும் தான் என்பதை ஆசிரியர் குறிப்பாகப் புரிய வைக்கிறார்.

6. உரைநடைச்சிறப்பு:

அ. பெரும்பாலும் சிறுசிறு வாக்கியங்கள் (...... ......... ......)

ஆ. கதைநிகழ் களத்தோடு ஒட்டிய கிராமியப் பாங்கான உரைநடை ''என் ராசாவன்னா குடிச்சிடுவாய்...........''
''தாயே, இதுக்கிடையில் ஒரு விக்கினமும் வந்திடப்படாது''

இ. வினா எழுப்பித் தேவையான இடங்களுக்கு, அழுத்தம் கொடுத்தல் ''அவன் ஒரு வருடமாகப் பாடுபட்டது வீண் போகவில்லை அல்லவா? சிலவேளை ஏதேனும் .........யார் கண்டார்கள்?''

ஈ. கதை நிகழும் சூழலுக்கு வாசகரை அழைத்துச் செல்லும் வருணனைப் பாங்கான உடைநடை, ''அதற்குப்பக்கத்திலே குளம், குளத்தைச் சுற்றிப் பிரமாண்டமான மருதமரங்கள் தூரத்திலே அம்பிகையின் கோயிற் கோபுரம். இவை எல்லாவற்றையும் சுற்றி வேலிபோட்டாற் போல தூங்கிக்கிடந்தன குடிமனைகள்''.

---

★ ★ ★

## தமிழின் தனிச்சிறப்பு

உறுதிப்பொருள்களாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றுள், அறம், பொருள் இரண்டையும் புறத்திணையாகவும் இன்பத்தை அகத்திணையாகவும் கொண்டு தமிழ் இலக்கியங்கள் பகுக்கப்பட்டிருப்பது தமிழ் மொழிக்கே உரிய சிறப்பம்சம் ஆகும்.

## கேள்வி அறிவு

உணற்கினிய இன்னீர் பிறிதுழி இல்லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் — * கணக்கினை
முற்றப் பகலும் முனியாது இனிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

— நான்மணிக்கடிகை

* கணக்கு = நூல்

# இலக்கியக் கல்வியின் பயன்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
உயர்பட்ட ஆய்வுப் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு சமூகத்திலும் கல்வியினுடைய பயன்பற்றித் தெளிவாகப் பண்டைக்காலத்திலிருந்தே கூறிவந்துள்ளனர். தமிழ் மொழியில் எமக்குக் கிடைக்கும் மிகப் பழைய இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களிலே கல்வியின் பயன்பற்றிக் கூறப்பட்டுள்ளது. கல்வியறிவினாலே கீழ்ப்பாலொருவன் மேல்நிலையுடையவனாகக் கொள்ளப்படுவான என்று புறநானூற்றுச் செய்யுள் ஒன்று கூறுகின்றது. வள்ளுவனுடைய திருக்குறள் கல்வி பற்றி உடனிலையாகப் பலவற்றைக்கூறி கல்லாமை என்னும் அதிகாரத்தால் எதிர்மறையாகவும் கூறியுள்ளான். வாழ்வதற்கான கல்விபற்றியே வள்ளுவன் கூறுகிறான்.

> ''கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
> நிற்க அதற்குத் தக''

என்னுங் குறளிலே ஒவ்வொரு துறையிலும் இன்ன வகையானவை கற்கவேண்டும் என இருப்பின், அவற்றைக் ''கசடறக் கற்க'' என்று கூறும் குறளாசிரியன், அவற்றைக் கற்ற பின்னர் அவற்றுக்கேற்ப ''நிற்க'' என்கின்றான். எனவே, வாழ்க்கைக்கு எல்லா வகையான கல்விகளும் எமக்கு வேண்டியனவாகும்.

உண்மை, செம்மை, அழகு (சத்தியம், சிவம், சுந்தரம்) என்ற மூன்றுமே மனித சமூகத்துக்கு இன்றியமையாதனவாகும். அறிவியற் கல்வி என்பது உண்மைகளையே எடுத்துக்கூறுவதாகும். இவ்வுலகம் பற்றியும், அண்டம் பற்றியும், மனிதனைப் பற்றியும், இயற்கையைப் பற்றியுமான உண்மைகளை அறிவியல் எங்களுக்கு எடுத்துக்கூறுகின்றது. அவ்வறிவியற் கல்வியாலே எங்களுக்கு எத்தனையோ வசதிகள் ஏற்பட்டுள்ளன. எண்ணற்கரிய விந்தைமிகு வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்தித்தரும் அறிவியற் கல்விதான் பல அழிவுகளுக்கான அறிவினையும் பொருட்களையும் உண்டாக்குகின்றது. சமூக அறிவியற்கல்வி மனித சமூகத்தின் செம்மைக்கான அறிவினைத் தருகின்றது. வாழ்வினைச் செம்மைப்படுத்தற்கு இக்கல்வி துணைசெய்கின்றது. மனிதருடைய அழகுணர்வினை வளர்க்கவும் அதனால் உயர்வான இன்பத்தினைப் பெறவும் இலக்கியக் கல்வி வழிசெய்கின்றது. சுருக்கமாகக் கூறின் பின்வருமாறு அமையும்.

அறிவியற் கல்வி — உண்மை
சமூக அறிவியற் கல்வி — செம்மை
இலக்கியக் கல்வி — அழகு

அழகினையூட்டும் இலக்கியக் கல்வியின் பயன்களை மேலும் விரிவாக நோக்கலாம்

உள்ளத்து உணர்வுகளை — கருத்து வடிவிலேயுள்ள அவற்றை - காட்சி வடிவிலே காட்டும் திறமை இலக்கியத்துக்குண்டு. அன்புள்ளங் கொண்ட மானிடக்காதலர்களுடைய உணர்வுகளை இலக்கியக்கல்வி நன்கு உணர்த்தும். பொருள் தேடுவதற்காகத் தன் துணைவியை வீட்டிலே விட்டு பாலநில வழியாலே ஒரு தலைவன் செல்கின்றான். ஓரிடத்திலே அவன் மனத்தை உருக்கும் ஓர் அன்புக்காட்சியினைக் காண்கின்றான். அவன் மனம் வியப்படைகின்றது. அவன் கண்ட காட்சி இது தான்: ஓர் ஆண்மானும் பெண்மானும் ஓரிடத்திலேயுள்ள நீரினைக் கண்டு மிகுந்த விடாயுடன் ஓடிவருகின்றன. சிறிய குட்டையினுள் மிகக் குறைந்த அளவான நீர் இருப்பதை அவன் காண்கின்றான். ஓடிவந்த இரண்டு மான்களும் அந்த நீரிலே வாய்வைக்கின்றன. இக்காட்சியினை சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்த அவன் வியப்படைந்தான். இரண்டு மான்களும் நீரை உறிஞ்சிக்குடிப்பது போலத் தெரிகின்றது. ஆனால் நீரின் அளவு குறைவதாகத் தெரியவில்லை "இது என்ன வியப்பு என்று அவன் பரவசமடைந்தான்" உண்மையை அவன் உணர்ந்து கொண்டான் அருள் கொழுந்தோடிய அம்மான்களின் உள்ளங்கள் அவனுக்கு நன்கு தெரிந்தன. ஆண்மான் "இச்சிறிய நீரை பெண்மான் குடித்து விடாயைத் தீர்க்கட்டும்" என்று எண்ணித் தண்ணீரை உறிஞ்சிக் குடிப்பது போல் பாவனை பண்ணியது. பெண்மானும் அதேபோல் எண்ணிப் பாவனை பண்ணியது. இக்காட்சி அவனுக்கு தன் துணைவியை எண்ணிப்பார்க்க வைத்தது. அஃறிணைக் காதல் உள்ளம் பற்றியும் உயர்திணைக் காதல் உள்ளம் பற்றியும் எம்மை எண்ணும்படி வைத்த பாடல் இதுதான்

சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணி
பிணைமான் இனிதுண்ண வேண்டி — கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்பர் காதல்
உள்ளம் படர்ந்த நெறி.

இலக்கியம் இத்தகைய அன்பு உள்ளங்களைக் காட்டிப் படிப்பவர்களின் மனத்தைச் செம்மைப்படுத்துகின்றது.

இலக்கியத்தைப் படிப்பதன் மூலம் உயர்ந்த எண்ணங்களையும், குறிக்கோள்களையும் நாம் அறியமுடிகின்றது. எல்லோரும் எம்முடைய உறவினர்கள்; எல்லா ஊர்களும் எம்முடைய ஊர்கள் என்று உயர்ந்த கோட்பாட்டினைப் புறநானூற்றுப் புலவன் கூறுகிறான். இத்தகைய உயர்ந்த கோட்பாட்டை நலம் நடைமுறைப்படுத்த இன்னொரு உண்மை

யினை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். அதுதான், எமக்கு ஏற் படும் நன்மையோ தீமையோ பிறர்தருவதனாலே வருவதல்ல என்ப தாகும்.

"யாதுமூரே யாவருமெங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

இது எம் வாழ்க்கையை நெறிப்படுத்த உதவும் கோட்பாடாகும். பட்டறி வினாலே கண்ட உண்மையுமாகும். இவ்வாறு எத்தனையோ உண்மை களை அழகியலுணர்வுடன் இலக்கியம் எமக்குத் தருகின்றது.

அறிவியல் உண்மையை மட்டும் புலப்படுத்தும். ஆனால் இலக்கி யமோ உண்மைகளைப் புலப்படுத்தும்; சமூகத்தைச் செம்மைப்படுத்த வழிகள் கூறும்; அழகியல் உணர்வினைப் புலப்படுத்தும் இலக்கிய ஆசி ரியனும் அறிவியலறிஞனும் ஒரே தளத்தில் நின்றே புறப்படுகின்றனர். இருவரும் இயற்கையை அவதானிப்பதிலே ஒன்றுபடுகின்றனர். ஆனால் அந்த அவதானிப்பூடாகக் கண்ட உண்மையினைக் கூறுவதிலே இரு வரும் வேறுபடுகின்றனர். நதியொன்று மேட்டிலே ஏறி பள்ளத்திலே வீழ்ந்து வளைந்து நெளிந்து செல்கின்றது. 'புவியிலாளன் அதற்கான காரணத்தைப் புவியியலடிப்படையிலே விளக்கிக் கூறுவான். இதே காட்சியினைக் காணுங் கவிஞன்,

"நந்தா எழிலரசி
நாணமுடன் உடல்வளைத்துச்
சிந்தா முறுவலுடன்
செல்கின்றாய் காவிரியே"

என்று பாடுகின்றான்.

சமூக அறிவியலாளர் ஆராய்கின்ற அதே சமூகச்சிக்கல்களை இலக்கிய ஆசிரியர்களும் நோக்குகின்றனர். சமூக அறிவியலாளர் புள்ளி விவரங்களுடன் தரும் அறிக்கையிலிருந்து நாம் பெறும் உண்மையினைச் சில வேளைகளில் இலக்கியம் தந்துவிடும். அதற்கு மேலாக அச்சிக்க லுடன் தொடர்புடைய உணவுகளையும் எலும்பும் சதையுமாக இலக்கி யம் தந்து விடுகின்றது. 'நந்தி' யினுடைய தங்கச்சியம்மா நாவல் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். நோய் பரவுதல், அதற்கான காரணம் அதைத் தடுக்கும் முறை, அதன் சமூகப்பின்னணி என்பன பற்றியெல் லாம் சமூக மருத்துவ அறிக்கைகளிலே படிக்கலாம். அந்த அறிக்கைகள் கூறும் உண்மைகளுடன் அப்பணியிலே ஈடுபடும் தாதியார், மருத் துவர், விற்பன்னர்கள், நோய்வாய்ப்பட்டோர் ஆகியோருடைய உணர் வுகளையும் நந்தியினுடைய நாவல் எமக்குத் தருகின்றது. முடிவாக, இலக்கியக்கல்வி உண்மை, செம்மை, அழகு என்னும் மூன்றினையும் தரவல்லது. அதனுடன் மொழியினுடைய செழுமையினை அது எமக்கு உணர்த்துகின்றது. சங்க இலக்கியங்களிலே கையாளப்பட்ட செறுத்த மொழியினைக் காணும் நாம் எளிமையான இலகு நடையினை பிற் கால இலக்கியங்களிலே காண்கிறோம். எம்முடைய பண்பாட்டு நடை முறைகளையும் இலக்கியம் எமக்குத் தருகின்றது.

# சைவசித்தாந்த அத்துவிதக் கோட்பாடு

**மு. தவேந்திரன்**
யாழ். பல்கலைக் கழகம்.

---

**சைவசமயம்** சிவனை முழுமுதலாகக் கொண்ட சமயம் ஆகும். சிவம் என்பதற்கு அன்பு, ஆனந்தம், மங்களம் எனப் பொருள். இச் சைவநெறியின் சிந்தனை முடிபாக விளங்குவது சைவசித்தாந்த தத்துவம். சித்தாந்தம் என்பதில் சித் என்றால் அறிவு, தெளிவு எனவும் அந்தம் என்றால் முடிபு எனவும் பொருள்கொண்டு சிந்தனை முடிபே சித்தாந்தம் எனப்படுகிறது. சித்தாந்த சைவம் தமிழ்மக்கள் வளர்த்தெடுத்த சமயம். அதன் தத்துவங்கள் சைவசித்தாந்தம் எனப்பெயர் பெறும்.

" சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுள்ளோர் சைவசித்தாந்தரே "

எனதிருமூலர் முதன் முதலில் சைவசித்தாந்தம் என்றசொல்லைப்பயன்படுத்தியுள்ளார். சைவசித்தாந்த சிந்தனைகளை விளக்குவனவாக திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள், பண்டாரசாஸ்திரங்கள்; சிவாகமங்கள் விளங்குகின்றன. பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (மலம்) என்பன சைவ சித்தாந்தம் ஏற்ற அடிப்படை உண்மைப் பொருட்கள்.

அத்துவிதம் என்ற சொல்லிற்குக் கொண்ட பொருள் மாறுபாட்டின் விளைவாகச் சைவம் முதலான வெவ்வேறு இந்திய சமயப் பிரிவுகளின் அடிப்படைச் சித்தாந்தம் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'அத்துவிதம்' எனத் தமிழில் வழங்கும் வடசொல் 'ஏகம் ஏவ அத்துவிதியம் பிரமம்' என்ற வேத வாக்கியத்திலே இடம்பெற்றதன் தமிழ் வடிவம். அத்துவிதியம் அல்லது அத்வைதம் என்பது ந (ஞ்)த்வைதம் என்பதன் திரிபு என்பர். இதில் அ(ந) கரத்திற்கு தரப்படும் ஆறு பொருள்களிலே மூன்று தத்துவ உலகிலே சிறப்பிடம் பெறுகின்றது. அவை இன்மை, மறுதலை, அன்மை என்பனவாம். இன்மைப் பொருளினை கேவலாத்துவிதமும், விசிட்டாத்து விதமும், மறுதலைப் பொருளினை துவைதமும், அன்மைப் பொருளினைச் சித்தாந்தமும் ஏற்றிருக்கின்றன. சைவ சித்தாந்தம் கூறும் அத்வைதம் சுத்தாத்வைதமாகும். இதை

" பொய்கண்டார் காணாப் புனிதமா மத்துவித
மெய்கண்ட நாதன் "

என தாயுமானவர் சுட்டுவது கவனிக்கதக்கது. புனித அத்துவிதமென்பது சுத்தாத்வைதமாகும். அ + துவைதம் அத்வைதம் ஆகும். அ என்பது அல்ல என்றும் துவைதம் இரண்டு என பொருள் கொண்டு இரண்டற்ற தன்மைஎன பொருளாகிறது. மேலும் சித்தாந்திகள் அத்வைத நிலையினை ஒன்றாய், வேறாய், உடனாய் என்ற மூன்று நிலை ஊடாக கலப்பினால் ஒன்றாயும், பொருள்தன்மையால் வேறாயும், செயல் தன்மையால் உடனாயும் அத்வைத நிலை விளக்கப்படுகிறது.

இதையே திருஞானசம்பந்தர்,

" ஈறய் முதல் ஒன்றாம் இருபெண் ஆண்குண மூன்றாய்
வேறாய் உடனானான் இடம்விம்மிழலையே''

எனப் பாடுகின்றார்.

சித்தாந்திகளால் இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பும் இறைவனுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பும் அத்துவித உறவு நிலைக்குரிய தன்மையினில் புலப்படுத்தப்படுகின்றது. அத்துவிதம் இரண்டல்லாமையினைக் குறிக்க அங்கு பிரிவின்மை வலியுறுத்தப்பெறும். இறைவனும் உலகும் கலப்பின் தன்மையால் உடலும் உயிரும் போல ஒன்றிநிற்கும் நிலை அபேத நிலை ஆகும். உலகும் பொருட் தன்மையினால் நோக்கும்போது கண்ணும் அருக்கண் போல இறைவன் வேறு உலகு

வேறு என்பது உணரப்படும். இது பேத நிலைக்குரியதாகும். உலகத்தை இறைவன் தொழில்படுத்துதல் மாத்திரமன்றி அதன் நிமித்தம் தானும் செயற்படும் தன்மைய னாக அபேத நிலையில் விளங்குவதுடன் அச்செயலால் தான் விகாரமாகாது பேத நிலையிலும் இயங்குகின்றான். இங்கு அதன் பேதாபேத நிலைக்குரியதாகின்ற இறை வனுக்கும் உலகுக்கும் இடையிலான அத்து வித உறவானது அபேத, பேத, பேதாபேத நிலையாகவும் ஒன்றாயும், வேறாயும், உட னாயும் அமைகின்ற தென்பது விளக்கப் படுகின்றது சைவசித்தாந்தத்தில். இறை வனும் ஆன்மாவும் அத்துவிதப்படும் நிலை யினை மெய்கண்டார்.

'அவையே தானேயாய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்குமன்றே'

எனக்குறிப்பிடுகின்றார்.

மேலும் உடலும் உயிரும் இணைந் துள்ளது போல இறைவனும் உயிரும் அபேதமாய் நிற்றல் அறிய முடிகிறது. அத் துடன் உடலுக்கு இட்ட பெயரால் அழைக்க உயிர்பதிலளிப்பது போல இறைவன் உயிர் களிடத்து வேற்றுமையின்றி இணைந்து விளங்குகின்றான் இறைவன் உயிருடன் ஒன் றாய், அதுதாய் அபேதமாய் நிற்றல் சுட் டப்படுகிறது.

அவையே தானேயாய் அமையும் பிரிப் பற்ற நிலை கூறுகையில்

'' பண்ணும் ஓசையும் போல பழமதுவும்
எண்ணுஞ் சுவையும் போலெங்குமாம்
அண்ணல்தாள் ''

என பண் — ஓசை, பழம் — சுவை என பிரிப் பற்ற தன்மைபோல் முதல்வன் திருவருள் உயிர்களோடு பிரிப்பின்றி இணைந்து நிற் கும் தன்மை உணர்த்தப்படுகிறது. இவ் வாறு உடனாய் நிற்றலை தெளிவாக்குகின் றனர் சைவசித்தாந்திகள். ஒன்றாய், வேறாய், உடனாய் என்ற மூன்று நிலையை யும்

'' அரக்கொடு சேர்த்தி அணைந்தவக்கற்போல்
உருக்கியுடங்கியைந்து நின்று ''

என்ற பாடலில் மெய்கண்டார் பொன்னை உரைத்து பார்க்கும் கல்லில் மிக நுண்ணிய கற்பொடியும் அரக்கும் சேர்ந்து இரண்டாயும் உடனாயும் இருப்பதுபோல இறைவனும் ஆன்மாக்களுக்கு ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பான் என்று கூறுவர். சைவசித்தாந்தம் கூறும் சுத்தாத் வைதம் என்ற சொல்லாட்சி சித்தாந்தத் திற்குரியது எனினும் மண்டலப்பிரம்மனோப நிடதத்தில் 'சிவோத்வைத' எனவும், கைலாசசங்கிதை என்ற நூலில், அத்வைத சைவம் சிவாத்துவிதம் எனவும் சுட்டப் படுகின்றது. வல்லபாச்சாரியாரின் தத்து வத்தினை சுத்தாத்வைதம் என அழைப்பர். சுத்தாத்துவிதமே தூயதும் தெளிவானது மான அத்துவிதக்கோட்பாடெனச் சைவ சித்தாந்திகளால் எடுத்தாளப்படுகின்றது. இவ் அத்துவித நிலையினிலே பதியும் பசு வாகிய உயிரும் இணையும் தன்மையினை உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுகையில்

'' தாடலை போற் கூடியவை தான் நிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகமெனக் கொள் ''

என்ற திருவருட்பயனில் கூறி தாள் + தலை என தாடலையை விளக்கி பசுவின் தலை யானது பதியின் தாளை அடையும் இறுதிக் கலப்பு நிலையைக்கூறி இந்நிலை சிவத் துடன் ஒன்றாகி இரண்டற்ற தன்மையதாக விளங்கும் நிலை எனக் குறிப்பிடுகின்றார். 'சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனை யாண்ட' என்ற மணிவாசகரது கூற்று தாடலையின் தன்மையினை உணர்த்தி நிற்கின்றது. மேலும் 'அயரா அன்பின் அரன் கழல் செலுமே' என விளக்குவார். இரண்டாய் இருந்த பொருள் முத்தி நிலை யில் ஒன்றாய் சேருகின்ற பேரானந்த நிலையை உரு, அரு, அருவுருவுக்கு அப்பாற் பட்ட சோதியாய் அடையும் தன்மையை, திருவடி அடைகின்ற அரன் குழல் செலுமே, சிவனடி சேருகின்ற, இணையடி அமர்கின்ற தாள் சேர்கின்ற, அரன் கழல் அடைதல் என சைவ சித்தாந்திகள் சுட்டுவர். இவ் வாறாக இந்திய மெய்யியலில் அத்துவைதம் சைவ சித்தாந்த நிலையில் தெளிவுக்குரிய தாயும், தூயதாயும் விளக்கப்படுவதனைக் காணலாம்.

## வணிகநாதம் சிறப்புற வாழ்த்துகிறோம்

# மக்கள் வங்கி

**உங்கள் வாழ்நாள் முழுவதும் நிழல்போல்**
**உங்களைத் தொடர்ந்துவரும் "மக்கள் வங்கி"**
**மக்கள் சேவையில்**
**39 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது**

- **60 இலட்சம் வாடிக்கையாளர்கள் !!**
- **300ற்கும் மேற்பட்ட கிளைகள் !!!**

**இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில் நீங்களும் சேருங்கள் !!!**

- **வங்கியின் வழமையான சேவைகளுடன்**

* பாடசாலை மாணவர்களுக்கான விசேட சேமிப்புத் திட்டம் "மாணவர் மலர்ச்சி"
* மகளிரிக்கான திட்டம் "மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு"
* ஆசிரியர்களுக்கான விசேட வைப்பு மற்றும் கடன்திட்டம் 'குருசெத'
* சுகாதார சேவையிலுள்ள தாதியருக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம் "சுவசெவண"
* தொழில் அற்றோர் சுயதொழில் தொடங்குவதற்கான திட்டம் "சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்"
* முதியோருக்கான திட்டம் "மூத்த பிரஜைகள் யாத்திரைக் கணக்கு"
* வருடந்தோறும் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிர்ஷ்டலாபப் பரிசு வழங்கும் திட்டம்

**இன்னும் பலப்பல திட்டங்கள் அனைத்தும் உங்கள் வளர்ச்சிக்கே !!!**

**இலட்சோப லட்சம் மக்களின் வங்கியாகிய மக்கள் வங்கியின் வாடிக்கையாளராகி நலம் பெறுவீர்!!**

**மக்கள் மனமறிந்த வங்கி "மக்கள் வங்கி"**
பிரதேச தலைமை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# EVEN INFANTS CAN SAVE WITH N S B!

'Punchi Hapan' is a savings account for little ones up to 7 years, while 'Hapan is for kids from, 7 to 16 years... and they can operate it chernselves!

Soon Mr. Hapan is their best friend who helps them strart saving at is tender age, for secure future.



**N S B**

**HAPPAN CHILDRENS ACCOUNT**

They'll also be thrilled with the highest rate of interest they're earning.

Put YOUR kids on the thrift trail with 'Punchi Hapan' and ''Hapan'!'

**N S B →**

*CHUNNAKAM*

**Hapan**

**CHILDREN'S SAVINGS ACCOUNT**

வணிகநாதம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

மக்கள் சேவையில்
மகிழ்வுறும்

சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்

# ஒற்றைப் பதிவும் நிறைவில் பதிவும்
# (Single Entry And Incomplete Records)

ஜெ.ஞானகரன்
99 வர்த்தகம்

அதிகளவான மூலதனத்துடன் இயங்கும் நிறுவன கணக்காளரால் இரட்டைப்பதிவு முறையில் கணக்குகள் பேணப்படும். ஆனால் சிறியளவான மூலதனத்துடன் இயங்கும் நிறுவனங்களில் இவ்வாறு இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பதிந்து வைப்பதில் பல பிரச்சினைகள் காணப்படும். அதாவது கணக்காளர் இல்லாத நிறுவனங்களில், நிறுவன உடமையாளருக்கு கணக்கு ஏடுகளைத் தயாரிப்பதற்கு பூரண இரட்டைப்பதிவு பற்றிய அறிவு இல்லாதிருத்தல், நிறுவனத்தில் எதிர்பாராத விதமாக தீயழிவு, கையாடல் நட்டம், இயற்கை அனர்த்தம் போன்ற சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் கணக்கு ஏடுகள், ஆவணங்கள் அழிந்து போயிருத்தல், மேலும் இரட்டைப்பதிவு முறைக்கமைய கணக்கு ஏடுகள், ஆவணங்கள் தயாரித்தல், கணக்குப் பதிவாளர் சம்பளங்கள் போன்ற நிலைமைகளால் ஏற்படும் செலவுகள் என்பவையே இரட்டைப்பதிவு முறையில் கணக்குகள் காணப்படாமைக்குக் காரணங்களாகும். இவ்வாறான பூரண இரட்டைப்பதிவு இல்லாது கணக்குகளை வைத்திருக்கும் நிறுவனங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(i) எந்தவித பதிவும் பதியாது விடல்.

(ii) அரைகுறையாகப் பதிவை வைத்திருத்தல்

(iii) ஒற்றைப் பதிவைப் பதிந்து வைத்திருத்தல்

முதல் இரு நிறுவனங்களிலும் செலவீனங்கள் முழுமையாக அறியமுடியாது. ஆனால் மூன்றாவது வகை நிறுவனங்களில் கண்டிப்பாக ஒற்றைப் பதிவை மேற் கொண்டிருப்பதால் மற்றைய பதிவை மேற்கொண்டு (எதிர்ப்பதிவு) முழுமையான தகவலைப் பெறலாம். அதாவது வணிக நிறுவனங்கள் பூரண இரட்டைப்பதிவு முறையைப் பின்பற்றிக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யாமல் தமக்கு இயைபான முறையில் கணக்கு வைப்பு முறையைப் பின்பற்றுமாயின் அதனை ஒற்றைப்பதிவும் நிறைவில் பதிவும் எனலாம். இம்முறையில் இந்த முறையில் தான் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். என்ற ஒழுங்குகள் காணப்படாது. அத்துடன் ஒரு வியாபாரத் தரவிற்கு ஒரு பதிவை மட்டும் பதிதல் ஒற்றைப் பதிவு என்பதற்கான கருத்தை பூரணமாகக் கொடுப்பதில்லை.

இதில் ஒற்றைப்பதிவு என்பதில் ஆட்குறி கணக்கு, மெய்கணக்கு என்பன பேணப்பட்டிருக்கும். ஆனால் பெயரளவுக் கணக்குகள் முற்றாகத் தவிர்க்கப்படும். இதனால் இம்முறையில் வியாபார இலாப நட்டக்கணக்கைத் தயாரிப்பதன் மூலம் நிறுவனத்தின் பெறுபேற்றை அறிய முடியாது. எனவே இதில் இலாப நட்டத்தைக் கணிப்பதற்கு இறுதி மூலதனத்துடன் ஆரம்பித்து ஆரம்ப மூலதனத்தையும் மேலதிக மூலதனத்தையும் கழித்து பற்று இருப்பின் அதனைக் கூட்டுவதன் மூலம் ஆண்டுக்கான தேறிய இலாபம் OR நட்டம் என்பது பெறப்படும்.

*Note:*

ஆரம்ப மூலதனம், இறுதி மூலதனம் என்பன நேரடியாகத் தரப்படாதவிடத்து ஆரம்பச் சொத்திலிருந்து ஆரம்பப் பொறுப்பைக் கழிப்பதன் மூலம் ஆரம்ப மூலதனத்தையும், இறுதிச்சொத்திலிருந்து இறுதிப் பொறுப்பைக் கழிப்பதன் மூலம் இறுதி மூலதனமும் அறியலாம்.

ஒற்றைப் பதிவு முறையில் இலாப நட்டத்தைக் கணிக்கும் கூற்றுவடிவம்

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| இறுதி மூலதனம் | | **** |
| + எடுப்பனவு | | ** |
| | | ***** |
| - ஆரம்ப மூலதனம் | *** | |
| மேலதிக மூலதனம் | ** | (***) |
| ஆண்டிற்குரிய இலாபம் / நட்டம் | | **** |

**உதாரணம்** : தனி வியாபாரியான x என்பவர் தனது ஏடுகளை நிறைவாக வைத்திருக்கவில்லை. எனின் 30.06.99 இல் முடிவுற்ற ஆண்டு தொடர்பில் பின்வரும் தகவல்கள் உமக்குத் தந்துள்ளார்.

01.07.99 இல் மூலதனம் - 65000/-

30.06.2000 இல் மூலதனம் - 98000/-

30.06.2000 இல் முடிவுற்ற காலத்தில் x காசாக 400/- வையும் பொருளாக 200/- வையும் தனது தேவைக்கு எடுத்தார். தனது தனிப்பட்ட வங்கி சேமிப்புக் கணக்கு மீதியான 45000/- வை வியாபாரத்தின் சேமிப்புக்களாக மாற்றினார்.

***வினா: 30.06.2000 ல் முடிவடைந்த வருடத்திற்கான x இன் இலாப/நட்டங்களைக் கணிக்க?***

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| 30.06.2000ல் மூலதனம் | | 98000 |
| + பற்று – பொருள் | 200 | |
| - காசு | 400 | 600 |
| | | 98600 |
| - ஆரம்பமூலதனம் | 65000 | |
| மேலதிக மூலதனம் | 45000 | (110000) |
| ஆண்டிற்கான நட்டம் | | (11400) |

## நிறைவில் பதிவுகளிலிருந்து இறுதிக் கணக்குகள் தயாரித்தல்

இம்முறையில் பூரண இரட்டைப்பதிவு முறையைப்போல் பரீட்சைமீதி தயாரித்து விளக்கமாகச் செய்யமுடியாவிடினும் தரப்பட்ட தரவுகளுக்கமைய பூரண இரட்டைப்பதிவு முறையைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யமுடியும். நிறைவில் பதிவுகளிலிருந்து கணக்குகள் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்களை அவதானித்தல் வேண்டும்.

(1) இறுதிக்காசு, வங்கிமீதி தரப்படாத விடத்து காசேட்டைத் தயாரிப்பதன் மூலம் அதனை அறியலாம்.

(2) ஆரம்ப மூலதனம் தரப்படாதவிடத்து ஆரம்பச் சொத்துக்களையும் ஆரம்பப் பொறுப்புக்களையும் கொண்டு ஆரம்பமூலதனத்தை அறிந்து கொள்ள முடியும்.

(3) இலாபநட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட வேண்டிய செல-வினங்க்ள், வருமானங்கள் என்பவற்றின் தொகைகளை அறிவதற்கு காசேட்டிலுள்ள தொகைகளுடன் அட்டுறு, முற்பணங்களைச் சீராக்குதல் வேண்டும்.

(4) சில சமயங்களில் விற்பனை, கொள்வனவு என்பவற்றை அறிவதற்கோ, சிலசமயங்களில் கடன்பட்டோரிடம் பெற்ற காசு, கடன் கொடுநருக்கு கொடுத்தகாசு என்பவற்றையோ அறிந்து கொள்வதற்கும் முறையே மொத்தக் கடன்பட்டோர் கணக்கு, மொத்தக் கடன்கொடுநர் கணக்கு என்பவற்றை தயாரிக்க வேண்டி இருக்கும்.

(5) உட்திருப்பம், வெளித்திருப்பம், கொடுத்தகழிவு, பெற்றகழிவு, அறவிடமுடியாக்கடன் என்பன இருப்பின் அவை மொத்த கடன்பட்டோர் கணக்கு, மொத்த கடன்கொடுனர் கணக்கு என்பவற்றில் பதிவு செய்யப்படுவதுடன் வியாபார இலாப நட்டக்கணக்கிலும் பதிவு செய்யப்படும்.

(6) காசேட்டின் சுருக்கத்தில் இருந்து ஆண்டுக் காலத்தில் மேற்கொண்ட நிலையான சொத்துக் கொள்வனவு, நிலையான சொத்து விற்பனைமூலம் பெற்றகாசு என்பவற்றையும், ஆண்டுக் காலத்தில் கடன் பெறுவனவு, கடன் தீர்ப்பனவு போன்ற விடயங்களையும் அறிய முடியும். அத்துடன் ஆண்டுக் காலத்தில் காசாக செய்த மேலதிக மூலதனப் பங்களிப்பையும் அறிந்து கொள்ளமுடியும்.

(7) நிலையான சொத்துக்களுக்கு தேய்மானவீதம் தராத சந்தர்ப்பத்தில் ஆரம்ப சொத்துக்களின் பெறுமதிக்கும் இறுதிச் சொத்துக்களின் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் தேய்மானமாகக் கொள்ளப்படும்.

(8) இறுதிச் சொத்துக்களையும் இறுதிப் பொறுப்புக்களையும் கொண்டு இறுதி ஐந்தொகை தயாரிக்கப்படும்.

## ஒற்றைப் பதிவு முறையின் குறைபாடுகள்

1) பூரண இரட்டைப்பதிவு முறை பின்பற்றாமையால் எல்லா நடவடிக்கைகளுக்கும் பதிவு இருக்கும் எனக்கூறமுடியாது.

2) நிலுவைச் சமன்பாடு பிரித்தெடுக்கமுடியாது என்பதனால் எண்கணித செம்மையை நிரூபிக்க முடியாது இருப்பதுடன் பிழைகள், தவறுகள் வெளிக்காட்டமுடியாது இருத்தல்.

3) இறுதிக் கணக்குகளை தயாரிப்பதற்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருத்தல்.

4) இம்முறையில் இருந்து பெறப்படும் தகவல்களும், பெறுபேறுகளும் நம்பகத் தன்மை குறைவானதாக இருத்தல்

உதாரணம்: கோமுகன் தனது ஏடுகளை முழுமையாகப் பேணவில்லை. எனினும் 31.12.2000 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

1) 31.12.2000 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வங்கிக் கணக்கின் சுருக்கம் வருமாறு.

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1.1.2000 மீ/கீ/கொ/வ | 15750 | கடன்கொடுனர் | 49200 |
| கடன்பட்டோரிடம் பெறுவனவு | 74500 | வாடகை இறை | 1200 |
| 10% கடன் (1.7.2000) | 10000 | பற்று | 2000 |
| | | சில்லறைச் செலவு | 7500 |

| | | | |
|---|---|---|---|
| | | விளம்பரம் | 2000 |
| | | பிரயாணச்செலவு | 800 |
| | | எழுதுபொருள் | 500 |
| | | தளபாடம் | 5000 |
| | | கொள்வனவுச் செலவினம் | 1100 |
| | | சம்பளம் | 2450 |
| | | மீ/கீ/கொ/செ | 28700 |
| | 100250 | | 100250 |

2) ஆண்டுக் காலத்தில் கடன்பட்டோரிடம் பெற்ற தொகையில் பின்வரும் கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பின்னரே வங்கியிலிடப்பட்டது.

| | |
|---|---|
| கடன்கொடுனருக்கு | 850 |
| மின் கட்டணத்திற்கு | 1400 |
| சில்லறைச் செலவுக்கு | 350 |

3) நிறுவனத்தின் சொத்துக்கள் பொறுப்புக்களில் கீழ்வருவன அடங்கும்

| | 31.12.99 | 31.12.2000 |
|---|---|---|
| காசுமீதி | 900 | 1500 |
| தடபாடம் | 10000 | 14300 |
| மோட்டார் | 20000 | 18500 |
| இருப்பு | 5000 | பதிவு எதுவும் இல்லை |
| கடன்பட்டோர் | 20000 | 17500 |
| கடன்கொடுநர் | 7500 | 9600 |
| அட்டுறுமின் | 400 | 500 |

5) ஆண்டுக் காலத்தில் பெற்ற கழிவு 300 அனுமதித்த கழிவு 100

6) இந்நிறுவனமானது விற்பனையில் 25% மொத்த இலாபத்தைப் பெறுவது வழக்கம்

**தயாரிக்க:**

**31.12.2000 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் கணக்கு**

**31.12.2000 இல் ஐந்தொகை**

**செய்கை:**

i) விற்பனையைக் கணிப்பதற்கு மொத்தக் கடன்பட்டோர் கணக்கும், கொள்வனவைக் கணிப்பதற்கு மொத்தக் கடன்கொடுனர் கணக்கும் தயாரிக்க வேண்டும்.

ii) கடன்பட்டோரிடம் பெற்ற காசைக் கணிக்க. காசுக்கணக்கு தயாரிக்க வேண்டும்.

**காசுக்க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/கீ/கொ/வ | 900 | மின்கட்டணம் | 1400 |
| கடன்பட்டோர் | 77700 | கடன்கொடுனர் | 850 |
| | | சில்லறைச் செலவு | 350 |
| | | வங்கி | 74500 |
| | | மீ/கீ/கொ/செ | 1500 |
| | 78600 | | 78600 |

**மொத்தக்கடன்பட்டோர் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 20000 | காசு | 77700 |
| விற்பனை | 75300 | அனுமதித்த கழிவு | 100 |
| | | மீ/கீ/கொ/செ | 17500 |
| | 95300 | | 95300 |

**மொத்தக் கடன்கொடுனர் க/கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 850 | மீ/கீ/வ | 7300 |
| வங்கி | 49200 | கொள்வனவு | 52650 |
| பெற்றகழிவு | 300 | | |
| மீ/கீ/கொ/செ | 9600 | | |
| | 59950 | | 59950 |

iii) ஆரம்பச் சொத்துக்களில் இருந்து ஆரம்பப் பொறுப்புக்களைக் கழிப்பதன் மூலம் ஆரம்ப மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**1/1/2000 ல் சொத்துக்கள்**

| | |
|---|---|
| தளபாடம் | 10.000 |
| மோட்டார் | 20.000 |
| இருப்பு | 5.000 |

| | | |
|---|---|---|
| க.பட்டோா | 20.000 | |
| வங்கி | 15.750 | |
| காசு | 900 | 71650 |

**1.1.2000 இல் பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| கடன்கொடுனா் | 7300 | |
| அட்டுறுமின் | 400 | (7700) |
| மூலதனம் | | 63950 |

iv) விற்பனைக் கிரயக்கணிப்பு

$$\frac{75300 \times 75}{100} = 56475$$

v) மோட்டாா் தேய்வு 20000 – 18500 = 1500

vi) தளபாடத்தேய்வு (10000 + 5000) – 14300 = 700

**31.12.2000ல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக்கணக்கு**

| விபரம் | தொகை | தொகை | விபரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| 1.1.2000ல் இருப்பு | | 5000 | விற்பனை | | 75300 |
| கொ/வு | 52650 | | | | |
| + கொள்வனவுச் செலவினம் | 1100 | 53750 | | | |
| விற்கத்தயாரான சரக்கு | | 58750 | | | |
| (-) இறுதி இருப்பு | | (2275) | | | |
| விற்பனைக் கிரயம் | | 56475 | | | |
| மொத்தலாபம் மீ/செ | | 18825 | | | |
| | | 75300 | | | 75300 |
| நிலையச்செலவு | | | மொத்த லாபம் மீ/வ | | 18825 |
| வாடகை இறை | 1200 | | பெற்றகழிவு | | 300 |
| மின்கட்டணம் (1400 – 400 + 500) | 1500 | 2700 | | | |
| நிர்வாகச்செலவு | | | | | |
| சம்பளம் | 2450 | | | | |
| எழுதுபொருள் | 500 | | | | |
| பிரயாணச்செலவு | 800 | | | | |
| தளபாடத்தேய்வு | 700 | | | | |
| சில்லறைச்செலவு | 7650 | 12100 | | | |
| விற்பனைச்செலவு | | | | | |
| விளம்பரம் | 2000 | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொ.கழிவு | 100 | | | | |
| மோட்டார் தேய்வு | 1500 | 3600 | | | |
| நிதிசசெலவு | | | | | |
| வட்டி | | 500 | | | |
| தேறிய இலாபம் | | 225 | | | |
| | | 19125 | | | 19125 |

## 31.12.2000இல் உள்ளவாறான ஐந்தொகை

| பொறுப்பு | தொகை | தொகை | சொத்து | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| **மூதைனம்** | 63950 | | **நிலையான சொத்து** | | |
| **+ தேறியலாபம்** | 225 | | மோட்டார் | 18500 | |
| **(-) பற்று** | (2000) | 62175 | தளபாடம் | 14300 | 32800 |
| **நீண்டகாலக்கடன்** | | | | | |
| 10% கடன் | | 10000 | **நடப்புச்சொத்து** | | |
| **நடப்புக்கடன்** | | | இருப்பு | 2275 | |
| கடன்கொடுனர் | 9600 | | கடன்பட்டோர் | 17500 | |
| அட்டுறுமின் | 500 | | வங்கி | 28700 | |
| அட்டுறுவட்டி | 500 | 10600 | காசு | 1500 | 49975 |
| | | 82775 | | | 82775 |

# பெறுமானத் தேய்வுக் கணக்கீடு

செல்வி: லோ.ரமா
2000 வர்த்தகம்

நிலையான சொத்துக்களில் ஏற்படும் நிரந்தர பெறுமதிக் குறைவை பெறுமானத்தேய்வு என்பர். நிலையான சொத்தின் கிரயம் அல்லது வேறுமுறையில் மதிப்பிடப்பட்ட தொட்டுணரக்கூடிய மூலதன சொத்துக்களின் பெறுமதியில் இருந்து எச்சப் பெறுமானத்தைக் கழித்து வரும் தொகையை அதன் பயன்தரு ஆயுட்காலங்களுக்கு இடையில் ஏதேனும் ஒருமுறையில் பகிர்ந்தளிக்கின்ற கருமம் பெறுமானத்தேய்வு ஆகும். இச்செய்முறை ஒரு ஒதுக்கீடே அன்றி மதிப்பீடு அல்ல.

தேய்மான எண்ணக்கருவானது நிறுவன வருமான எண்ணக்கருவுடன் நெருங்கிய தொடர்புடையது வருமானத்தை உழைக்கும் செய்முறையின் ஒரு பகுதியாக சொத்துக்கள் பயன்படுவதால் அவை பெறுமானம் குறைகின்றன. இதன் மூலம் ஏற்படுகின்ற பெறுமானக் குறைவானது குறித்த காலத்தில் உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

## பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய சொத்துக்களின் பண்புகள்

i) உருவமுள்ளவையாக இருக்க வேண்டும்.
ii) நிறுவனத்தின் உற்பத்திக்காக அல்லது பண்டங்கள் சேவைகளை விநியோகிப்பதற்காக அல்லது மற்றவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக அல்லது நிர்வாகத் தேவைக்காகப் பயன்படும் சொத்துக்கள் மேலும் இவ்வாறான சொத்துக்களை பராமரிப்பதற்காகவும் திருத்துவதற்காகவும் வைத்திருக்கப்படும் சொத்துக்கள்
iii) நிரந்தர தேவைக்கு வைத்திருக்கப்படும் சொத்துக்கள்
iv) ஒரு நிதியாண்டுக்கு மேல் பயன்படுத்தப்படும் நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கட்டப்பட்டிருக்கும் சொத்துக்கள்
v) வரையறுக்கப்பட்ட பொருளியல் ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும்.

## பெறுமானத்தேய்வு செய்யும்போது கவனிக்க வேண்டியவை

i) பெறுமானத் தேய்வானது சொத்தின் பயன்தரு ஆயுட்காலங்களுக்கு இடையில் நியாயமான அளவில் பகிர்ந்தளிக்க வேண்டும்.

ii) பெறுமானத்தேய்வு கணிப்பீட்டு முறையில் நியாயமான காரணமின்றி மாற்றம் செய்யக்கூடாது.

iii) பெறுமானத் தேய்வுமுறை சொத்தின் தன்மை நிறுவனத்தின் பயன்பாடு என்பவற்றிற்கு ஏற்ப பொருத்தமாக அமைய வேண்டும்.

iv) பெறுமானத் தேய்வு தொகை உற்பத்தி இலாபநட்டக்கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

## பெறுமானத்தேய்வு செய்யமுடியாத சொத்துக்கள்

i) உருவமற்ற சொத்துக்கள் உ + ம் நன்மதிப்பு

ii) காடும் அதை ஒத்த மீள உருவாக்கக்கூடிய இயற்கை வளங்களும்

iii) ஆராட்சி அபிவிருத்தி மீதான செலவினங்கள்

iv) மீள உருவாக்க முடியாத வளங்களான கனியங்களின் அகழ்வு, உரிமை, இயற்கை வாயு, நிலநெய் என்பவற்றிற்கான செலவுகளின் மீதான தேய்வு

### பெறுமானத்தேய்வினை ஏற்படுத்தும காரணிகள்

1) *அருகல்:* பௌதீக ரீதியாக விரும்பப்படு தன்மையினால் ஒரு நிலையான சொத்துக்கு பெறுமதி ஏற்படுமிடத்து அவ்விரும்பப்படு தன்மையில் ஏற்படும் பௌதீக ரீதியான குறைவிற்கு ஏற்ப அந்நிலையான சொத்துக்கு தேய்வு ஏற்படுகின்றது.

   (உ + ம்) எண்ணெய், வளம்

2) *வழக்கிழப்பு:* புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப மாற்றங்கள் என்பவற்றால் குறிப்பிட்ட சொத்து நிறுவனத்தில் பயன்படுத்த முடியாது போதலை இது குறிக்கும்.

3) *பாவனை விரயம்:* சொத்துக்களை வியாபாரத்தில் அல்லது உற்பத்தியில் பயன்படுத்துவதால் அவற்றின் உதிரிப்பாகங்கள் தேய்வடைந்து உழைக்கும்திறன் குறைந்து போதலினால் பெறுமதியில் ஏற்படும் குறைவு

   (உ + ம்) மோட்டார், பொறி

4) *காலக்கழிவு:* குறித்த காலங்களின் முடிவின் அடிப்படையில் சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல் காலக்கழிவு எனப்படும். இங்கு குறித்த சொத்துப் பயன்படுத்தப்பட்டதா, இல்லையா என்பது முக்கியம் இல்லை. இத்தகைய பெறுமானத்தேய்வுமுறை சட்டரீதியாக உரிமை பெற்ற சொத்துக்களுக்கு ஏற்படும்.

   (உ + ம்) குத்தகையாதனம், ஆக்கவுரிமை

## பயன்தரு ஆயுட்காலம்

சொத்து ஒன்று நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் காலம் அல்லது நிறுவனத்தால் சொத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யலாம் என எதிர்பார்க்கும் அலகுகளின் எண்ணிக்கை பயன்படு பொருளியல் ஆயுட்காலம் எனப்படும். இது பின்வரும் காரணிகளால் தீர்மானிக்கப்படும்.

i) சட்டக் கட்டுப்பாடுகளினால் - குத்தகை ஆதனம்

ii) நுகர்வு அல்லது அகழ்வு மூலம் - சுரங்கம்

iii) பௌதீக ரீதியான அழிவு - இது சொத்தினை பயன்படுத்தும் அளவு, பழுதுபார்த்தல், பராமரித்தல், காலவிரயம் என்பவற்றில் தங்கியுள்ளது.

iv) தொழில்நுட்ப அல்லது பொருளியல் வழக்கிழப்பு – உற்பத்தி மாற்றம், நாகரீக மாற்றம், தொழில்நுட்ப முன்னேற்றம் போன்றன.

## இறுதிப் பெறுமதி

சொத்து ஒன்றின் பயன்படு ஆயுட்கால முடிவில் அகற்றுதலுக்கான செலவை கழித்த பின்னர் அச்சொத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படும் தேறிய தொகை இறுதிப் பெறுமதி எனப்படும்.

இது சொத்தினை பெற்றுக்கொண்ட திகதியில் மதிப்பிடப்படும். பயன்படு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றம், பணவீக்கத் தாக்கம் என்பவற்றால் இறுதிப்பெறுமதியில் ஏற்படும் மாற்றம் பொதுவாக கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. சொத்தின் கிரயத்துடன் ஒப்பிடும்போது இறுதிப் பெறுமதி பொருண்மை அற்றதாயின் அதனையும் கவனத்தில் எடுக்கவேண்டியதில்லை.

## காணியும் பெறுமானத் தேய்வும்

நடைமுறையில் காணியின் பெறுமதி குறைவடைவதில்லை என்பதாலும், காணிக்கு வரையறுக்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் இல்லை என்பதாலும் அனேகமாக காணிக்கு பெறுமானத்தேய்வு செய்வதில்லை. ஆயினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் காணிக்கு பெறுமானத்தேய்வு ஏற்படலாம்.

i) பௌதீக ரீதியான அகழ்வினால் பெறுமதி குறைவடைதல்

ii) காணியின் பெறுமதி சமூகரீதியான அமைவிடத் தன்மையினால் தீர்மானிக்கப்பட்டு அதில் ஏற்படும் பாதக மாற்றங்களினால்

iii) காணியில் இருக்கும் வளங்கள் பாதகமான முறையில் பாதிக்கப்படல்

iv) பொருளியல் ரீதியான வரையறுத்த ஆயுட்காலத்தைக் கொண்ட காணி

## கைத்தேறத்தக்க பெறுமதி

குறித்த சொத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் உழைக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் வருமானத்துடன் சொத்தின் இறுதிப் பெறுமதியினைக் கூட்டப் பெறப்படுவது கைத்தேறத்தக்க பெறுமதியாகும்.

இந்த கைத்தேறத்தக்க பெறுமதி சொத்தின் தேறிய பெறுமதியிலும் பார்க்க குறைவடையுமாயின் வித்தியாசம் இலாப நட்டக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படும்.
சொத்து ஒன்றின் வருடத்திற்கான பெறுமானத்தேய்வைத் தீர்மானிக்கும் காரணிகள்

i) கிரயம்

ii) இறுதிப் பெறுமதி

iii) பயன்படு ஆயுட்காலம்

iv) பயன்படுத்தப்படும் பெறுமானத்தேய்வு முறை

v) எச்சப்பெறுமதி

## பெறுமானத்தேய்வு கணிப்பீட்டு முறைகள்

**i) நேர்கோட்டு முறை:**

சொத்தின் கொள்விலையில் இருந்து எச்சப்பெறுமதியை கழித்து வரும் தொகையை அதன் பயன்படு ஆயுட்காலங்களிற்கு இடையில் சமமான தொகைகளாக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்தல் நேர்கோட்டு முறையாகும். இது பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\frac{\text{சொத்தின் கொள்விலை} - \text{எச்சப்பெறுமதி}}{\text{பயன்படு ஆயுட்காலம்}}$$

**2) ஒடுங்குபாகைமுறை :**

சொத்தினை கொள்வனவு செய்த வருடத்தில் கூடுதலாகவும் பின்னர் குறைவாகத் தேய்வு செய்தல் ஒழுங்கு பாகைமுறை எனப்படும். இதனைப் பின்வரும் வாய்ப்பாட்டின் மூலம் கணிக்கலாம்.

$$r = 1 - n\sqrt{\frac{S}{C}}$$

r – பெறுமானத்தேய்வு

n – பயன்படு ஆயுட்காலம்

s – எச்சப்பெறுமதி

c – சொத்தின்கிரயம்

**3) மறுபடி விலைமதித்தல் முறை:**

இதன்படி சொத்து குறிப்பிட்ட காலத்திற்கு ஒருதடவை பெரும்பாலும் நிதியாண்டு இறுதியில் மறுமதிப்பீடு செய்யப்படும். ஆரம்ப பெறுமதிக்கும் மறுமதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் பெறுமானத்தேய்வு ஆகும்.

**4) இயந்திரமணி முறை:**

ஒரு சொத்து அதன் பயன்தகு பொருளியல் ஆயுட்காலத்தில் எத்தனை மணி நேரம் இயங்கவல்லது என்பதினை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படும். இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{ஒரு மணிக்கான பெறுமானத்தேய்வு} = \frac{\text{கிரயம் } - \text{ எச்சப்பெறுமதி}}{\text{பயன்படும் என எதிர்பார்க்கப்படும் மணிகள்}}$$

**5) அலகுகளின் எண்ணிக்கை முறை:**

ஒரு சொத்தின் பயன்தகு பொருளியல் ஆயுட்காலத்திலே எத்தனை அலகுகள் வெளியீடு செய்யவல்லது என்பதை அடிப்படையாகக கொண்டு தேய்வு கணிக்கப்படும் இது பின்வருமாறு அமையும்.

$$\text{ஒரு அலகுக்கான பெறுமானத்தேய்வு} = \frac{\text{கிரயம் } - \text{ எச்சப்பெறுமதி}}{\text{மொத்த உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை}} \times \text{கியரம்}$$

**6) அருகல் முறை:**

சொத்தின் மொத்த வளத்தினை முன்கூட்டியே மதிப்பீடு செய்து ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வளம்பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதை அடிப்படையாக் கொண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படும் இது பின்வருமாறு அமையும்.

$$\text{பெறுமானத்தேய்வு} = \frac{\text{எடுக்கப்பட்ட வளம்}}{\text{மொத்த வளம்}} \times \text{கியரம்}$$

**7) நட்டஈட்டு ஒழுங்குப்பத்திர முறை:**

இம்முறைப்படி சொத்தின் ஆயுட்காலமுடிவில் சொத்தினை கொள்வனவு செய்வதற்காக காப்புறுதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்படும் அதற்காக காப்புறுதி நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தும் தொகையே பெறுமானத்தேய்வு ஆகும்.

**8) ஆண்டு இலக்க கூட்டுத்தொகை முறை:**

இம்முறையில் ஆண்டுகளின் இலக்கங்கள் நிறையாக்கப்பட்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படும்.

(உ + ம்) சொத்தின் கிரயம் 30000/-

பயனுறு ஆயுட்காலம் 5 வருடம்

| ஆண்டு | நிறை | தேய்மானம் |
|---|---|---|
| 1 | 5 | 10000 |
| 2 | 4 | 8000 |
| 3 | 3 | 6000 |
| 4 | 2 | 4000 |
| 5 | 1 | 2000 |
| | 15 | |

ஒரு நிறைக்கான தேய்வு = 30000 ÷ 15 = 2000/-

**பெறுமானத்தேய்வு சம்பந்தமாக நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்த வேண்டியவை**

i) பயன்படுத்தப்படும் பெறுமானத் தேய்வுமுறை

ii) சொத்தின் பயன்படு ஆயுட்காலம் / பெறுமானத்தேய்வு வீதம்

iii) ஆண்டுக்கான மொத்தத்தேய்வு

iv) பெறுமானத் தேய்வில் ஏற்பட்ட அசைவு.

v) பெறுமானத்தேய்வுமுறை, அல்லது பயன்படு ஆயுட்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

vi) சொத்துக்கள் மறுமதிப்பீடு பற்றிய விபரங்கள்


*உசாத்துணை நூல்கள்*

*i) S.L.A.S - 08*

*ii) Business Accounting I – Frank Wood*